பாரத தேவி

நிர்வாக ஆசிரியர் வ. ரா. | தனிப்பிரதி 2 அணு

மலர் 1 | ஞாயிறு 3-9-'39 | இதழ் 9

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
ஓர் விசேஷ அறிக்கை	... ...	2
ஏன் இந்த சீற்றம்?	... ...	3
லோக சஞ்சாரம்	... ...	7
குட்டி ஹிட்லர்!	... ...	10
சுபாஷ்—ஒரு சின்னம்	... ...	12
பரதேசத் தபால்	... ...	14
தலைஞான வரலாறு	... ...	17
யோசிக்காத குற்றம்!	... வ. ரா.	21
அகத்தியன் வைத்தியம்	... ...	25
கார்ட்டூன்	... ...	31
மஹாபலிபுரம் போனது	... சீதாபதி	35
கமலா	... சத்யவதி கௌட்	39
காசி யாத்திரை	... சதயம்	45
குறும் பதிலும்	கு. ப. ராஜகோபாலன்	49
வைத்திய கோவிந்தன்	... வரதன்	54
சுத்தப் பட்டிக்காடு!	... து. ராமமூர்த்தி	58
மூக்கைப் பிடி!	எம். கல்யாணராமன்	64
சட்டம் செல்லாது	அ. கி. ஜெயராமன்	66
ரேடியம் ராணி—மேரி கியூரி	... வெ. ம.	70
லக்கின குணநிசயங்கள்	... ...	75
பெரியோர் வாக்கு	... ...	78
கிட்டுவின் கட்டுரை	... "ரஞ்சனன்"	81
நட்சத்திர பலா பலன்கள்	... ...	87
திரை உலகம்	... ...	97
சாதனத்தையும் விடத் தயார்	... வி. பாலாம்பாள்	100
நிமிஷக் கதைகள்	... ...	101
பிணத்தின் சாவு!	... சிட்டி	103

ஓர் விசேஷ அறிக்கை

11-9-'39-ல் பாரதியார் தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு, ஆங்காங்கு கொண்டாடும் சங்கங்கள் பாரதியார் பாடல்கள் முதலிய போட்டிகள் அவசியம் நடத்துவார்கள் என்ற நம்பிக்கையுடன் இருக்கும் நாங்கள், போட்டியில் வெற்றி பெறும் அன்பர்களுக்கு, பரிசுகளாக, பாரதியாரின் நூல்களே வழங்கப்படும் எனக் கருதி, அந்தந்த சங்கங்களுக்கு மாத்திரம், விபரம் கிடைத்த பின்னர், அவர்கள் கோறும் நூல்களை, பாதி விலையில் கொடுப்பதாகத் தீர்மானித்துள்ளோம் என்பதை இதன் மூலமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அன்பர்கள் இதை ஏற்றுக் கொள்வார்களாக!

பாரதி பிரசுராலயம்,
திருவல்லிக்கேணி,
சென்னை.

ஏன் இந்த சீற்றம்?

ஸில்ஹெட் காங்கிரஸ் தலைவராக இருந்த, நமது மாகாணவாசி ஸ்ரீ எஸ். சீனிவாஸ அய்யங்காருக்கு மூக்குக்குமேல், கோபம் வந்துவிட்டது. அவர் இனிமேல், காங்கிரஸில் நாலணா அங்கத்தினராகக்கூட இருக்கப் போவதில்லையாம்! காங்கிரசின் சங்காத்தமே அவருக்கு வேண்டியதில்லையாம். காங்கிரசில் அவருக்கிருந்த எல்லாத் தொடர்புகளையும் அறுத்துக்கொண்டாராம்!

ஆனால், தாம் தேசத் தொண்டு செய்வதையும் விடுதலைப் பிரசாரம் செய்வதையும் அவர் நிறுத்தப் போவதில்லையாம்! காங்கிரசுக்கு வெளியே நின்று, காங்கிரசின் ஊழல்களை எடுத்துக் காட்டி, அவைகளைக் களைந்தெரிந்துவிட்டு, காங்கிரசை புனிதப் படுத்தி, அதை வலுத்தப்படுத்தப் போகிறாராம்.

காங்கிரசை விட்டு விலகி நின்று, நாட்டுக்கும் காங்கிரசுக்கும் சேவை செய்ய முடியும் என்பதற்கு காந்தி வழி காண்பித்திருக்கிறாராம். அந்த வழியை, அய்யங்கார் பின்பற்றப் போகிறாராம்! காந்திக்கு, அவ்வாறு தொண்டு செய்வது சாத்தியப் படுமானால், தமக்கும் சாத்தியப்படும் என்று அய்யங்கார் உறுதி கூறுகிறார்.

அய்யங்காருக்கு இவ்வளவு கோபமும் உறுதியும் சங்கற்பமும் ஏற்பட்டதற்கு காரணம் என்ன? பிரபல தேச பக்தரும் தலைவருமான ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் பேரில் காங்கிரஸ் காரியக் கமிட்டி, நடவடிக்கை எடுத்துக்கொண்டது ஒரு காரணம். காரியக் கமிட்டி, காங்கிரஸ் மந்திரிமார்களோடு அட்டை மாதிரி ஒட்டிக்கொண்டு, அவர்கள் செய்யும் குற்றங்களை மறைத்தும் ஆதரித்தும் வருகின்றது என்பது இரண்டாவது காரணம்.

இந்தியாவின் விடுதலைப்போரை, சரியான முறையில் காரிய கமிட்டிக்கு நடத்தத் தெரியவில்லை என்பது மூன்றாவது கார

ணம். விடுதலைப் போராட்டத்தில், மத உணர்ச்சியைக்கொண்டு புகுத்தக் கூடாது என்பது அய்யங்காரின் வாதம்.

அய்யங்கார், தமக்குத் தாமே சொந்தமாக யோசிக்கும் சக்தி படைத்தவர் என்பதை யாரும் ஆட்சேபிக்கமாட்டார்கள். அய்யங்கார் கடைந்தெடுத்த தேச பக்தர் என்பதிலும் சந்தேகம் கிடையாது. ஆனால், அவருடைய புதிய யோசனைகளும் திட்டங்களும் உற்பத்தியாவதன் மூலகாரணங்கள் என்ன?

அய்யங்காருக்கு, நேரு குடும்பத்தாரிடம் ஒருவகை வெறுப்பு. நமது பிரதம மந்திரி "புகைக் கண்ணடி" ஆச்சாரியாரிடம் அளவு கடந்த அவநம்பிக்கை. காந்தியின் அஹிம்சை வழியில், அய்யங்காருக்கு எல்லையில்லாத கோபம். ஆகவே அவர் எதைப் பேசினாலும், எப்படி யோசித்தாலும், அவைகளின் அடிப்படையில், "வெறுப்பு, அவநம்பிக்கை, கோபம்," இந்த மூன்று விசித்திரச் சேர்க்கைகளையும் காணலாம்.

ஸ்ரீ சுபாஷ் பாபுவின்பேரில் நடவடிக்கை எடுத்துக்கொண்டதற்காக, தாம் காங்கிரசினின்றும் விலகிக்கொண்டதாக அய்யங்கார் சொல்லுவதை நாம் அப்படியே, 'முழுசாக' ஒப்புக்கொள்ள முடியவில்லை. இது, ஒட்டகத்தின்பேரில் ஏறின கடைசித் துரும்பாக இருக்கலாம். "நேருவும் காந்தியும் ஆச்சாரியாரும் ஆட்சி நடத்தும் காங்கிரசிலேஎனக்கு என்ன வேலை" என்று அய்யங்கார் அடிக்கடி சொல்லுவார் என்பது வதந்தி.

அந்த வதந்தி, உண்மையானல், காங்கிரசை விட்டு அய்யங்கார் விலகிக்கொள்ளுவதற்கு, சுபாஷ் பாபுவின்பேரில் நடவடிக்கை எடுத்துக்கொண்டது முழுசான காரணமாக இருக்கமுடியாது.

ஸ்ரீ சுபாஷ் போஸின்பேரில் நடவடிக்கை எடுத்துக்கொண்டது மிகவும் பொருத்தமானது என்று காந்தி "ஹரிஜன்" பத்திரிகையில் விளக்கியிருக்கிருர். அதைக் காட்டிலும் விளக்கமாக யாரும் சொல்ல முடியாது. இருந்தாலும் மீண்டும் அதைப்பற்றி யோசித்துப் பார்ப்போம்.

ஒரு ஸ்தாபனத்தின் வல்லமையை எதிலே பார்க்க முடியும்? முதலில், அதன் இலட்சியத்தில். இரண்டாவதாக, அந்த இலட்சியத்தை அடைய அந்த ஸ்தாபனம் கையாளும் சாதனங்களில். மூன்ருவதாக அந்த ஸ்தாபனத்துக்குள்ளிருக்கும் கட்டுப்பாட்டிலே.

சென்ற பதினேழு பதினெட்டு வருஷங்களாக, இந்த மூன்று அம்சங்களிலும், வலுவான அபிப்பிராய பேதங்கள், காங்கிரஸ் காரர்களுக்குள் இருக்கவில்லை. சில்லறை மனஸ்தாபங்கள், அபிப் பிராய பேதங்களாக ஆக முடியுமா? ஆனால், அபேதவாதி களும், ராய் கட்சியாளர்களும் நாட்டில் தலை தூக்கினதும், அபிப் பிராய பேதங்கள் ஏற்பட்டன.

இந்தக் கட்சியில், சில்லறை மனத்தாங்கல்கள் உள்ளவர் களும் சேர்ந்துகொண்டு, தங்களுக்கும் காங்கிரசுக்கும் அபிப் பிராய பேதம் இருப்பதாக, பெருமையாகப் பேசிக்கொண்டார் கள்.

முதலிலே பூரண சுயராஜ்யம் என்றால் என்ன என்று விவா தம் செய்யத் தலைப்பட்டார்கள். இதை, யார் முன் கூட்டியே நிர்ணயிக்கமுடியும்? நாட்டு மக்கள், இங்கிலீஷ் ஏகாதிபத்தி யத்திலிருந்து விடுபட்ட பின்னர், இருக்கும் பக்குவத்தைப் பொறுத்து, பூரண சுயராஜ்யம் இன்னதென்று தெளிவுபடும்.

இரண்டாவதாக, அஹிம்சை வழி அர்த்த மில்லாத வழி என்று குதர்க்கம் செய்தார்கள். இவர்களுடைய மனதை எப் படித் திருப்ப முடியும்? சரித்திரத்தில், அஹிம்சை வழிக்கு ஆதாரமிருக்கிறதா என்று வம்பு பேசத் துவக்கினால், அதற்கு சமாதானம், எப்படிச் சொல்ல முடியும்? மின்சாரத்தை ஒருவன் கண்டு பிடிக்கிறான் என்று வைத்துக் கொள்ளுவோம். அதைக் கண்டு பிடிப்பதற்கு, விஞ்ஞான சாஸ்திரத்தில், ஏற்கனவே, ஏதேனும் குறிப்பு இருக்கிறதா என்று கேட்பது அசட்டுத் தன மல்லவா?

புதிய அறிவுக்கு பழைய அறிவுத் திட்டத்தில் மேற் கோளும் குறிப்பும் பார்ப்பது வடிக்கட்டின முட்டாள்தனமாகும்.

மூன்றாவதாக, பிரஜா உரிமை என்று டம்பம் பேசிக் கொண்டு, சில்லறைப் பேர்வழிகள் எல்லாம், "தங்களுக்கும் காங்கிரசுக்கும் அபிப்பிராய பேதம்" என்று வாய்த் துடுக்காக பேச ஆரம்பித்து விட்டார்கள். இந்த விபரீதத்தினால், காங்கிர சின் கட்டுப்பாடு, சிறிது சிறிதாக, தளர ஆரம்பித்து விட்டது.

ஒரு ஸ்தாபனத்துக்கு, கட்டுப்பாடு என்பது உறுதியாகக் கட்டி பிடித்துக்கொண்டிருக்கும் சாந்தைப்போல. அந்த கெட் டியான சாந்து, உலர்ந்து காய்ந்துபோன சுண்ணாம்பு மாதிரி ஆகி

விட்டால், கட்டிடம் உருப்படியாக இருக்குமா? கட்டுப்பாடு என்ற சாந்தை, உலர்ந்த சுண்ணாம்பாக அடிக்கப் பார்க்கிறார்கள் பல காங்கிரஸ்வாதிகள். அவர்கள், தாங்கள் செய்யும் காரியத்தின் விபரீதத்தைத் தெரிந்து கொள்ளவேயில்லை.

இங்கிலீஷ் ஏகாதிபத்தியத்துடன் போராட்டம் செய்யும் ஸ்தாபனமாகவே, காங்கிரஸ் இருக்கவில்லை என்று வைத்துக் கொண்டாலும், காங்கிரசுக்குள் கட்டுப்பாடு வேண்டாமா?

கட்டுப்பாடு என்பது என்ன? பெரியார்கள் சிலர் சொல்லுவதை, மற்றவர்கள் கேட்க வேண்டும். இல்லாவிட்டால், ஜனநாயகம், பிரஜா உரிமை என்று கூத்தாடிக்கொண்டு, "தன்தலை நாட்டாண்மை" செய்ய எல்லாரும் ஆரம்பித்து விட்டால், கட்டுப்பாடு என்பது காற்றில் பறந்து போய்விடும்.

ஆகவே, கட்டுப்பாட்டைக் குலைக்கும் யார் பேரிலும் நடவடிக்கை எடுத்துக் கொண்டால், அது குற்றமாகாது. நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது, காந்தி எழுதியிருப்பது போல, கடமையாகும்.

அய்யங்கார், தம்மை காந்தியோடு ஒப்பிட்டுக்கொண்டு, பேசியிருப்பது அவ்வளவு அழகாயில்லை, ஏன்? காந்திக்குப் பொறுமை கிடையாது. காந்திக்கு யாரும் பகைவன் கிடையாது. அப்படியிருப்பினும், காந்தியின் பேரில் ஒரு துரும்புகூட விழப்படாது என்று அவருடைய எதிரிகள் கூட, கடவுளைத் துதிப்பார்கள். காந்தி சாந்த மூர்த்தி. காந்தி கருணைக் கடல்.

காந்தி தமது உயிரைத் துரும்பாக மதித்துக் காரியம் செய்பவர். காந்தி கர்ம யோகி. அய்யங்கார், இவைகளுக் கெல்லாம் எதிரிடை என்று சொல்ல நாம் விரும்பவில்லை. அய்யங்கார் கூரிய அறிவு படைத்தவர். நல்ல சித்தம் படைத்தவர். கொடையாளி. இருந்தாலும் அய்யங்கார், தம்மை, காந்தி யென்று எண்ணிக் கொள்ளுவாரானால், அது பாபமாகும்.

அய்யங்காரின் கோபம் அர்த்தமில்லாத கோபம். அவர் செய்யப்போகும் தொண்டை நாடு வரவேற்குமா என்பது சந்தேகம். காங்கிரசுக்கு விரோதமாக அவர் பிரசாரம் செய்யத் துணிந்தால், அது தொண்டாகாது; அது துரோகமாகும்.

லோக சஞ்சாரம்

என்ன செய்தார்கள்?

காங்கிரஸ் பிரதம மந்திரிகள் பூனா நகரத்தில் கூடிக் கலந்து விட்டார்கள். அவர்கள் என்ன முடிவுக்கு வந்தார்கள் என்பது மட்டும் பரம ரகசியமாயிருக்கிறது. உலக நெருக்கடியைப் பற்றி, அவர்கள் தீவிரமாக யோசித்ததாகச் சொல்லப்படுகிறது.

அதைப்பற்றி அவர்கள் என்ன யோசித்தார்கள் என்பதும் தெரியவில்லை. இங்கிலீஷ் ஏகாதிபத்தியம், இந்தியாவுக்கு சம்பந்தமில்லாத போரில் இறங்குமாகில், அப்பொழுது பிரதம மந்திரிகள் என்ன செய்யப் போகிறார்கள்? காரியக்கமிட்டியின் தீர்மானம் தெளிவாயிருக்கிறது. இந்தியாவுக்கு சம்பந்தமில்லாத போரில், இந்தியா விருப்புடன் கலந்து கொள்ளாது.

இதை, அமுலுக்குக் கொண்டு வரக்கூடிய வழிகளைப்பற்றிப் பிரதம மந்திரிகள், நன்றாக யோசித்திருப்பார்கள் என்று நம்புகிறோம். ஜனநாயகத்தை ஆதரிக்கும் நாடுகளுக்கு இந்தியா ஒத்தாசை செய்யலாம் என்று வழவழத் தீர்மானம் எதையும், அவர்கள் செய்திருக்கமாட்டார்கள் என்றும் நினைக்கிறோம்.

கவர்னர்கள்

மாகாண கவர்னர்களுடன், நேரே இந்திய மந்திரி பேசுவதாகவும் மந்திரிமார்களுக்கு இன்ன தகவல் என்று தெரியாது என்றும் கடைத்தெரு வதந்தி ஒன்று உலவுகின்றது. இந்த வதந்தி எவ்வளவு தூரம் உண்மை என்று தெரியவில்லை.

மாகாண சுயாட்சியை, பொம்மைக் கொலு மாதிரி செய்துவிட, இந்திய மந்திரி எண்ணங் கொண்டால், அது பொறுக்க முடியாத சம்பவமாகும். நெருக்கடி என்ற சாக்கை வைத்துக் கொண்டு, இந்திய சீர்திருத்த சட்டத்தை ஒன்றுமில்லாமல் அடிக்கும் வித்தைக்கு, காங்கிரஸ் மந்திரிமார்கள் உடந்தையாக இருக்கவேண்டுமென்பதுண்டா?

மகிழ்ச்சிக்குரியது

சென்ற சில மாதங்களாக, லக்ஷ்மணபுரி நகரில் ஷியா முஸ்லீம்களுக்கும் ஸுன்னி முஸ்லீம்களுக்கும், குர்ஆன் ஓதும் விஷயமாக தகராறு ஏற்பட்டது மிகவும் விசனிக்கத் தக்க விஷயமாகும்.

இந்தத் தகராறில் ஐக்கிய மாகாண காங்கிரஸ் மந்திரிமார்கள் பட்ச பாதமில்லாமல் நடந்து கொள்ள வில்லை என்று சில விஷமிகள் அவர்கள் பேரில் பழி சுமத்தப் பார்த்தார்கள்.

அரசாங்கம் இந்த மாதிரி தக ராறுகளில் தலையிட்டுக்கொள்வது உசிதமல்ல என்பது நெடுங்காலத் திய அனுபவமாகும். பொதுஜன அமைதியைக் காப்பது ஒன்றைத் தான் அரசாங்கம், தற்போதைய நிலைமையில் தனது கடமையாகக் கொள்ள முடியும். ஆகவே அவர் கள் சட்டமறுப்புச் செய்த முஸ் லீம்களையும் கலவரம் செய்த முஸ்லீம்களையும் பாராட்ட முடி யுமா? அவர்கள் பேரில் நட வடிக்கை எடுத்துக் கொள்ளாமல் போனால், பொதுஜன அமை தியைக் காற்றில் பறக்க விட்டு விட வேண்டியதுதான்.

ஆனால் மௌலானா அபுல்கலாம் ஆஸாத் அவர்களுடைய சலிப்பில் லாத முயற்சியினால் ஷியாக்களும் ஸுன்னிகளும் அபிப்பிராய பேதம் தீர்ந்து, பொது ஜன அமைதியைக் காக்கும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டது என்று ஒரு செய்தி சொல்லுகிறது. மௌலானா அவர்களின் நன் முயற்சியை நாம் உள்ளன்போடு பாராட்டுகிறோம். இந்தியாவின் ஒற்றுமையிலும் பெருமை வாழ் விலும் நம்பிக்கை கொண்ட மௌலானாவைப் போன்ற உத்த மர்கள் மூலமாகத்தான் இப்பேர்ப் பட்ட தகராறுகள் தீர முடியும். ஓய்வில்லாமல் வகுப்புவாத கோஷம் செய்பவர்களால் பிளவு தான் அதிகரிக்கும்.

விபரீதமான முடிவு

முஸ்லீம் லீகார் கூடினார்கள். அவர்கள் உலக நெருக்கடியைப் பற்றி யோசித்தார்கள், யோசித் ததின் பயனென்ன? யுத்தம் நேர்ந்தால் அப்பொழுது என்ன செய்கிறது என்று முடிவு செய்து கொள்ளலாமென்றும், அதற்கு முன் ஏனைய முஸ்லீம் நாடுகளைக் கலந்து கொள்ள வேண்டுமென் றும், முஸ்லீம் லீகில் முடிவு செய் தார்களாம்.

யுத்தம் வந்த பிறகு இவர்கள் என்ன செய்ய வேண்டுமென் பதைப்பற்றி முடிவு செய்வதில் யாருக்கும் ஆட்சேபனை இருக் காது. ஆனால் மற்ற முஸ்லீம் நாடுகளை கலக்க வேண்டும் என்று செய்த யோசனை விபரீதமானது என்பதே நமது கருத்து. இப் பொழுது நேரக்கூடிய போர், நாடுகள் சம்பந்தமான போர். வியாபார சம்பந்தமான போர். மத சம்பந்தமான போர் அல்ல. ஆகவே இந்திய முஸ்லீம் கள் ஏனைய முஸ்லீம் நாடுகளைக் கலந்து கொள்ளவேண்டும் என்று முஸ்லீம் லீக் யோசனை கூறுவது மிகவும் தவறான யோசனையா கும்.

இந்தியாவில் வசிக்கும் ஜனங் கள் தான் இந்தியாவின் தலை எழுத்துக்கு எஜமானர்கள்; இங்கி லாந்தில் வசிக்கும் இங்கிலீஷ் காரர்கள் அல்ல. மற்ற நாடுகளில் வசிக்கும் முஸ்லீம்களும் அல்ல. ஆகவே முஸ்லீம் லீகின் முடிவை துரோக காரியமென்று சொன்ன லும், அது ஒருவாறு பொருத்த முள்ளதாகும்.

ஏன் மாறுதல் ?

ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டதும், ஜப்பானிய மந்திரி சபை ராஜினமா செய்துவிட்டது. இதற்குச் சரியான காரணம் தெரியவில்லை. ஆனால் ஊகங்கள் பல செய்யலாம். ஜெர்மனி ருஷ்யாவோடு சேர்ந்து கொண்டு ஜப்பானை கைவிட்டு விட்டதாக ஜப்பானிய மந்திரி சபை அபிப்பிராயப்படலாம். இதுவரையிலும் ஜெர்மனியை ஜாப்பானுடைய நண்பனுக பாவித்தது தங்கள் தவறென்று கொண்டு மந்திரிசபை ராஜினமா செய்திருக்கலாம்.

மேலும் பிரிட்டிஷார் யுத்த முஸ்தீபோடு, போருக்குத் தயாராகக் காத்துக்கொண் டிருக்கிறார்கள். ஆகவே சீனவில் இனி எவ்விதமாக நடந்து கொள்ளவேண்டும் என்பதைப்பற்றி தெளிவாக யோசனையைச் செய்ய முடியாமல், மந்திரி சபை ராஜினமா செய்திருக்கலாம். காரணம் எதுவாக இருந்தாலும், சீன—ஜப்பானிய போர்த்திட்டத்தில் கூடியசீக்கிரத்தில் மாறுதல் ஏற்படலாம் என்று நம்ப இடமிருக்கிறது.

குட்டி ஹிட்லர்!

'ஹெர் பார்ஸ்டர் டான்சிக்கின் தலைவராக நியமிக்கப் பட்டிருக்கிறார்' என்று ஒரு ஜெர்மன் உத்தியோகப் பற்றுள்ள அறிக்கை சில தினங்களுக்கு முன் வெளிவந்ததே! இந்த ஹெர் பார்ஸ்டர் யார், அவருடைய பூர்வீக விருத்தாந்தம் என்ன என்பதைப்பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்வது இப்போதைய சர்வ தேச நெருக்கடி சந்தர்ப்பத்திற்குக் கொஞ்சம் அவசியம் அல்லவா?

'டான்சிக்காரர்களாகிய நாங்கள் எங்கள் வீட்டிற்குப் போய்ச் சேரவேண்டும். ஜெர்மனிதான் எங்கள் வீடு' என்று அடிக்கொருதரம் சிம்ம கர்ஜனை செய்யும் இந்த பார்ஸ்டர் டான்சிக்கிலேயே பிறந்து வளர்ந்தவராகத் தான் இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருப்பீர்கள்.

அது தான் இல்லை!

அவர் ஒரு வாலிப நாஜி. 1930-ல் ஹிட்லரால் டான்சிக்குக்கு அனுப்பப்பட்டவர். அப்போது டான்சிக் நாஜி கட்சி ஒரு உருவில்லாமல் கட்டுப்பாடு இல்லாத நிலையில் இருந்தது. அதை உருவாக்கி பலப்படுத்தும் வேலை தான் முதல் முதலாக அவருக்குக் கொடுக்கப்பட்டது.

படிப்படியாக டான்சிக்கை ஒரு நாஜி ஆதிக்கம் கொண்ட இடமாக ஏற்படுத்துவதில் வெற்றிப் பெற்று விட்டார் ஹெர் பார்ஸ்டர். அவருக்கு இப்போது வயது முப்பத்தேழுதான் ஆகிறது.

அநேகமாக பிரபல நாஜி தலைவர்கள் பலர் சிறைவாசம் அனுபவித்தவர்கள். ஹெர் பார்ஸ்டருக்கு அந்த அதிருஷ்டமோ, துரதிர்ஷ்டமோ இல்லை. அவர் தந்தை ஜெர்மனியில் நியூரம்பர்க் பக்கத்து ஊரின் ஒரு சிறைக்குக் கவர்னராக இருந்தவர்.

நியூரம்பர்க்கில் உள்ள ஒரு யூத த்வேஷியும், பத்திரிகை ஆசிரியரும் சொந்தக்காரருமான ஒருவரோடுதான் அவருக்கு முதல் பரிச்சயம். அப்போது அவருக்கு வயது இருபதுக்குள் இருக்கும். அந்தப் பத்திரிகை ஆசிரியனால் பத்திரிகைக்கு விளம்பர இலாகா வேலை ஒன்று அவருக்கு கொடுக்கப்பட்டது.

அந்த வேலையில் அவருக்கு பணமும் அதிகம் கிடைக்கவில்லை. அவருக்கு பிடித்தமாகவும் இல்லை. அவ்வளவுதான். நாஜி பித்து பிடித்து, ராஜீயத் துறையில் வேலை செய்வதற்கு அவருக்கு நிறைய சந்தர்ப்பம் கிடைத்தது. இது ஹிட்லர் அதிகாரத்துக்கு வருவதற்கு பத்து வருஷங்களுக்கு முந்தி.

பார்ஸ்டர் ஒரு லக்ஷிய 'குட்டி ஹிட்லர்.' அவர் ஹிட்லரைப் போல நடப்பது மட்டும் இல்லை. ஹிட்லரைப் போலவே, அதே

கொனஷ்டைகளுடன் பேசுகிறார். என்னென்ன சொல்ல வேண்டும், என்று ஹிட்லர் சொல்லுகிறாரோ, அதை எல்லாம் நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுகிறார்.

முதல் தடவை அவர் ஹிட்லரைச் சந்தித்தபோது, ஹிட்லரின் பார்வை அவர்மீது ரொம்ப கூர்மையாக வந்து விழுந்ததாம். கையைப் பிடித்து அமிழ்த்தினாராம். ஏதோ வார்த்தைகள் சொன்னாராம். ஆனால் அப்போது அவருக்கு ஏற்பட்ட உற்சாகத்தில், உள்ளக்கிளர்ச்சியில் அவர் என்ன சொன்னாரென்றே அவருக்கு ஞாபகம் இல்லையாம்!

ஆனால் ஹிட்லர் அவரை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, டான்சிக் வேலையை அவரிடம் ஒப்படைத்தாராம். அதன் பிறகு தான் அவர் டான்சிக்கிற்கு வந்து சேர்ந்தார்.

பார்ஸ்டர் இப்போது ஒரு நாஜி ஜில்லாத் தலைவர். ஜெர்மன் பார்லிமெண்ட் மெம்பர்; இன்னும் பல பதவிகள் உண்டு. டான்சிக் சுதந்திர நகரின் பிரபல நாஜி பத்திரிகை ஒன்றிற்கு சொந்தக்காரர்.

நன்றாக சண்டை போடுபவர் என்று ஒருவரைப்பற்றிச் சொல்கிறோமே, அந்தக்குணமெல்லாம் இவருக்கு உண்டு. டான்சிக்கில் அநேகம் பேர்களை ஒப்பேற்றிவிட்டு இவர் முன்னுக்கு வந்தவர்.

இந்தப் பார்ஸ்டருக்குத் தானாக ஏதாவது யோசித்துச் செய்யக் கூடிய சக்தி கிடையாது. நாஜி திட்டம் என்ன சொல்லுகிறதோ, அதை அப்படியே பின்பற்றுபவர். முன்பு போலந்துக்கு எவ்வளவு அதிகமாக தனது விசுவாசத்தை அழுத்தமாக தெரிவித்துக்கொண்டிருந்தாரோ, அவ்வளவு அதிகமாக இப்போது அவர் அதை அவமதிக்கிறார்.

1935-ல் ஒரு நாஜி பத்திரிகையில் 'தற்போதிருக்கும் ஒப்பந்தப்படிதான் டான்சிக் நிலைமை மாறாமல் இருக்க விரும்புகிறது என்றும் 1937-ல் போலந்திடம் தான் காட்டவேண்டிய கடமை டான்சிக்குக்குத் தெரியும் என்றும் எழுதினாராம்!

பார்ஸ்டர் பணக்காரர். ஜெர்மன் கைத்தொழில் விஷயங்களில் நம்பிக்கை ஏற்படுத்திக்கொண்டிருக்கும் சில நாஜித் தலைவர்களில் அவர் ஒருவர். அதற்காக அவர் எவ்வளவோ செய்திருக்கிறார்.

இவரைப்பற்றி முன்பு அதிகமாக யாருக்கும் தெரியாது. ஹிண்டன்பர்க் ஜெர்மன் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, அவர் பிரமாதமாக அதை எதிர்த்தபோதுதான் அவர் பெயர் பிராபல்யத்துக்கு வந்தது. இப்போது ஹிட்லர் டான்சிக்கைப் போலிந்திடமிருந்து ஸ்வீகரித்துக்கொள்வதற்கு, சிறந்த கையுதவியாக இருக்கிறார் இந்தக் குட்டி ஹிட்லர்!

சுபாஷ் ஒரு சின்னம்

சுபாஷ் சந்திர போஸ் சென்னை வரப்போகிறார். "எங்கும் சுவரொட்டிகளும் பிரசுரங்களுமாக "இந்தியாவின் முடிசூடா மன்னன்'' வின் விஜயத்தைப் பற்றி பிரஸ்தாபமாக இருக்கிறது.

சுபாஷ் சந்திரபோஸ் நாட்டிற்காக எவ்வளவோ தியாகங்கள் செய்திருக்கிறார். எனவே, பலர் அவரை உற்சாகமாக வரவேற்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. அதிலும் இளைஞராக இருப்பதால், வாலிபப்பருவத்தின் ஆதர்ச விக்கிரகமாகவும் இருக்கிறார். ஆகையால் முக்கியமாக வாலிபர்களின் மனதைக் கவரும் மூர்த்தி அவருடையது.

ஆனால் அவர் தற்சமயம் பிரபல்ய மடைவதில் ஒரு விசேஷம் இருக்கிறது. இப்பொழுது நாட்டில் அவருக்கு ஓரளவு செல்வாக்கு ஏற்படுவது ஒரு மனப்பான்மையின் அறிகுறி. அந்தச் செல்வாக்கு அவருடைய மூர்த்தியின் மகிமையால் மட்டும் ஏற்பட்டதல்ல. அதாவது அது அவருக்காக ஏற்பட்டதல்ல; அவருடைய எதிர்ப்புக்காக ஏற்பட்டது.

ஆமாம். இன்று காந்தீயத்தை எதிர்க்கிறார் என்பதால்தான், சுபாஷ் சந்திரபோஸுக்கு இவ்வளவு மதிப்பு. மக்கள் சுபாஷ் சந்திரபோஸின் பார்வர்ட் பிளாக்கிலோ, அவருடைய ஒப்பற்ற தலைமை சக்தியிலோ மயங்கி, அவரை ஆதரிக்கவில்லை அவ்வளவாக. காந்தீயத்தை எதிர்த்து நிற்கும் ஒரு சின்னம் என்பதற்காகத்தான் அவருடைய பேச்சுக்கு இன்று செலாவணி.

அவருடைய எதிர்ப்பின் அர்த்தம் என்ன? அது உண்மையாகக் காரியக்கமிட்டியைத் தாக்கும் எதிர்ப்பல்ல; காந்திஜியைத் தாக்கும் எதிர்ப்புங்கூட அல்ல. சுபாஷ் சந்திரபோஸ் இப்பொழுதுதான் முதல் முதலாக காங்கிரஸ்காரர்களிடையே தைரியமாக முன்வந்து காந்தீயத்தை தாக்குகிறார். அதன்மேல் அதிருப்தி இதுவரை காங்கிரஸ்காரர்கள் பலருக்கு உள்ளூர இருந்தது. ஆனால் முன்வந்து சொல்ல யாருக்கும் தைரியமில்லை; அபேதவாதிகள்கூட வாய்திறக்கவில்லை இதுவரையில்.

சத்தியமும் அஹிம்சையும், ஒரு வாழ்க்கைத் தத்துவமாக ஆகக் கூடும் என்று தனக்கு நம்பிக்கை இல்லை என்று சுபாஷ் சந்திர போஸ் வியக்தமாகச் சொல்லியிருக்கிறார். காந்தீயத்தின் அடிப்படைக் கொள்கைகளான இவற்றிலும் எளிமையிலும் ஆடம்பரமின்மையிலும் போஸைப்போல இப்போது மனப்பான்மை

கொண்டவர்களுக்கு நம்பிக்கை இல்லை என்பது அவருடைய பேச்சுகளிலும் எழுத்துகளிலு மிருந்து வெட்ட வெளிச்சமாகி றது.

"ஆறுமாத எச்சரிக்கை" போன்ற ஆர்ப்பாட்டங்களிலும், தடபுடலான பேச்சுகளிலும், எதிர்ப்புணர்ச்சிக்கு மிதமிஞ்சிய அதிருப்தி ஊட்டுவதிலும்தான் இவர்களுக்கு நம்பிக்கை. காங்கிர ஸின் நிர்மாண திட்டம் சுத்த அசட்டு திட்டம் என்பது இவர் கள் கொள்கை. அதில் தீவிரம் இல்லை என்பது இவர்கள் துணிவு. காந்தீயத்தில் உணர்ச்சிப் பெருக் குக்கும் வேகத்திற்கும் இட மில்லை என்பது இவர்கள் தீர் மானம். சமயோசிதத்தில் சந்தர்ப் பத்தை எப்படியாவது பயன் படுத்திக் கொண்டு வெற்றி கொள்ளலாம் என்பது இவர்கள் கொள்கை. காந்தீயத்தில் இதற் கெல்லாம் இடமில்லைதான்.

உதாரணமாக, தீவிரவாதிகள் எல்லோரும் பிரிட்டனின் யுத்த நெருக்கடி நிலைமையைப் பயன் படுத்திக்கொண்டு, நாம் இந்த சமயத்தில் கிளர்ச்சி செய்து விடு தலை பெறவேண்டும்என்கிறார்கள். காந்திஜி அப்பேர்ப்பட்ட விடுதலை வேண்டாம் என்கிறார். பகை வனின் பலவீனத்தைப் பயன் படுத்திக்கொள்வது சத்தியாக் கிரகத் தத்துவத்திற்கு விரோ தம்.

எனவே, சுபாஷின் எதிர்ப்பு, கொள்கையின் எதிர்ப்பு; அத னால்தான் அவருக்கு இவ்வளவு மதிப்பு. பகட்டிலும், ஆடம்பரத் திலும், சுக வாழ்விலும், லௌ கிக ஞானம், என்பதிலும் ஈடு பட்டவர்கள் தங்கள் உள்ளங் களில் இருந்த எதிர்ப்பிற்கு போஸ் உருக்கொடுத்துவிட்டதற் காக அவரைப் போற்றுகிறார்கள்.

முக்கியமாக நவ நாகரிகத்தில் முழுகித் திளைக்கும் வாலிபர் களுக்கு சுபாஷின் போக்கு மிக வும் பிடித்தமாக இருக்கும். அவர்களுடைய வாழ்க்கைக் கொள்கையிலிருந்து பிறந்த தீர் மானம் அது; கலையும் விஞ்ஞான மும் அளித்த அறிவின் ஆராய்ச்சிகளுடைய முடிவு, அவர் கள் மனது சென்றவரையில்.

எனவே இப்பொழுதுதான் காந்தீயத்திற்கு உண்மையான சோதனைக் காலம். ஏனெனில், காந்தீயத்தில் பற்றுள்ளவர்களே பலர் அதன் மூலாதாரக்கொள்கை கள் சிலவற்றில் தடுமாற்ற புத்தி கொண்டிருக்கிறார்கள். அதனால் தான் காந்திஜி "யார் எப்படிப் போனாலும் சரி, நான் என் தனிப் பாதையில் தனியாகக் கலப்பைப் பிடித்துத் தானகவேண்டும்" என் கிறார்.



பரதேசத் தபால்

ஓட்டல்கார அண்ணன்களுக்கு,

இருபத்தைந்து வருஷம் சர்க்கார் உத்தியோகத்தில் இருந்தால், பென்ஷன் பெறுவதற்கு ஒருவர் தகுதியுள்ளவராகிறார் என்பது அரசாங்க நியதி. இருபத்தைந்து வருஷம், விடாமல் ஓட்டல் சாப்பாடு சாப்பிடுகிறவர்களுக்கு, என்ன செய்கிறது என்பது கேள்வி.

இருபத்தைந்து வருஷம் அலுப்பு சலிப்பில்லாமல் ஓட்டலில் சாப்பிட்ட வீரர்களில் நான் ஒருவன். ஆகவே, உங்களிடம் எனக்கு எவ்வளவு பக்தியும் அன்பும் இருக்கின்றன என்பதற்கு வேறு எந்த அத்தாட்சியும் தேவை இல்லை யல்லவா? உங்களைப்பற்றி, உலகத்தில் சொல்லிக்கொள்ளுவது, உங்கள் காதில் அறை குறையாக விழுந்திருக்கும். நான், கூடுமான வரையில், பூரணமாகச் சொல்லுகிறேன்.

ஒரு நாள், என் நண்பர் ஒருவர் வீட்டுக்கு, காபி குடிக்கப் போயிருந்தேன். நண்பர் பிரமாதமாக பீடிகை போட்டுக்கொண்டு, பேசத் தொடங்கி விட்டார். "ஸார்! இது ஓட்டல் காபி இல்லை. இது வீட்டுக் காபி. தாராளமாகச் சாப்பிடுங்கள். இந்த காபியிலே ருசி யிருக்கும்" என்று பிரசங்கம் செய்தார்.

எனக்கா ஆத்திரம்! "ஓட்டல் காபியில் ருசியில்லை என்று சொல்லவாவது? நான் அதில் தானே வளர்ந்தவன்" என்றேன். "அதனால்தான், உம்முடைய நாக்குக்கு, ருசியில்லாமல் போய்விட்டது. ஓட்டல் காபி அவ்வளவும் சீயக்காய்த் 'தண்ணி'" என்று மேலும், அவர் பிரசங்கம் செய்யத் துவக்கிவிட்டார்.

"இது அபாண்டமான பழி. நீர் சொல்லுகிறது மாதிரி, ஓட்டல் காபி சீயக்காய்த் தண்ணியாக இருந்தால், அங்கே ஒருத்தரும் போக மாட்டார்களே? ஒரு ஓட்டலும் இருக்காதே" என்றேன்.

"பட்டண வாழ்விலே, ஓட்டலைத் தவிர, வேறு விதி ஏது? அதனாலேதான் சீயக்காய்த் தண்ணியானாலும் சரி, சாக்கடைத் தண்ணியானாலும் சரி, குடித்துவிட்டு, ஏப்பம் விட்டுக்கொண்டு, வயிற்றுப் பொருமலை வரவழைத்துக் கொள்ளுகிறார்கள்" என்று நண்பர் சிறிது ஆத்திரத்தோடு பேசினார்.

ஓட்டல் அன்னத்தைச் சாப்பிட்டு வளர்ந்தவன் நான். அவர் அட்டகாசமாகச் சொல்லுவதை, என்னால் பொறுத்துக்கொண்டிருக்க முடியுமா? "நீர் சொல்லுவது ஆதாரமில்லாத ஒருதலைக் கட்சி" என்று அழுத்தமாக ஆட்சேபித்தேன்.

"ஓட்டல் அன்னத்துக்கு துரோகம் செய்யக்கூடாது என்று அவர்களை, நீங்கள் ஆதரித்துப் பேசுகிற மாதிரி தோன்றுகிறது. செய் நன்றி கொல்லுவது மகா பாபமல்லவா" என்று அவர் விழுந்து விழுந்து சிரித்தார்.

வேறொரு சம்பவம் நிகழ்ந்தது. அதையும் சொல்லிவிடுகிறேன். ஒரு நாள், என் வீட்டில் சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். என் மனைவி பறிமாறிக் கொண்டிருந்தாள். சாம்பார் சாதம் சாப்பிடத் துவக்கினேன். சாம்பார் அவ்வளவு நன்றாயில்லை. கொஞ்சம் நன்றாயில்லை என்று வாய் தவறிச் சொல்லிவிட்டேன்.

"ஆமாம்! உங்களுக்கு வீட்டு சாம்பார் பிடிக்குமா? ஓட்டல் சாம்பார் என்றால் பிடிக்கும். ஓட்டலிலே, சாம்பார்செய்கிற மாதிரி, வீட்டிலே செய்தால் கட்டுமா? ஓட்டலிலே, அவர்கள், கணக்குப் பார்த்தா, சாமான்களைப் போடுகிறார்கள்? ஓட்டலைப்போல, வீட்டையும் நடத்துவதாயிருந்தால், மூன்று நாட்களுக்குள், நாம் ஓட்டாண்டிகளாகப் போகவேண்டியதுதான்" என்று பொருளாதாரத் துறையில், பெரிய பிரசங்கம் ஒன்று செய்து விட்டாள்.

நண்பர் ஏளனம் செய்தது ஒரு விதம்; மனைவி கோபம் கொண்டது இன்னொரு வகை. இந்த இரண்டு தீர்ப்புகளில், எதை எடுத்துக்கொள்வது, எதைத் தள்ளிவிடுவது என்பது எனக்குத் தெரியவில்லை. "ஓட்டல்காரர்கள் படுமோசக்காரர்கள்" என்று நண்பர் சொல்லுகிறார். 'ஓட்டல்காரர்கள் ஊதாரியாகப் பண்டங்களைச்செலவழிப்பவர்கள்' என்று மனைவி சொல்லுகிறாள்.

மனைவியின் தீர்ப்பை ஏற்றுக்கொண்டால், நண்பரின் வருத்தத்துக்குப் பாத்திரமாக வேண்டும். நண்பரின் தீர்ப்பை ஏற்றுக்கொண்டால், மனைவிக்குக் கோபம் வந்துவிடும். மறுபடியும், எனது பழைய ஓட்டல் வாழ்வை பிடித்துக் கொள்ள வேண்டி ஏற்பட்டுவிடும்.

என்னது செய்வதென்று தெரியாமல் கலங்கித் தவிக்கிறேன். இந்தச் சமயத்தில், நீங்கள்தான் யோசனை சொல்ல வேண்டும். எனக்கு ஒன்று படுகிறது. அது மாதிரி செய்யலாமா? அப்படிச் செய்தால், எல்லோருக்கும் இன்பமாயிருக்கும் என்று நினைக்கிறேன்.

நானே ஓட்டல் வைத்து விட்டால் என்ன? நானே வைத்து விட்டால், நண்பர் வருத்தப் படுவதற்கும் ஆத்திரப் படுவதற்கும் நியாயமில்லாமல் போய் விடும். ஓட்டல்காரன் என்று என்னையும் ஏளனமாகப் பேச, என் நண்பரின் மனது இடம் கொடுக்காது என்று எனக்கு நன்றாய்த் தெரியும்.

நானே ஓட்டல் வைத்து விட்டால், என் மனைவியிடம் சாம்பாரைப் பற்றி, கோபமாகப் பேச வேண்டிய அவசியமில்லாமல்

போய்விடுமல்லவா? மேலும், அவளுக்கு சாம்பார் செய்ய வேண்டிய வேலையே இருக்காது.

தவிர ஓட்டல்காரர்கள், பண்டங்களை ஊதாரியாகத் தான் செலவு செய்ய வேண்டுமா என்பதையும், என் சொந்த அனுபவத்தின் மூலமாகத் தெரிந்து கொள்ள, சந்தர்ப்பம் வாய்க்கும் என்று எண்ணுகிறேன்.

படித்துவிட்டு வேலைக்குத் திண்டாடும் கோஷ்டியைச் சேர்ந்தவன் நான் அல்ல. ஆகவே, உங்களுக்குப் போட்டியாக தொழில் நடத்த, எனக்கு துளிக்கூட எண்ணமில்லை. உலகத்திலே நான், யாருடைய வருத்தத்தையும் சம்பாதித்துக் கொள்ளாமல், உத்தம சனுதனியாக வாழ வேண்டும் என்ற ஆசை, என்னிடம் குடி கொண்டிருப்பதால், ஓட்டல் வைக்கிற யோசனைதான் சிறந்தது என்று எனக்குத் தோன்றுகிறது.

சித்தம் கலங்கித் தவிக்கும் உங்கள் தம்பியாகிய எனக்கு, உங்கள் மனப்பூர்வமான யோசனையைச் சொல்லுமாறு, வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

உங்கள் சஞ்சலம் அடைந்த
தம்பி

கலைஞான வரலாறு

(முன் கதைச் சுருக்கம்.)

[கருப்பூர் என்னும் கிராமத்தில் சிவஞான தேசிகன் என்னும் பிராமணனுக்கு சுவாமிநாதன் என்று ஒரு மகன், சகல சாஸ்திரங்களிலும் தேர்ந்தோங்கிய அம்மறைமகன், பத்தொன்பதாம் வயதில் ஞான மேலீட்டினால், தாய் தந்தையர் செய்வித்த மண ஏற்பாடுகளை வெறுத்து, பெற்றோர் அறியாமல் முனிவற்கிடமான வனத்தையடைந்து, அங்கொரு முனிவரையடுத்து, ஞான உபதேசம் செய்தருளும்படி அவரை வேண்டினன். முதலில் முனிவர் அவனைத் தடுத்து இல்லறத்தினின்றும் நற்கதி அடைவதற்கு மார்க்கமுண்டு என பல உரைத்தும், துறவறத்தையே அம்மறைமகன் வேண்ட, முனிவரும் ஞானம் உதயமாகும் சில உபதேசங்கள் செய்து தனது இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றார். மகன் வரவைக் காணாத தாய் தந்தையர்கள், தவித்துத் துயரில் ஆழ்ந்தனர்.

எனினும் ஒருவாறு தேறி, தங்கள் இல்லத்தை விடுத்து, மகனைத் தேடி, வனவழி சென்றனர். வனவழியில் நெடுந்தூரத்தில், ஆசிரமம் ஒன்று அவர்களுக்குத் தென்படவே, அங்கு சென்றனர். அந்த ஆசிரமத்தில் எழுந்தருளியிருந்த முனிபுங்கவர், வந்தடைந்த சதிபதிகளின் மனதைத் தேற்றுவதற்காக, முனிவர் பெருமானான அகஸ்திய மாமுனி உபதேசம் செய்த பார்வதிதேவியின் தவ வரலாற்றை அவர்களுக்குச் சொல்லுகின்றார்.

தவத்திலிருந்த மலைமன்னன் முன் உமாதேவி மூன்று வயது குழந்தையாக உற்பவிக்கின்றாள். அதைக் கண்டு மலைமன்னன் மகிழ்ச்சி கொண்டு குழந்தையை எடுத்துக்கொண்டு வீடு போய் செல்வமாய் வளர்க்கிறான். ஐந்தாம் வயதில் பார்வதி என்று பெயர் வைத்தான். பதிமூன்று வயதான பொழுது பார்வதி பரமேசுவரனைக் குறித்துத் தவம் செய்ய வேண்டுமென்று தந்தையை வேண்டினாள். தந்தையும் அதற்கிணங்கி அவளை மலைச்சாரலில் தவம் புரிந்த வசிஷ்ட முனிவரிடம் கூட்டிச் செல்லுகிறார். வசிஷ்டர் பார்வதிக்கு தவ முறையைச் சொல்ல அவள் அதன்படியே தவம் செய்கின்றாள். தவத்தின் நடுவே சிவபெருமான் ஒரு கிழவன் வேடம் தரித்து வந்து பார்வதியை சோதனை செய்கிறார். பரமசிவனைத் தூற்றுகிறார். பார்வதி கோபங்கொண்டு கிழவனை வெளியே போகச் சொல்லுகிறாள்.]

முனிவர் சொல்லுகிறார் :—"சிவஞான தேசிகரே! சன்யாச வேடந்தரித்து வந்த பரமேசுவரர் மறைந்ததும், பார்வதி தேவி, அஞ்சிக் கைகுவித்து அபசாரம் செய்தோமென பலவாறு தியானித்து, ஆகாயத்தை நோக்கிய வண்ணம் நிற்க, பரமேசுவரர் ரிடபவாகனரூடராய் ஆகாயத்தினின்று காட்சி தந்தருளினர்.

பார்வதி தேவி மகிழ்ந்து தேவனைப் பலவாறு தோத்திரஞ் செய்ய, பரமேசுவரர் கருணை கூர்ந்து சில புகல்கின்றார்.

"நங்காய்! பயப்படாதே. அவை நம்மைத் துதித்ததாகக் கொண்டோம். இனி நின் தவத்தை விடுவாயாக! விரைவில் மணஞ் செய்வோம்' என ஆசீர்வதித்து, இறைவன் மறைந்து கைலையை அடைந்தனர்.

"பார்வதி ஈசனின் அனுக்ரகத்தைப் பெற்று மனமகிழ்ந்தவராய், வசிஷ்ட முனிவரின் ஆசிரமத்தை அடைந்து அம்முனி புங்கவருக்கு நடந்தவைகளைச் சொல்ல, முனிவரும் மகிழ்ந்து தேவியாரை ஓர் அரிய ஆசனத்தில் அமரச் செய்து, மலை மன்னனுக்கு பார்வதியின் தவம் முடிந்ததென்றும் தேவனின் அருள் தேவிக்குக் கிடைத்ததென்றும் சொல்லியனுப்ப, சிஷ்யரும் கட்டளைப்படி மன்னனுக்கு அறிவித்தனர்.

"மன்னனும் மனைவியோடு ஆனந்தக் கடலில் மூழ்கியவனாய், பல்லக்கு முதலிய ஆடம்பரங்களுடன் வசிஷ்டர் ஆசிரமத்தையடைந்து, முனிவனைப் போற்றி பார்வதியின் தவ வெற்றியைப் புகழ்ந்து, தங்களருந்தவப் புதல்வியை அன்போடு கண்டு ஆனந்தக் கண்ணீர் விழ நின்றனன். இச்சமயம் மன்னனின் மனைவியான மேனை யென்பாள் தனது புதல்வியை ஆலிங்கனஞ் செய்து மகிழ்ந்து நின்றாள்.

"பின்னர், மலை மன்னன் முனிவரை வணங்கி, 'சுவாமி! இனி யாகுங் காரியம் யாது சொல்ல வேண்டு''மென வேண்டினன். அதற்கு முனிவர் மன்னனை நோக்கி, 'அரசே! இனி தாமதஞ் செய்யாது தவப்பயனால் புதல்வியாகப் பெற்ற பார்வதி தேவியை அழைத்துக் கொண்டு, உனதில்லத்தை யடைவாயாக! தேவனும் தனதருள் வாக்கின்படி அதி சீக்கிரத்தில் வந்து தேவியை மணஞ் செய்து கொள்வார். அக்காலத்தில் நாம் வருவோம்'' என்று விடை கொடுத்ததும் பார்வதி முனிவரை நோக்கி சில சொல்லுகிறார்.

'முனிபுங்கவ! தங்களுடைய கிருபையால் தவத்தினைச் செய்து தேவதேவனை அடையும் பாக்கியம் பெற்றேன். ஆயினும் என் மனத்தில் ஓர் குறை உள்ளது. அது யாதெனில், அன்று ஆதரவற்று நம்மை அண்டிய ஜயவதியின் கதி என்னாகும்? இவளுக்கு நான் செய்யவேண்டிய காரியம் யாது? சொல்வீராக' என்றனர். அதற்கு முனிவர், 'ராஜபுத்ரீ! ஜயவதி பூர்வ ஜென்ம புண்ணியத்தால் நம்மையடுத்தனள். பின்னும் சில நாள் உம்மோடிருந்து பணித் தொழிலையும் செய்தனள். முன் ஜன்மத்தில் இவள் செய்த தவம் தாங்கள் செய்த தவத்தினும் மேலானதல்லவா? இல்லையேல் தங்களுக்குப் பணி செய்யும் பாக்கியம் பெற்றதுமல்லாமல் பரமேசுவரரின் திவ்ய தரிசனமும் இவளுக்குக் கிடைத்திருக்குமா? ஆதலின் இவளைப் பற்றிய கவலை தங்களுக்கு ஒன்றும் வேண்டாம். அப்பாவையை இங்கு விட்டுச் செல்வீராயின், அன்றொரு நாள் லீலையின் வீட்டில்

இவள் கண்ட குணபதி யென்னும் ஆடவனை மணந்து இல்லறம் நடத்தி இன்புறுவாள். தங்களின் மனம் போல் அதற்கான உதவியை நாமும் செய்வோம்' என்றனர்.

"முனிவர் சொல்லிய இவற்றை தேவியார் கேட்டு மனமகிழ்ந்து, 'முனிவ! தங்கள் மனம் போலாகுக' என்றுரைத்து முனிவரிடம் விடை பெற்றுக் கொண்டு ஜயவதியை நோக்கி, 'ஜயவதி! நீ எதற்கும் கவலைப்படாதே. முனிவரின் ஆசிரமத்தில் சில நாள் தங்கியிருப்பாயாயின், அவரருளால் தக்க கணவனை மணந்து இல்லறமென்னும் தரும நீதியைக் கைவிடாது காத்து வருவாயாக! நான் போய் வருகிறேன்' என்றுரைத்து, தனது தாய் தந்தையர்களுடன் பல்லக்கிலமர்ந்து அரண்மனைக்கேகி ஈசனை தொழுது வந்தனர்.

"இது இருக்க, பரமேசுவரர் பார்வதிக்கு அனுக்ரகித்து கைலையை அடைந்து சப்த ரிஷிகளை வரவழைத்து, 'நீங்கள் பர்வதன் மகளாயிருக்கும் பார்வதியை நமக்கு மணம் பேசி வருவீ'ரென கட்டளையிட, அவர்களும் சிவபெருமான் கருத்தின்படி மலை மன்னனைச் கண்டு, தேவனின் மனக் கருத்தைச் சொல்ல, மன்னனும் சம்மதிக்க, அதை ஈசனுக் குரைத்து விடை பெற்று சப்த ரிஷிகளும் அவரிருப்பிடங்களுக்குச் சென்றனர்.

"பரமேசுவரர் பின்னும் பிரமனை யழைத்து மலைமன்னனின் மகளாய் அவதரித்திருக்கும் உமையை மணந்து கொள்ளத்தக்க தினம் பார்க்கக் கடவாய் என்று கட்டளையிட, பிரம்மனும் தேவனின் கட்டளைப்படி பங்குனிமாதம் உத்திர நட்சத்திரங்கூடிய கடக வோரையில் மணத்தை நிச்சயித்துத்தர, பின் நந்தி தேவரால் குறித்த தினத்தை மலை மன்னனுக்குச் சொல்ல, மன்னனும் மகிழ்வுடன் விசுவகருமனால் நகரை அலங்கரித்து, மணத்திற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் செய்து முடித்தான்.

"அக்காலத்தில் சிவபெருமான் நந்தியை நோக்கி, தேவர் முதலியோருக்கும் மணச்செய்தியை தெரிவிக்கும்படி கட்டளையிட, நந்தீசுவரரும் தேவர்களுக்குச் சொல்ல, குறித்த மணத்தினத்தன்று பிரம்மன், இந்திரன், விஷ்ணு முதலிய தேவர்களும் எண்டிசைத் தேவர்களும் நவக்கிரகங்களும், நவசித்தர்கள், அஷ்டவசுக்கள், சப்த ரிஷிகள், கின்னரர், கருடகாந்தரர் முதலிய கணங்களும் கூட்டம் கூட்டமாய் வந்து நந்திதேவரைப் பணிந்து நின்றனர். அப்பொழுது சிவபெருமான் அராக்கலன் முதலிய பொற்பணிகள் விளங்க மணக் கோலங் கொண்டு ரிடப வாகனத்தின் மீது அமர்ந்து, தேவர்கள் மலர் மாரியைப் பெய்ய, இந்திரன் முதலியவர்களுடன் இமாசலத்தை அடைந்தனர்.

"தேவர்களுடன் ஈசன் வரவை அறிந்த மன்னனும் சகல ஆடம்பரங்களுடன் எதிர்சென்று அழைத்து வந்து தக்க ஆசனங்களில் அமரும்படி செய்தனன்.

" தேவர்களெல்லாம் ஒருங்கு சேர்ந்து, இமாசலத்தை யடைத லும் வடமுனை தாழ்ந்தும், தென் முனை உயர்ந்தும் பூமியின் சமநிலை மாறியது. இனி உலகழியும் என்றறிந்த பரமேசுவரர் அகத்திய முனிவரை யழைத்து 'முனிவ! தேவர்கள் முதலிய யாவரும் நம் பொருட்டு இங்கு ஒன்று சேர்ந்திருப்பதால், தென் திசை உயர்ந்து வருவதால், நீர் தென்திசைச் சென்று பொதிகை மலையில் அமர்ந் திருப்பீராக! நாம் பார்வதியை மணஞ் செய்துகொண்டு மணக் கோலத்துடன் பொதிகைக்கு வந்து உமக்குக் காட்சி தருவோம்' என்றனர்.

" அதற்கு அகத்தியனும், தேவனின் வார்த்தையை சிரமேற் கொண்டு பொதிகை மலைக்குச் சென்று அமர்ந்தனர். பூமியும் சமநிலை யடைந்தது. ஈசன் முதலிய சகல தேவர்களும் வடதிசையி லுள்ள இமாசலத்தில் ஒன்று கூடியதால், தென் திசை உயர்ந்தது. ஒரு அகத்திய முனிவன் பொதிகையிற் சென்றவுடன், பூமி சம மடைந்த தென்றால் அந்த அகத்திய முனிவன் பெருமையை நம்மால் என்ன என்று சொல்லமுடியும்? தேசிகரே! பூமி சம நிலை அடைந்த உடனே, சகல தேவர்களும் முனிவர்களும், அரசன் முதலிய பலரும் மணப்பந்தலில் வரிசை வரிசையாய் அமர்ந்திருக்க, கல்யாண மேடை யில் மணமக்களான பார்வதியும் பரமேசுவரரும் வந்தமர்ந்தனர். புஷ்ப மாரியும் பொழிந்தது.

பின்னர், பிரம்மன் திருமணச் சடங்குகளை நடத்த, சிவபெரு மான் நவரத்ன சிம்மாசனத்தில் தேவியாருடன் அமர்ந்து சடங்கு களைச் செய்து வந்தனர் வேதமுறைப்படி மணச்சடங்குகள் முடிந்த தும், பர்வதராசன் தன் மேனையோடு வந்து சிவபெருமான் திருவடி களைப் பூசித்து, பார்வதி தேவியின் திருக்கரங்களை பரமேசுவரரின் கையில் அளித்தனர். பின்னும் சகல தேவர்களும் புஷ்பங்களை வாரி யிறைத்து ஜெய ஜெய வென்னும் சப்தம் அண்டங்களும் அதிர, தேவனின் திருமணம் மங்களமாய் முடிந்தது.

" தேவர் முதலியோர் யாவரும் தேவனிடத்தும் மன்னனிடத் தும் விடைபெற்று, அவரவர்கள் இடத்தைச் சேர்ந்தனர். பிறகு பரமேசுவரரும் பார்வதியும், மலையரசனிடமும் அவள் மனைவியிடத் தும் விடைபெற்றுக்கொண்டு, மணக்கோலத்தோடு நந்தி தேவருடன் பொதிகை மலையை யடுத்து அகத்திய முனிவருக்கு காட்சி தந்து கைலாய கிரியை அடைந்தனர்.

" சிவஞான தேசிகரே! தேவ தேவனின் மண வைபவங்களில் சிலவற்றைச் சுருக்கமாய்ச் சொல்லி முடித்தேன்" என்று முனிவர் சொல்ல, சிவஞான தேசிகரும் அவர் மனைவியாரும் அளவு கடந்த ஆனந்தங் கொண்டு, புத்திரன் பிரிந்த சோகத்தினின்றும் அநேக மாய்த் தெளிந்து, பரமனையும் பார்வதி தேவியையும் மனத்துள் தியானித்து, " முனிவர் பெருமானே! மற்றும் சொல்வீ" ரென வேண்டினர்.

(தொடரும்)

யோசிக்காத குற்றம்!

(வ. ரா.)

குமாரசாமி முதலியார், தன் அறைக்குள் உட்கார்ந்து கொண்டு, யோசனையில் ஆழ்ந்து கிடந்தார். அவருடைய யோசனை வேறு எதுவாயும் இருக்க முடியாது. அவருக்கு காந்தியைப் பற்றித்தான் எப்பொழுதுமே, சிந்தனை.

"சாதாரண குடியானவனைப் போல இருக்கிறார் இந்த காந்தி. அசப்பிலே, அவருடைய கையில் இருக்கும் கோலோடு அவரைப் பார்த்தால், வயதான கோனார் மாதிரி இருக்கிறது. இவர், இந்த உலகத்தை ஆட்டிவைக்கும் விசித்திரத்தைப் பார்" என்று காந்தி படத்தைப் பார்த்துக்கொண்டே, தனக்குள்ளாக முதலியார் சொல்லிக்கொண்டிருந்தார்.

அந்த சமயம் அவரது செல்வக்குமாரி குணவதி, அவரிடம் வந்து, "இன்றைக்கு ஏதோ, காந்தியைப்பற்றி சொல்லுகிறேன் என்று சொன்னீர்களே, அப்பா! சொல்லுங்களேன்" என்று ரொம்பவும் அன்போடு, தகப்பனாரைக் கேட்டாள்.

"ஆமாம்! உனக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன். சொல்லுகிறேன், கேள். எல்லாரும் வாழ்க்கை என்பது ஒரு முழுசான சங்கதி என்பதைத் தெரிந்து கொள்ளுவதில்லை. கை, கால், மூக்கு. காது, கண், தலை, உடம்பு எல்லாம் சேர்ந்தது மனிதனுடைய உருவம். கை மாத்திரம் மனிதன் அல்ல. தலை மாத்திரம் மனிதன் அல்ல...... அப்படியே எல்லாவற்றையும் பற்றி. அதைப் போலவே, வாழ்க்கை என்றால் பகிரங்கமான வாழ்க்கை, இரகசியமான வாழ்க்கை என்ற பிளவுகள் கிடையாது" என்று முதலியார் சொல்லி வருகையில்,

குணவதி குறுக்கிட்டாள்.

"அவசரப்படாதே! வாழ்க்கையை, அரசியல் வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, காதல் வாழ்க்கை, பொருளாதார வாழ்க்கை என்று கூறுபோட்டு, நடத்த முடியாது. வாழ்க்கையை, முழுசாகத்தான் நடத்தவேண்டும்" என்றார் முதலியார்.

சரி என்று சம்மதம் கொடுத்தாள் குணவதி.

"குடும்ப வாழ்க்கையில் பொய்ச் சொல்லப்படாது என்றும் அரசியல் வாழ்க்கையில் ராஜ தந்திரப் பொய் சொல்லலாம் என்றும் வித்தியாசப்படுத்துவது மிகவும் தவறாகும். உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களிலும் உயர்ந்தது குணம்தான். அதற்காகத்தான், உனக்கு குணவதி என்று பெயர் வைத்தேன். குணத்தில் சிறந்த

வர்கள்தான், மனிதர்களின் பழக்க வழக்கங்களைமாற்றி, அவர்களை மேம்பாடு அடையச் செய்திருக்கிறார்கள். காந்தி செய்த வரும் வேலையும் இதுதான்'' என்று உள்ளப் பூரிப்புடன் முதலியார் சொன்னார்.

காந்தி போகும் வேகம் போதாது என்று குணவதி ஆட்சேபித்தாள். "உனக்கு, அவருடைய வழியில் அதிருப்தி ஏற்படவில்லையே'' என்று சொல்லி, முதலியார் சிரித்தார்.

"ஒரு வழி, சீக்கிரத்தில், பலன் கொடுக்காமல் போனால், அது உயர்ந்தது; ஆனால், மனிதர்களால் பின்பற்ற முடியாது என்று சொல்லிக் கொண்டே, காலம் கடத்துவதில் என்ன பிரயோசனம்?'' என்று சற்று வேகத்தோடு, குணவதி ஆத்திரப்பட்டாள்.

"ஒரு முழுக்கிலே மண் எடுக்கப் பார்ப்பது புத்திசாலித்தனமாகாது. நீண்ட காலமாகத் துளித் துளியாகச் சேர்ந்து கொண்ட கெட்ட பழக்கங்களில் நம்மவர்கள் உழன்று வருகிறார்கள். அவர்களை, அவர்களுடைய கெட்ட பழக்கங்களிலிருந்து விடுவித்து, அவர்களிடம் மனமாற்றம் ஏற்பட்டாலன்றி, நாட்டிலே பொதுவாக சக்தி திரண்டு வர முடியாது. எந்த சக்தியைக் கொண்டு, காந்தி போராட்டத்தைத் துவக்குகிறது'' என்று முதலியார் வருத்தப்பட்டார்.

"கெட்ட பழக்க முள்ளவர்கள் திடீரென்று தியாகம் செய்யும் வீரர்களாக ஆக முடியாதோ'' என்றாள் குணவதி.

"நீ குழந்தையானபடியால் அப்படி பேசுகிறாய்! கெட்ட பழக்கத்தில் அகப்பட்டுத் தவிப்பவர்களுக்கு, வாழ்க்கையில் இலட்சியம் ஏது? குடியனுக்கு குடிதான் இலட்சியம். சூதாட்டக்காரனுக்கு சூதாட்டம்தான் இலட்சியம்.

"அதோ பார்! ஒவ்வொன்றாகச் சொல்லி வருகிறேன். உன் கற்பனையையும் அனுபவத்தையும் ஒன்று சேர்த்துப் பார். நான் சொல்லுவதெல்லாம் நன்றாக விளங்கும். அங்கே பார்! இருவர் குடித்துக்கொண்டிருக்கிறார்களே! அவர்களுக்கு, குடியைத் தவிர, வேறு எதைப்பற்றிக் கவலை! அவர்களிடமிருந்து, என்ன சக்தியையும் தியாகத்தையும் எதிர்பார்க்க முடியும்?

"அடுத்தாற்போல, ஒருவன், விலைமாதர் இல்லத்துக்கு, குஷியாகப் போய்க்கொண்டிருக்கிறானே! இவனுக்கு, துளியாவது வாழ்க்கையில் பொறுப்பும் இலட்சியமும் இருக்குமா? இவனிடம் எவ்வித தர்ம சாஸ்திரத்தை எதிர் பார்க்க முடியும்? இவன், உயர்ந்த காரியங்களில் ஈடுபட்டாலும், விலைமாதரின் இல்லம்தான் இவனுக்கு எப்பொழுதும்

நினைவு வரும். இவனைக்கொண்டு,

என்ன உயர்ந்த காரியம் செய்ய முடியும்?

"இன்னொரு காட்சியைப் பார். கை நிறைய சம்பளத்தை வாங்கி, தன் மனைவியிடம் ஒருவன்

கொடுக்கிறான். இவர்களுக்கு, தங்கள் குடும்பத்தைத் தவிர, வேறு எதிலும் அக்கறையே கிடையாது. இவ்வளவு சம்பளம் வாங்கலாமா என்று அந்தப் பேர் வழிக்குத் தோன்றவே இல்லை. நாட்டைப்பற்றி, அவருக்கு கவலையே இல்லை. இந்தப் பேர்வழிகளைக் கொண்டு, இந்த நாட்டுக்கு, காந்தி என்ன நல்லதைச் செய்ய முடியும்? காந்தி மெதுவாகப் போகிறார், என்கிறாயே!

"சரி அதுவும் போகட்டும்! இந்த இரண்டு பேர்கள் "குசு குசு" வென்று பேசிக்கொள்ளுகிறார்களே! என்ன தெரியுமா? ஒருவன் மற்றவனிடம் கோள் சொல்லுகிறான். கோள் சொல்லு

கிறவனைக் காட்டிலும் அற்பமான பிராணியை உலகில் காண முடியாது. கோள் சொல்லுகிறவனை நம்பி, எந்தக் காரியத்தைச் செய்ய முடியும்!

"அதற்குப் பிறகு பார்! இந்தப் பேர் வழிகள் சூதாட்டத்தில் முனைந்திருக்கிறார்கள். இவர்களுக்கு எப்படியாவது, "துட்டுத் துக்காணி"யை சம்பாதித்தால் போதும் என்றிருக்கிறது. இவர்களுடைய மனோபாவத்துக்கும் உயர்ந்த இலட்சியத்துக்கும் ஏதாவது, லவலேசமாகிலும் சம்பந்தம் இருக்குமா?

"உன் பக்கத்தில் பார்! ஒரு கனவான், நாற்காலியில் சாய்ந்து கொண்டு, பங்களா வாழ்வைப்

...த்துக் கொண்டிருக்கிறார். தான் பங்களாவில் உல்லாசமாக வாழ்ந்து வரும் வரையில், இவருக்கு ஏழை எளியவர்களைப்பற்றி என்ன கவலை? எனது

கர்ம பலத்தால், எனக்கு இந்த அதிருஷ்டம் வந்திருக்கிறது என்று யோசனை இல்லாமல், அவர் வாழ்ந்து வருகிறார். இவருக்கும் பொது வாழ்வுக்கும் என்ன சம்பந்தம்? இவர் பங்களாக் கோழை. இவரிடம் தைரியத்தையும் தியாகத்தையும் எதிர்பார்க்க முடியுமா?

"அப்பால் பார்! கிட்ட வராதே என்று ஒருவர் துரத்துகிறாரே! சகோதர மனிதன் கிட்ட வரப்படாது என்று சொல்லும்படியாக, இந்த மனிதனிடத்தில் எவ்வளவு கடின சித்தம் இருக்கவேண்டும்! நாயைக் கிட்ட அனுமதிக்கும் இந்த மனிதன், சகோதர மனிதனைக் கிட்ட வரக்கூடாது என்கிறார். இவ்வளவு படுமோசமான மனப்பான்மையுள்ள மனிதனை வைத்துக் கொண்டு, என்ன பெரிய காரியத்தைச் சாதித்துவிட முடியும்?

"கடைசியாகப் பார்! தலையிலே கையை வைத்துக் கொண்டு, விதி என்று புலம்பிக் கொண்டிருக்கிறான். இவனுக்கு தொட்டதற்கெல்லாம் விதி. விதிப் பிசாசு இவனுடைய ரத்தத்தைச் சுண்ட வைத்துவிட்டது. இவனுக்கு, தன் சொந்த வலிமையில் நம்பிக்கை யில்லை. எதற்கெடுத்தாலும் விதிப்படி நடக்கும் என்று சோம்பல் கடலுக்குள் மூழ்கிக் கிடக்கும் மனிதன், மனிதன் அல்ல. அவன் வெறும் மூட்டை.

"இப்பேர்ப்பட்ட பேர் வழிகள் நிறைந்திருக்கிற ஒரு சமூகத்திலே, இத்தனை பேர்களுக்கும், ஒரு சிறிதாகிலும் மனம் மாற்றம் ஏற்படாமல் போனால், காந்தி வழி என்ன செய்ய முடியும்? அவர்களை மனம் மாற்றம் செய்யும் வழிதான் காந்தி வழி. அதனாலே தான், காரியம் தாமதித்து நடக்கிறது?"

அகத்தியன் வைத்தியம்

மது மேக ரோகம் Diabetes

மது மேக ரோகத்தைத் தடுத்துக் கொள்ளும் உபாயங்கள்.

மது மேக ரோகத்தை தடுத்துக் கொள்ளும் உபாயங்கள் என்பதில் சரீரப் பயிற்சியைப்பற்றி எழுதப்பட்டிருந்ததின் தொடர்ச்சியாக, அளவுக்கு மீறிய சங்கமம் என்பதைப்பற்றி எழுதப்பட்டிருப்புதைக் கவனிக்கவும்.

அளவுக்கு மீறிய சங்கமம். மது மேக ரோகம் உண்டாகுங் காரணங்களும், முதிர்ச்சியடையும் மார்க்கங்களும் பலவாயினும் அவற்றுள் ஆகாரங்களும் சரீர சம்பந்தமுமே முக்கியமானவைகள். இவ்விரண்டினுள் கொடியது அளவுக்கு மீறிய சங்கமமேயாகும். ஏனெனில் அருமை வாய்ந்த இச்சரீரத்தின் அமைப்பு மிகவும் விசித்திரமானது. இச்சரீரத்தில் ரஸதாது, ரக்த தாது, மாமிஸ தாது மேதோ தாது, அஸ்தி தாது, மச்ச தாது (எலும்புக்குள்ளிருக்கும் சத்து) சுக்கில தாது, என சப்த தாதுக்களும் நாம் உட்கொள்ளும் உணவுகளிலிருந்து பிரிகின்ற அன்ன ரசத்தால் போஷிக்கப்பட்டு, சரீரத்திற்கு பலத்தையும் காந்தியையும் கொடுத்துக்கொண்டு சரீரத்திற்கு சோர்வில்லாமல் காப்பாற்றி, உயிராகிய சீவனை வாழச் செய்கிறது.

இந்த ஏழு தாதுக்களும் ஆகாரம் உட்கொண்ட மறுநாள் சக்கை நீங்கி முறையே முதல் நாள் அன்ன ரஸமாக மாறி, இரண்டாவது நாள் ரத்தத்திலும் மூன்றுவது நாள் மாமிசத்திலும், நாலாவது நாள் மேதோவிலும் (கொழுப்பிலும்) ஐந்தாவது நாள் அஸ்தியிலும், ஆறுவது நாள் மச்சையிலும (எலும்புக்குள்ளிருக்கும் சத்து) கலந்து ஏழாவது நாள் புருஷர்களுக்கு சுக்கிலமாகவும் (விந்து) ஸ்திரீகளுக்கு சுரோணிதமாகவும் (நாதம்) திரண்டு சரீரத்திற்கு ஜீவாதாரமாகவும் சந்தான விருத்திக்கு மூல காரணமாகவும் இருக்கிறது.

இச்சரீரம் நீடிப்பதற்கு மூலாதாரமாக உள்ள சக்கில சுரோணிதங்களானது 60 துளிகள் ரத்தம் சுண்டி ஒரு துளியாகத் திரண்டு

சரீரத்திற்கு ஆதாரமாய் இருப்பதால், சப்த தாதுக்களுக்கும் மேம்பட்ட இச் சுக்கில தாதுவே பிராணதாரமாகவும் விளங்குகிறது.

சரீரம் அகலாகவும் ரத்தம் அகலுக்குள் எண்ணெயாகவும், சுக்கிலம் திரியாகவும், ஜீவன் பிரகாசமாகவும், அமைந்திருப்பதால் ஆயுள் விருத்திக்கும் இச் சுக்கில தாதுவே ஜீவ ரத்தினமாகவும் இருக்கிறது.

சரீரத்திற்கு பிராணதாரமாகவுள்ள சுக்கில சுரோணிதமானது கண்டத்திற்கு மேலுள்ள நாடி நரம்புகளின் மார்க்கத்தில் பிரவேசித்து மூளையையே பிரதான ஸ்தானமாகக் கொண்டு, மூளைக்குள் சத்தாகவும் கண் ஒளிக்கு காரணமாகவும் இருக்கிறது.

பொதுவாகவே நமது சரீரத்தினுள் ஜீவரத்தினமாக விளங்கும் இவ்வருமை வாய்ந்த சுக்கில சுரோணிதமானது அளவுக்கு மீறிய தேக சம்பந்தத்தால் அடிக்கடி கீழ் நோக்கிச் செல்வதால், மற்ற தாதுக்களெல்லாம் பலவீனமடைந்து சரீரத்தின் உள் உறுப்புக்களும் க்ஷீணமடைந்து பாழ் படுகின்றன. ஸ்திரீ புருஷர்கள் இருவருடைய அழகும் தேஜசும் குறைந்து தசைப்பற்றுள்ள தாடைகள் ஒட்டி, பற்களும் பழுதடையத் தொடங்குகின்றது. ரத்தம் குறைந்து தேகம் வெளுத்து சரீர வளர்ச்சி மட்டுப்பட்டு வாலிப திசையில் கிழத்தனம் மேலிடுகிறது. சரீரக்கட்டு தளர்வதுடன் நரை, திரை, மூப்பு வளர்ச்சியடைந்து, கண்களின் கூர்மைவாய்ந்த ஒளியும் மழுங்கி விடுவதுடன் ஆரோக்கியமென்னும் பெருஞ் செல்வம் இச்சரீரத்தை விட்டுப் பறந்தோடி விடுகிறது.

மேலும் மித மிஞ்சிய சரீர சம்பந்தத்தால் செல்லெரித்த மூங்கிலைப் போல் சரீரத்தின் உள் உறுப்புகள் நாளுக்கு நாள் சக்தியற்று நீர் பை, நீர் தாரை, நீர்க்காயின் குழல், இந்திரிய கமலக்குழல், முதலிய சன்மேந்திரிய உட் கருவிகள் உள்ளேயுள்ள அக்கினியால் தகிக்கப்பட்டு புண்ணாகி அதில் உள்ள சூட்சம நரம்புகள் நசித்து விடுவதால், பற்பல விதமான நீர் ரோகங்களும் உண்டாகின்றன.

இதுவுமின்றி ஸ்திரீ புருஷ சம்பந்தத்தில் சதா ஆழ்ந்திருப்பதாலும், துர்வியாதியுள்ள சரீர சம்பந்தங்களினாலும், விந்து ஸ்தம்பனம் செய்வதாலும், கொடூரமான காமாக்கினியால் இச்சரீரம் தகிக்கப்பட்டு சன்மேந்திரிய உறுப்புக்கள் கெடுவதுடன் 21 விதமான பிரமேக ரோகங்களும் தோன்றுகின்றன.

அவையாவன : (1) வாதப்பிரம்மியம். (2) பித்தப் பிரம்மியம். (3) சிலேஷ்ம பிரம்மியம் (4) வாதப் பித்த பிரம்மியம் (5) பித்த சிலேஷ்ம பிரம்மியம் (6) தொந்தப் பிரம்மியம் (7) கட்டிப் பிரம்மியம் (8) சலப் பிரம்மியம் (9) தந்துப் பிரம்மியம் (10) ரத்தப் பிரம்மியம் (11) ஒழுக்குப் பிரம்மியம் (12) சீழ் பிரம்மியம் (3) மஞ்சள் பிரம்மியம் (14) மூத்திர கிருச்சிரப் பிரம்மியம் (15) கரப்பான் பிரம்மியம் (16) கல்லுப் பிரம்மியம் (17) தந்துப் பிரம்மியம்

(18) நீச்சுப் பிரம்மியம் (19) மலினப் பிரம்மியம் (20) மதுரப்பிரம்மியம் (21) ரணப் பிரம்மியம் என இவ்விருபத்தொன்று விதங்களான கொடிய பிரமேக ரோகங்களும் சரீரத்தினுள் பிரவேசித்து மிக துன்பங்களைத் தரும்.

அவற்றின் குணம். அளவுக்கு மீறிய தேக சம்பந்தத்தால் உண்டான இப்பிரமேக ரோகங்கள் ஒவ்வொன்றும் முறையே 1. வாதப் பிரம்மியம் நீர்த்தாரையினின்று வெளுத்துக் கட்டியாய் நீர் வடிதல்.

2. பித்தப் பிரம்மியம் நீர் தாரையினின்று மஞ்சள் நிறமான நீர் எப்போதும் வடிதல்.

3. சிலேஷ்மப் பிரம்மியம்: வாய், கண், நகம் இவைகளில் ரத்தமில்லாமையும் அடிக்கடி வெண்மையான நீர் இறங்குதல்.

4. வாதப் பிரம்மியம்: சர்வாங்கத்திலும் நோய், வயிற்றில் கட்டி எழும்புவதைப் போல் இருந்தாலும், கோசத்தில் குத்தல் இருப்பதுடன் மாவு கறைத்ததுபோல் நீர் இறங்குதல்.

5. பித்த சிலேஷ்ம பிரம்மியம்: வாய் கசத்தல், சரீரம் ஊதல், அடிவயற்றில் பெருமலுடன் இசிவு தோன்றுதல். வெண்மையாகவும் மஞ்சளாகவும் நீர் இறங்குதல்.

6. தொந்தப் பிரம்மியம்: சரீரத்தில் தினவும், புழுக்கள் ஊறுதல் போன்ற அரிப்பு, மறைவு ஸ்தானங்களில் கருமை நிறம், அடிக்கடி கடுத்து நீர் இறங்குதல், அதைப் பாட்டிலில் பிடித்துப் பார்த்தால் அடியில் பல நிறங்களாகத் தோய்ந்திருத்தல்.

7. கட்டிப்பிரம்மியம் சரீரம் முழுதும் சகிக்கக்கூடாத நோவுடன் கட்டிகள் எழும்புதல். சீழ் வடிதல் மறைபு ஸ்தானத்தில் நீர் கசிதல்.

8. சலப் பிரம்மியம்: அடிவயிற்றைப் பிடுங்கல். மலத்துடன் சீதம் விழுதல். மறைபு ஸ்தானங்களின் பக்கங்களில் கட்டிகளும் வெளுத்த நீர் இறங்கல்,

9. தந்திப் பிரம்மியம்: நீர் இறங்கியவுடன் தந்திபோல் மேகங் காணுதல். வெள்ளை காணல். இதனால் அடிக்கடி நீர் இறங்க எரிச்சல் உண்டாகுதல்.

10. ரத்தப் பிரம்மியம்: சரீரம் பஞ்சுபோல் மெதுவுரல். தயக்கம், தலைத்திருப்பல், ரத்தம்போல் சிவந்து சுறுக்குடன் வேதனை தருவதாய் நீர் இறங்கல்.

11. சீழ் பிரம்மியம்: நாபியில் விரணம். கணுக்காலில் குடைச்சல் தடித்து வெள்ளை காணல்.

12. ஒழுக்குப் பிரமேக ரோகம்: நீர் துவார வழியினின்று சீழ் ரத்தம், சலம் ஆகிய இவைகளைப்போல் அடிக்கடி நீர் சிந்துதல்.

13. மஞ்சள் பிரம்மியம்: நீர் தாரையில் நெருப்புக் கொளுத்தினது போல் எரிச்சல், முகத்தில் மஞ்சள் நிறமான வெள்ளை காணுதல்.

14. மூத்திரக் கிரிசசிரப் பிரம்மியம் குத்தலுடன் அடிக்கடி கொஞ்சம் கொஞ்சமாக நீர் இறங்குதல், (கிரிச்சரம் என்பது கொஞ்சம்கொஞ்சமாக நீர் இறங்குதல்.)

15. கரப்பான் பிரம்மியம்: உடம்பில் நெருங்கிய பெரும் சொரியுடன் சுண்ணும்புக் கல்லைக் கரைத்த சலம்போல் நீர் இறங்குதல். நீர்த்தாரையை சொறியுடன் கூடிய புண்ணுக்குதல்.

16. கல்லுப் பிரம்மியம்: வயிற்றில் கல்லைப்போல் நீர் சிக்கிக் கொண்டு விம்மி விருவிருப்புடன் நாபியைப்பற்றி உப்புசமாகி நீர்த் தாரையிருந்து மதுவைப்போல் மேக நீர் கசிதல்.

17. தந்துப்பிரம்மியம். நீர்த்தாரையில் சிலந்தி நூலைப்போல் மேகம் காணுதல். வெளுத்த நிறம் கலந்த உதிரம் சிந்துதல். நீர் துளி துளியாக விழுதல்.

18. நீச்சுப்பிரம்மியம்: நரம்பு சுருங்குதல், அடிவயற்றில் சூலை. நீர்த்தாரையின்று வெளுத்த சீழ் வடிதலுடன் மதுவை யொத்த நீர் இறங்குதல்.

19. மலினப் பிரம்மியம்: நீர்த்தாரையின் முனையில் துர் மாமிசம் சுருண்டு இருத்தல். அடி நரம்புகளில் குத்தலுடன் நோவு, அழுகினம், மயக்கம், புறங்காலில் திமிருடன் வெள்ளை காணுதல்.

20. மதுப்பிரம்மியம் இதுதான் கொடியதான மது மேக ரோகத்தைக் கொண்டுவந்து வைப்பது.

21. ரண பிரமேகம். இது சர்வாங்கத்திலும் நோவுடன் ரணங்கள் உண்டாக்கி, மறைபு ஸ்தானங்கள் கனத்து, அதினின்று ரத்தம் முதலான கெட்ட நீர்கள் வடிதல். இவைகளெல்லாம் பிரமேக ரோகங்களின் கோரக் காட்சிகளாகும். இக்கொடிய பிரமேக ரோகங்கள் அளவுக்கு மீரிய சங்கமத்தினுலும் துர் நோய்களுள்ள சரீர சேர்க்கையாலும் சரீரத்தைப் பற்றிப் பிடித்து சரீரத்தில் ஊறி முடிவில் மதுமேக ரோகமாகவும் மாறுபடுகின்றது.

அடிக்கடி மித மிஞ்சிய சரீர சம்பந்தத்தினுல் இச்சரீரத்திற்கு விளையும் கெடுதிகள் அனந்தமாகும். இச் செய்கையினுல் சரீரம் எவ்வாறு கெட்டுப் போகுமென்பதை இன்னும் விளக்கமாக எழுதுவதென்ருல் முடிவு பெருத காரியமேயாகும்.

சரீர சம்பந்தமென்பது கிணற்றின் ஜலத்தை இடை விடாமல் சில நாள் (இரண்டொரு நாள்) இறைத்துக்கொண்டே வருவோமானுல் கிணற்றில் சலமில்லாமல் போய்விடும். கிணற்றில் உள்ள ஜலத்தை இறைக்காமல் விட்டு விடுவோமானுல் ஜலத்தில் அழுக்கேறி வருவாய் அடைப்பட்டு சுரப்பு நின்றுவிடும். பின்பு அக்கிணற்றில் மிகுதியுள்ள ஜலமும் சூரிய உஷ்ணத்தினுல் வற்றி ஒன்றுமே யில்லாமல் போய்விடும்.

அதைப் போலவே அளவுக்கு மீறிய சம்பந்தத்தினல் சரீரம் நீடிப்பதற்கு ஆதாரமாகவுள்ள சுக்கில சுரோணிதமானது அடிக்கடி வெளிப்படுவதால் வருவாய் குறைந்து, அருமை வாய்ந்த இச்சரீரம் பற்பல பயங்கரமான கொடிய ரோகங்களுக்கு உட்பட்டு முடிவில் பலவீனமடைந்து சரீரம் நசியப்படுகின்றது.

ஆனல் சரீர சம்பந்தம் எக்காலத்திலும் இல்லாமலிருந்தாலும் சன்மேந்திரியத்தின் தன்மை கெட்டு, அதின் வருவாய் அடைப்பட்டு மிகுந்திருக்கும் சுக்கிலமும் ஜடாக்கினியின் உஷ்ணத்தினல் வற்றி, சரீரத்தில் பலவித நோய்களை உண்டாக்குமாகையால், இவ்விஷயத்தில் நியமத்துடன் இருப்பதே உத்தமமாகும்.

மேலும் மதுமேக வியாதியஸ்தர்கள் அளவுக்கு மீறிய சங்கமத்தைத் தடுத்துக்கொள்வதே இவ்வியாதியை தடுத்துக்கொள்ளும் ஓர் பெரும் உபாயமாகும்.

(தொடரும்.)



"ஏன் அப்பா! முனியா! வெளியிலே கூப்பிட்டது யாருடா?"

"சாமி! டாக்டருங்களாம்!"

"ஏண்டா! உள்ளே வரச் சொல்லக் கூடாது?"

"நீங்கதான் இன்னைக்கு உடம்பு சரியில்லே, யரோடேயும் பேசப் போறதில்லேன்னு சொன்னீங்களே. அதான் இல்லேன்னு போகச் சொல்லி விட்டேன்."

செப்டம்பர் வெளியீடு

கோவை — எடிசன் தஞ்சை — ராஜாராம்
மதுரை — நியூ சினிமா சிதம்பரம் — நடராஜா
காரைக்குடி — கிருஷ்ணு சேலம் — ஓரியண்டல்
திருச்சி — வெல்லிங்டன் பெங்களூர் — ஆபரா

இவைகளில்

சத்யவாணி

எதிர்பாருங்கள்

நடிகர்கள்

Miss K. L. V. வசந்தா S. D. சுப்பையா
„ U. R. ஜீவரத்னம் M. R. ராதா
„ P. S. ஞானம் G. M. பஷீர்
S. S. கோக்கோ

டைரெக்ஷன் : **S. நொடானி**

மறவாதீர்கள்

தயாராகிறது :—

சதி மகாநந்தா

விவரங்களுக்கு :

மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட்,
சேலம்.

சத்யவாணி, சந்தனத்தேவன் பாடல்களை ஒடியன் ரிகார்டில் கேளுங்கள்.

கோபி
டான்சிக்

மஹாபலிபுரம் போனது

(சீதாபதி)

'என்ன வாழ்க்கை வேண்டிக் கிடக்கிறது? வளைய வளைய பத்தடி ரூமுக்குள்ளே சுற்றிச் சுற்றி வந்துகொண்டு, ஒரு அநுபவமா, ஒரு ருசிகரமான சம்பவமா? இந்த லக்ஷணத்திலே சமூகத்தைப் பற்றி வாரி வளைத்து பேனா முனையிலே கொண்டு வந்து கொட்டிடணும் என்று....

'அது மட்டுமா? இலக்கியத்தை ஒரே நாளில் அப்படியே அலக்காக உச்சாணிக் கொப்பிலே கொண்டு போய் வைத்து, பிரமாதமாக....

இந்த ரீதியான சம்பாஷணை சாம்பிளைக் கேட்டவுடனேயே இது எழுத்தாளர்கள் சம்பாஷணை, அதிலும் மறுமலர்ச்சி சம்பாஷணை என்பது உடனே புரிந்திருக்கும். மறுமலர்ச்சி என்று ஏன் சொல்கிறேன் என்றால், உள்ளிப்பூண்டு விவகாரம் முதல் ஐரோப்பிய விவகாரம் வரையில் தற்போது ஒரு மறுமலர்ச்சி தோரணை இருப்பதை நமக்கு உரித்துச் சொல்லக் கூடியவர்கள் அநேகம் பேர்கள் இருக்கிறார்கள். மறுமலர்ச்சி என்றாலே அவர்களுக்கு அது, தனியாகப் பட்டு விடும். ஓஹோ! மறுமலர்ச்சி விஷயமா இது, என்று ஒரு விதமாக உதடுகளை திருகிச் சுளிக்கும் போது, அதுவும் ஒரு தனி ராங்கியாகத்தான் இருக்கும். மறுமலர்ச்சி விஷயம் கிடக்கட்டும்; சொல்ல வந்தது வேறு.

இந்த இரண்டு குரல்களோடு இன்னும் இரண்டு குரல்களும் சேர்ந்தன.

'ஆமாம், சிதம்பரம் இதுவரையில் எழுத்துக்களை உதிர்த்துக் கொட்டி இருக்கிறோமே, கற்பனையிலிருந்து வெடித்துக் கிளம்பி வந்ததாக எல்லாம் சொல்லிக் கொண்டு—அதெல்லாம் இப்போது எனக்கு சுத்த அபத்தமாகப் படுகிறது. எவ்வளவு கற்பனையைக் குடைந்து எழுதினால் தான் என்ன? வாழ்க்கையில் அநுபவத்தை ஒட்டிப் பார்த்து எழுதினதிலே உள்ள உயிர், ஒரு ரியாலிஸம்—சனியன் இந்த ரியாலிஸத்துக்கு தமிழிலே ஒரு சரியான வார்த்தை அகப்படவில்லை. இதோடு மட்டும் தானா? இன்னும் ஆயிரம் வார்த்தைகளுக்கு! வாழ்க்கையில் அநுபவம் நிறைய வேண்டும்; புதுப்புது இடங்கள்; புதுப் புது விஷயங்களை பார்ப்பதற்கும், அறிவதற்கும் சந்தர்ப்பம் வேண்டும். அப்போதுதான்....'

இந்த மாதிரி சம்பாஷணையை வாசகர்கள் பிரசங்கமாக தப்பர்த்தம் செய்து கொள்ளக் கூடாது. எழுத்தாளர்கள் கூட்டத்தில் நீங்கள் கொஞ்சநேரம் உட்கார்ந்து

'விமோசன'த்தில் ஹேமலதா

பெண் பிடிக்கும் 'பாம்பாட்டி'!

இந்தக் கிணற்றிற்கும் 'விமோசனம்'

சாந்த சக்குபாய் !

பார்த்திருந்தால் தெரியும். எனக்குத் தெரியும் இந்தமாதிரி அவஸ்தையில் ஒருதரம் இரண்டுதரம் அகப்பட்டுக்கொண்ட நம் போன்ற சாதாரண மனிதர்கள், எழுத்தாளர்களோடு சம்பந்தம் வைத்துக் கொள்ளாத வாசகர்களாகவே இருக்கப் பிரியப்பட்டதுண்டு. ஒரு எழுத்தாளர் பேச்சு முடியும்வரை மற்ற எழுத்தாளர்கள் குறுக்கிடும் சம்பிரதாயம்

எழுத்தாளர் கோஷ்டியிலே நம் போன்ற சாதாரண மனிதர்களுக்கு, அவர்களோடு ஈடு கொடுத்துப் பேச விஷயங்கள் அகப்படுவது ரொம்ப சிரமம். நாம் பொதுவாக எதையாவது பற்றி சிலாகித்தோ கண்டித்தோ பேசுவோம். அவர்களோ நுணுக்கங்களிலேயே நுழைந்து நுழைந்து அலசிப்பார்த்துக் கொண்டிருப்பார்கள் பூதக்கண்ணாடியை வைத்துக்கொண்டு.

கிடையாது. அப்படிக் குறுக்கிட்டவர் உத்தம எழுத்தாளராக மாட்டார்.

அதெல்லாம் நமக்குப் புரியாதது. மறுமலர்ச்சி என்றால் புரியாதது என்றுகூட ஒருவர் ஒரு அகராதி

யில் புது அர்த்தம் வாய்மொழியாகச் சேர்த்திருக்கிறார். அட, மறுபடியும் மறு மலர்ச்சி விஷயம்!

ஸ்ரீ சிதம்பரம் நான்காவதாகக் கலந்துகொண்டார் 'என்னத்தைப் பிரமாதமாக எழுதிவிட்டோம், அப்படி வாழ்க்கையைப் பிழிந்து எடுத்துக் கொடுத்து விட்டதாகச் சொல்வதற்கு? நமக்கு வாழ்க்கை வீட்டுக் குழாயடியும், டிராம்ரோடும், ஆபீஸ் நாற்காலியும், பீச் மணலும், எலெக்டிரிக் விளக்கும்தான். ஒரு நிலா இரவை, இருட்டை, தென்னந் தோப்பை, கட்டை வண்டி பிரயாணத்தை நான் பார்த்ததில்லை. எனக்கு ஞாபகம் வந்து வயது இருபத்தி எழு வீண்.'

இந்த ரீதியிலேதான் சம்பாஷணைகள். ஒரு முடிவு இருப்பதாகவே தெரியாது. ஹோட்டலில் இலையில் இவர்கள் உட்காரும் போது, பாத்திரத்தின் அடிகளில், பரிமாறுபவர்களில் கரண்டி சப்தம் பலமாக உராயும்படியிருக்கும் என்றால், பார்த்துக்கொள்ளுங்களேன். இவ்வளவு தூரம் வயிற்று பசி தெரியாமல் இலக்கியப் பசி இருப்பதுதான் எழுத்தாளர்களுக்கு ஒரு தனிச் சிறப்பு.

இப்படி நான்கு பேர்கள் கூடி தினம் கொட்டம் அடிப்பார்கள் என்று தெரிந்திருந்தால் அந்த வீட்டை மொத்தமாக எடுத்துக் கொண்டிருப்பவர் தனக்கு மிஞ்சினது போக ஒரு பகுதியை ஸ்ரீ ராஜத்திற்கு குடக்கூலிக்கு விட்டிருக்க மாட்டார் என்பது எனக்கு நிச்சயம்.

ராஜம் அந்த எழுத்தாளர் கூட்டத்தில் அதிக வருஷங்களை கணக்குப் பார்த்தவர். இரண்டு வருஷ அலைச்சலுக்குப் பிறகுதான் அவருக்குப் பத்திரிகை ஆபீஸில், ஆசிரியப் பகுதியில் ஒரு பதவி கிடைத்திருந்தது. மனைவியைக் கொண்டுவந்து விடும்படி தன் மாமனருக்குக் கடிதம் எழுதியிருந்தார். ஆனால் ஊரிலே மாதா மாதம் அடுத்து வந்துகொண்டிருந்த சில விசேஷ சந்தர்ப்பங்கள் புது வீட்டில் அடுப்பு மூட்டுவதற்கு வசதி மறுத்துக்கொண்டிருந்தன.

இந்த நிலையில்தான் குடித்தனப் பாங்குக்காக அமர்த்தி இருந்த வீடு, ஹோட்டல் அறை வாசனை கலந்து வீசினது. ராஜத்தோடு அந்த இரண்டு மாதங்களாக ஒட்டிக்கொண்டு இருப்பவர் ஸ்ரீ. செல்வம். ஸ்ரீ செல்வம் முதல் முதல் குடித்தனம்போடுவதற்குப் பிரமாதமாக முஸ்தீப்புக்கள் செய்து கொண்டிருந்தார். அங்கொன்றும், இங்கொன்றுமாகப் பத்திரிகைகளில் வெளிவரும் கதைகள், கட்டுரைகளுக்கு ஆசிரியர்கள் அனுப்பும் 'காம்ப்ளிமெண்டரி' பிரதிகளின்மீதுதான் அவர் நம்பிக்கை. அந்த மரியாதைப் பிரதிகளோடு கூடிய சீக்கிரம் சொர்ண புஷ்பமும் அனுப்பும் காலம் வரும் என்று திடமான அபிப்பிராயம். அந்த நினைப்பில்தான் அவர் சென்னை வாசம்.

எழுத்தாளர் ஸ்ரீ. சுந்தரம் அப்படியில்லை. எழுத்தில் அவருக்கு நம்பிக்கை இருந்தாலும், எழுத்தாளர் உலகத்தில் அவருக்கு நம்பிக்கை இல்லை. உபாயமாக வேறொரு வகையில் ஜீவனத்துக்கு வகை தேடிக்கொண்டவர். ஸ்ரீ செல்வத்தைப்போல் தற்கா

லத்துக்கு 'மரியாதைப் பிரதிக ளோடு' திருப்தி அடையாதவர்.

ஸ்ரீ சிதம்பரம் கலையின் உரு வம். புஸ்தகம், 'புஸ்தகம்' இது தான் அவரது நினைவு. தின சரி வாழ்க்கை ஓட்டத்துக்கு குறை வில்லை. ஆகையால் புஸ்தக அலமாரி உயர்ந்து பெருத்துக்கொண்டே வந்தது. எழுதுவது அவருக்கு ஒரு பொழுது போக்கு. ஆனால் பல எழுத்தாளர்களைப் போல் அவர் பத்திரிகை ஆபீஸ் படிகளைத் தாண்டி உள்ளே சென்ற தில்லை. தபால் மூலம்தான் தொடர்பு.

எழுத்தாளர் கதாநாயகர்களைப் பற்றிக் கொஞ்சம் நீளமாகசொல்லி விட்டேன். மன்னிக்க வேண்டும். சம்பாஷணையைத் தொடர்வோம்.

'உதாரணமாக ஸ்டீவன்சனை எடுத்துக் கொள்ளுங்களேன். என்ன அழகான இயற்கை வர் ணனை' என்றார் ஸ்ரீ. செல்வம்.

'சாமர்சட் மாகாமுக்குத்தான் என்ன? எவ்வளவு 'திரில்லிங்' காகச் சம்பவங்களைச் சொல்லு கிறார். எல்லாம் பழுத்த அநு பவம்,' என்றார் ராஜம்.

ஸ்ரீ சிதம்பரம் ஆத்திரமாகப் பேசினார். 'பேசாமல் எழுது வதையே நிறுத்திவிடலாம். கிணற்றுத் தவளை மாதிரி வீட்டுக் குள்ளேயே நடக்கிறதையே மாற்றி மாற்றி எழுதுவதைவிட வாழ்க்கையின் பல அம்சங்களை யும் பற்றி எழுதுவதற்கு வேண் டிய சரக்கு இல்லாமல் எழுதிப் பிரயோசனம்?'

இப்படி வாழ்க்கை அநுபவம், பிரயாணம், எழுத்து இவைகளு க்குஉள்ள உறவை ஒருவர் மாற்றி மற்றொருவர் அழுத்தமாகப் பேசி க்கொண்டே போனதில், சுந் தரத்தின் உணர்ச்சிப் பெருக்கு எல்லை மீறினது. முகத்தை ரொம்பத் தீவிரமாக வைத்துக் கொண்டார். எழுத்தாளர் இல் லையா? முகத்தில் திடத்தைக் காட்டும் அறைகுறியாக, படம் பிடித்ததுபோலக் காட்டினார். படுக்கையில் சாய்ந்து கொண்டி ருந்தவர் விறுட்டென்று எழுந்து உட்கார்ந்தார். 'நாளைக்கு மஹா பலிபுரம் புறப்படுகிறது! என்ன சொல்லுகிறீர்கள்? தயாரா,' என்று சவால் விட்டார். வாழ்க்கை யில் பிரயாணம் இல்லாததால்தான் தமிழில் எழுத்தாளர் நிலை ஒரு மாதிரியாக இருக்கிறது என்ற நினைப்பு அவரை உடனே ஒரு ஆரம்பம் செய்யத் தூண்டியது.

சிதம்பரம் அந்தச் சவாலுக்குத் தயங்கவில்லை. 'ஓ! நான் தயார். இப்போதே அவர்களைக் கேளுங் கள். சரி சொல்ல வில்லையே இன் னும்' என்றார்.

சுந்தரமும், சிதம்பரமும் ராஜம் முகத்தைப் பார்த்தனர். ''என்ன ராஜம் சொல்லுகிறீர்கள் இரண்டு நாள் திட்டம்.''

ராஜம் ரொம்ப அமரிக்கையாக, ஆனால் உணர்ச்சி வேகம் காட் டாமல் 'பார்ப்போம்,' என்றார்.

'என்ன இழுக்கிறீர்களே! ஒத் திப் போடுவதில் பிரயோசனம் இல்லை. நாளைக்கு கட்டாயமாக என்று இழுத்து நிறுத்தினர் சுந்தரம்.

'பணத்துக்கு வழி பண்ணிக் கொள்ளவேண்டாமா?' என்றார் ராஜம்.

'அதைப்பற்றி உங்களுக்கு என்ன கவலே? நான் பார்த்துக் கொள்கிறேன். புறப்பட்டுப் போவோம். சரி! என்ன செல்லம்?'

'போகவேண்டியதெல்லாம் சரி தான், ஒப்புக் கொள்கிறேன். நான் இப்போது தயாரில்லே' என்று அவர்கள் எதிர்பார்த்த தற்கு மாறுகச் சொன்னர் செல்வம்.

சுந்தரத்தின் முகத்தில் ஒரு கடுப்பு ஏற்பட்டது. "எப்போதுமே செல்வம் இப்படித்தான். முன்றேடு காலாகச் சேர்வதில்லே. அவருக்கு இயற்கை அது. நிச்சயம்தானே! வரவில்லேயே?"

உதட்டைப் பிதுக்கினர் செல்வம். சுந்தரத்தின் பிரயாணத் திட்டத்தின்மீது ஒரு அவநம்பிக்கை தொனி அந்தக் குரலில் இருந்தது. "நிச்சயமாக நாங்கள் போய்விட்டுத்தான் வரப்போகிறேம்" என்றுர் சுந்தரம் இன்னும் உறுதியோடு.

செல்வம் மறுத்தது சிதம்பரத்துக்கு ஆத்திரம் வந்தது. 'சுந்தரம்! அவருக்கு ரொம்ப வாழ்க்கை அநுபவம் ஏற்பட்டிருக்கிறது. பல வருஷங்கள் கிராமத்திலேயே வாசம் செய்திருக்கிறராம். ஆகையால் அவைகளைப் பேணுவிலிருந்து கொட்டினல் போதும் என்று அபிப்ராயம் போலிருக்கிறது' என்றுர் சிதம்பரம்.

'ஆமாம்! அதுதான், என் ஊருக்குப் பக்கத்திலே இருக்கு ஒரு மலே. கோடைக்கு ஆயிரக் கணக்கான கார் அதிலே ஏறிப் போகும் எங்கிருந்தெல்லாமோ வந்தது. நான் பார்த்ததில்லே இன்னும். எல்லாம் சௌகர்யமும் சந்தர்ப்பமும் வேண்டும்' என்றுர் செல்வம்.

'சரி. பேசிக்கொண்டே இருப்பதில் பிரயோஜனம்? நாளை சாயங்கிரம் சந்திப்போம் ஒரு மாதத்துக்கு முந்தி வெளியான கதைக்கு.......... பத்திரிகையில் பணம் கொடுக்கவில்லே. அதை வாங்கிக் கொண்டு வருகிறேன். நாளை மறுநாள் விடியற்காலம் புறப்படுவோம்' என்றுர் சுந்தரம். சிதம்பரம் தயார் என்றுர். செல்வம் பேசவில்லே. ராஜம் மௌனமாக தலேயை அசைத்தார். இப்படியாக மஹாபலிபுரம் பிரயாணம் திட்டமானது. அதன் பிறகு எழுத்தாளர்கள் நால்வரும் பத்திரிகை, ஆபீஸ்களிலிருந்து முன் சொன்னபடி 'மரியாதை பிரதி'களாக வந்து, அறை முழுவதும் சிதறிக்கிடந்த பத்திரிகைக் குவியல்களிடையே மூழ்கி விட்டார்கள்.

மறுநாள் சாயங்கிரம் அதே சமயம். ராஜம் ஒரு கடிதத்தை கையில் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். செல்வமும் இருந்தார். நண்பர் சிதம்பரம் வழக்கம் போல வந்து சேர்ந்தார். அவர் வந்தவுடனே, 'சுந்தரத்தை எங்கே காணும் இன்னும்' என்பதுதான் அவருடைய முதல் கேள்வி. 'மத்தியானமே இங்கே வந்துவிடுவேன் என்றுரே. மஹாபலிபுரம் போக வழி பண்ணுவதற்கு பிரம்மப் பிரயத்தனம் செய்துகொண்டிருக்கிறரோ என்னமோ!'

'இது...நீங்க இரண்டு பேரும் தான் போய் விட்டு வரணும். நான் வரமுடியாது நாளைக்கு,' என்று இழுத்தார் ராஜம். சிதம்பரம் திகைத்து அவரைப் பார்த்தார். 'ஏன் ?'

"கடிதாசி வந்திருக்கிறது. ஸ்டேஷனுக்கு போகணும். நாளை எக்ஸ்பிரஸிலே ஆத்திலே வருகிறார்கள், அதனாலே என்ன? உங்க திட்டம் நடக்கட்டும்" என்றார் ராஜம்.

'அப்புறம் இப்போ எங்கே மஹாபலிபுரத்துக்கு? ஒருத்தனை போகணுமானால் முந்தியே போயிருக்க மாட்டேனா. நானு போராக......'

'செல்வமும் வருவார் எனக்கு பதில். போய்விட்டு வாருங்களேன்.'

'முதலில் சுந்தரம் வரட்டும் ஏற்பாட்டைக் கேட்டுக் கொள்வோம். அப்புறம் மேலே,' என்றார் செல்வம். சொல்லிக் கொண்டிருக்கும் போதே சுந்தரம் பூனை நடை நடந்து உள்ளே நுழைந்தார். மஹாபலிபுரம் போகும் ஏற்பாடு விஷயமாக சுந்தரம் என்ன சொல்லப் போகிறார் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். வந்து அரைமணி நேரம் ஆயிற்று. சுந்தரம் தன்னோடு கொண்டு வந்திருந்த ஒரு புஸ்தகப்பற்றிய இலக்கிய ரசனையில் இறங்கிவிட்டாரே தவிர, பிரயாண திட்டத்தைப் பற்றி மூச்சே விடவில்லை.

சிதம்பரத்துக்கு பொறுக்கவில்லை. செல்வம் இதை கவனித்து விட்டார். 'என்ன சுந்தரம், மஹாபலிபுர விஷயம்......'?

'சுந்தரத்தின் தொனி ரொம்ப சுருதி குறைவாக இருந்தது. விஷயம் எல்லோருக்கும் புரிந்து விட்டது. 'ஏன், கதைப் பணத்துக்கு என்ன, சொல்லிப் போனீர்களே,' என்றார் செல்வம்.

'இல்லை பணத்துக்குப் பதில் ஒரு மூட்டை பிரதிகளை எடுத்துக் கொண்டு போகச் சொல்வார்கள் போலிருந்தது. நான் வந்து விட்டேன்' என்றார் சுந்தரம்.

'பேஷாப் போச்சு,' என்றார் சிதம்பரம்.

"மரியாதை பிரதியாவது வந்து கொண்டிருக்குமோ இல்லையோ" என்றார் ராஜம். 'அதற்கு மோசம் வராதே ?' சிரிப்புகள் கலந்தன.

'சரி, சிதம்பரம் மட்டும் தான் பிரயாணத்துக்கு இப்போது தயாராக இருப்பதாகத் தெரிகிறது' என்றார் ராஜம்.

'போதுமே பிரயாணப் பேச்சு. வேறே ஏதாவது பேசுங்கள். இந்தப் பத்திரிகை 'கெட்டப்', அதிலே அவ்வளவாக மனோபாவம் சரியாக விழல்லெ! இந்த மாதிரி பேசி பொழுதை போக்குகிறதை விட்டு விட்டு பிரயாணமாவது...' என்றார் சிதம்பரம் ஆத்திரமாக! அந்தக் குரலில் பிரயாணம் தடைபட்டுப் போன பரிபூரண ஏமாற்றம் தெளிவாக தெரிந்தது.

'இப்படி நடக்கும் என்று எனக்கு கௌளி முன்னமே சொல்லியது; அதனால்தான் முதலிலேயே சொல்லிவிட்டேன். அதிலும் சுந்தரம் ஏற்பாடு செய்வதென்றால்...' என்று இழுத்தார் செல்வம்.

சுந்தரம் அவரை ஒரு தரம் முறைத்துப் பார்த்தார். 'முட்டுக் கட்டை போடுகிற ஆள்களை வைத்துக் கொண்டு, திட்டம் போட்டோமே அதைச் சொல்ல வேண்டும்? என்றார் சுந்தரம். செல்வம் சும்மா இருப்பாரா? 'ஓஹோ உங்கள் தோல்விக்கு நான் முட்டுக்கட்டை என்ற சாக்கா? போகிறது. இருக்கிற வாழ்க்கை அனுபவம் போதும். அதை உபயோகப்படுத்திக் கொள்வோம். வாழ்க்கையை பிழிந்து கொடுப்போம். அதில் உள்ள உயிர், ரியாலிஸம்......' ஸ்ரீசெல்வம் இதை முடிக்க வில்லை.

'போதும் நிறுத்துங்கள். தார் ரோட்டைப் பற்றி எழுதுங்கள்! கூவம் நதியை வர்ணியுங்கள்! அதன் வாசனையையும் சேர்த்து ஹைகோர்ட் கட்டிடத்தை படம் பிடியுங்கள்! வெட்கக்கேடு! செக்கு மாட்டு வாழ்க்கைதான் நமக்கு மிச்சம். இடம் விட்டு அசையாமல் தேங்கின குட்டை மாதிரி, உட்கார்ந்து திரும்பத் திரும்பத் திரும்ப ஒரே விஷயத்தை அலுப்பு இல்லாமல் நித்யம் பேசிக் கொண்டு இருப்பதுதான் சேகரிக்கிற அனுபவம். மறுமலர்ச்சிக்காரர்கள் கூடி தீர்மானிக்கிற விஷயம் எப்படி இருக்கும்? கருவிலேயே சிதைய வேண்டியதுதானே' என்று பட படப்பாக பேசிக் கொண்டே வெளியே புறப்பட எழுந்தார் சிதம்பரம்.. எல்லோரும் தொடர்ந்தார்கள்.

கமலா

(சத்யவதி கேளட்)

கமலாவுக்கு நான்கு வயது. தகப்பனார் டாக்டர். பூனா ஆஸ்பத்திரியில் ரண சிகித்சைக்காக அமர்த்தப்பட்டிருந்தார். அவருடைய பங்களா, நகரத்தின் கோடியில் ஒரு குன்றின் மேலிருந்தது. அதே குன்றில் பங்களாவை அடுத்து சுங்க வீடும் இருந்தது. அந்தக் குன்றுக்குக் கீழே கிராமத்திலிருந்து நகரத்துக்குப் போகும் கரடுமுரடான பாதை சென்று கொண்டிருந்தது.

சுங்கத்து வேலையாள் முகம்மதியன். அவன் பெயர் ரசூல். அவன் நிறம் கோதுமை வெள்ளை. பட்டுப் போல பிரகாசிக்கும் அவனுடைய வெண்மையான நீண்ட தாடி, அவன் பழுத்த கிழவன் என்பதை உணர்த்திற்று. அவன் பெரிய ஆள். ஆனால் வயோதிகத்தால் கொஞ்சம் கூனிப்போயிருந்தான்.

இந்த சுங்கத்தில் வேலைக்கு வருவதற்கு முன்பு, ரசூல் கச்சேரியில் ஒரு அதிகாரியிடம் வில்லைச் சேவகனா யிருந்தான். அடிக்கடி அதிகாரியுடன் பிரயாணம் போய்க் கொண்டிருப்பான். பாவம்! அவன் மனைவியும், ஒரே குழந்தையும் பூனாவில் தனியே யிருப்பார்கள். ஏதாவது உடம்புக்கு வந்தால் 'ஏன்' என்று கேட்பார் கிடையாது. ஆனால் பணம் என்னவோ தவறாமல் வந்து கொண்டிருக்கும்.

பணம் என்ன விதியின் போக்கைத் தடுக்க முடியுமா? ஒரு தடவை நகரில் பிளேக் வந்தது, ரசூல் காம்பில் இருந்தான், மனைவி படுத்து விட்டாள். குழந்தை தாயின் பாலைக் குடித்தது—குடித்துக் கொண்டே இருந்துவிட்டது. அங்கு ரசூல் பணம் சம்பாதிக்கப் போயிருக்கிறான். இங்கு சர்வமும் நாசமாய்ப் போய்விட்டது.

இந்த சம்பவத்திற்குப் பிறகு ரசூல் சாந்தியைத் தேடி யலைந்து கொண்டிருந்தான். வேலை என்னவோ செய்துகொண்டுதானிருந்தான். ஆனால் மனம் ஒன்றிலும் லயிப்பதில்லை. கடைசியில் பென்ஷன் வாங்கிக் கொண்டான். நான்கு ரூபாய் வருமானத்தோடு தன் சூன்ய வீட்டில் காலத்தைக் கடத்தி வந்தான்.

ஒரு நாள் ரசூலின் பக்கத்து வீட்டுக்காரன் சொன்னான். "அண்ணே! இந்த மாதிரியே எப்படி வாழ்க்கையை நடத்துவாய்? சுங்கத்தில் ஒரு வேலை காலி யிருக்கிறது. சும்மா உட்கார்ந்தே வேலை செய்யலாம். அதை ஏற்றுக் கொள். மனசுக்

கும் நல்லா இருக்கும், பொழுதும் போகும்" என்றான். அவன் சொன்னபடியே ரசூல் அதை ஏற்றுக் கொண்டான். வேலையில் சேர்ந்து ஒரு மாதங்கூட ஆக வில்லை. கமலாவின் தகப்பனார் சென்னையிலிருந்து மாற்றிக் கொண்டு பூனாவுக்கு வந்து வேலை ஏற்றுக் கொண்டார்.

பனிகாலம். சூரியோதயம் ஆகிவிட்டது. ரசூல் கட்டிலில் உட்கார்ந்து வெய்யிலில் காய்ந்து கொண்டிருந்தான். கமலாவும் வீட்டுக்கு முன்னால் வெய்யிலில் விளையாடிக்கொண்டிருந்தாள். ரசூலுடைய மனம் விரும்பிற்று, அக் குழந்தையை கட்டிக் கழுவி உச்சி முகர்வோமென்று. அவன் அவளைப் பல தடவைக் கூப்பிட்டான். கமலா அவனைக் கடைக் கண்ணால் பார்த்துச் சிரித்தாள். ஆனால் அவனிடம் வரவில்லை.

சுங்கத்துக்கு எதிரில் ஒரு இலந்தை மரமிருந்தது. பழங்கள் சடசடவென்று கீழே விழுந்துகொண்டிருந்தன. இதைக் கண்டு கமலாவின் நாக்கில் ஜலம் ஊறிற்று. ரசூல் இதை அறிந்து கொண்டான். நல்ல பழங்களாகப் பொறுக்கி அவளுக்குக் காண்பித்தான். அவளுக்குப் போக இஷ்டந்தான்; ஆனால் சங்கோஜம். அதே சமயம் அவள் தகப்பனார் வெளியே வந்தார். கீழே ரசூல் பழங்களைக் காண்பிப்பதையும், பெண் சங்கோஜப் படுவதையும் அவர் பார்த்து விட்டார். அவருக்கு சிரிப்பு வந்தது. "ஏனம்மா, போயேன் பழம் வாங்கிக்கொள்ளு போ" என்று அன்புடன் கூறினார்.

ரசூல் பங்களாவை நோக்கி வந்தான். குனிந்து டாக்டருக்கு சலாம் செய்தான். அவர் ஆஸ்பத்திரிப் பக்கம் போய்விட்டார். கிழவன் தன் கட்டிலில் உட்கார்ந்து கமலாவை மடியில் வைத்து விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தான். அன்றிருந்து அவர்களிருவருக்கும் நெருங்கிய நட்பு உண்டாகி விட்டது. விடிந்ததோ இல்லையோ ஒரே ஓட்டமாக ஓடி பாபாவை யடைந்து, அவன் கட்டிலில் உட்கார்ந்து கமலா தமாஷ் பார்த்துக்கொண்டிருப்பாள்.

பெரிய பெரிய எருதுகள் பூட்டிய வண்டிகளில் கிராமத்திலிருந்து புகையிலை பாரம்போகும். மணிகளின் ஓசை கேட்டவுடனேயே, ரசூல் 'நில்' என்று சத்தம் போடுவான். வண்டிகள் நின்றுவிடும். ரசூல் குழந்தையைத் தோளில் தூக்கிக்கொண்டே கீழே இறங்கி பாரத்தைப் பரிசோதிப்பான். பிறகு பணத்தை வசூலித்துக்கொண்டு வண்டிகளைப் போகவிடுவான்.

இதே மாதிரி நாள் முழுதும் குதிரை வண்டி, மோட்டார், சைகிள் இவை போய்க்கொண்டேயிருக்கும்.

கமலா ரசூல் பாபாவிடம் வெகு குஷியாக இருப்பாள். தாயார் அவளை எத்தனைதரம் சாப்பிடக் கூப்பிட்டாலும் இவள் போனால் தானே? காதிலேயே போட்டுக் கொள்ளமாட்டாள். "போ அம்மா, என் கண் இல்லியா? அம்மா கூப்பிடறாள். சாப்பிட்டுவிட்டு வா, போ" என்று அன்போடு பாபா சொல்லுவான். இதற்கெல்லாம்

அவள் மசியமாட்டாள். பாபா அவளை வீட்டுக் கூடம்வரை கொண்டுபோய் விட்டால்தான் சாப்பிடப் போவாள்.

எப்பொழுதாவது சாப்பிட்ட வுடனே கமலா வராவிட்டால் அவன் மனம் கேட்காது. சத்தத் துக்குமேல் சத்தம் போட்டு அவ ளைக் கூப்பிட்டு, "இதோ யானை வந்திருக்கின்றன ஓடிவா" என் றழைப்பான். இதைக் கேட்டு அவள் ஓடிவந்து 'யானை எங்கே?' யென்றால், அவை எத் தனை நேரம் காத்துக்கொண்டிருக் கும். நீ வரவில்லை. அவைகள் போய்விட்டன. இனி நீ நேரங் கழித்து வராதே" என்பான் ரசூல்.

கமலா பாபாவின் மடியில் படுத்துக் கொள்வான். அவனுடைய தாடியைத் தடவி விளையாடிக் கொண்டே கேட்பாள்: "தாத்தா உன் தாடி எவ்வளவு வெள்ளையாயிருக்கிறது. என்ன வழவழப்பு? ஏன் பாபா என் மயிர் அப்படி யில்லை" என்று. ரசூல் அவன் தலையைக் கோதிக்கொண்டே சொல்வான்: "நான் கிழவன்; நீ குழந்தை." கமலா 'நானும் கிழவியாவேன் என்றவுடனே ரசூல் குறுக்கிட்டு, "சீச்சி நீ கிழவியாகாதே. உனக்குச் சின்னச் சின்ன பல் இருக்கிறது. ஆதலால் நீ பாதாம், இலந்தை எல்லாம் தின்ன முடியும். பார் எனக்குப் பல் இல்லை. நான் இவையொன்றும் தின்ன முடியாது. நீ கிழவியாகவே வேண்டாம்," என்று சொல்வான்.

கமலாவுக்கு இளகிய மனது. பண்டிகைகளின்போது தன் வீட்டில் பண்ணிய அல்வா, வடை இவைகளைத் தன் பாபாவுக்குக் கொடுத்து உண்ணச் செய்வாள். கமலா கையால் கொடுத்தவைகளைத் தின்றுகொண்டே பாபா ஆகாயத்தைப் பார்த்து மனதிற்குள் சொல்லிக் கொள்வான்: "அல்லா! இந்த வயதில் நீ என்னை இவ்வளவு சந்தோஷமாக வைப்பாய் என்று நான் எதிர் பார்க்கவில்லை. நான் சாகும் வரை இந்த சுகத்தை அனுபவிக்க அருள்புரி. இந்தச் செல்லத்தோடு என்னை மனமார விளையாட விடு" என்று.

இப்படி இன்பமாக இரண்டு வருஷங்கள் கழிந்தன. அதே இலந்தப் பழக்காலம். கமலா கட்டிலில் உட்கார்ந்து காலை ஆட்டிக் கொண்டிருந்தாள். ரசூல் நல்ல பழங்களைப் பொறுக்கி அவள் காலடியில் உட்கார்ந்து ஒவ்வொன்றாக அவள் வாயில் பழங்களைப் போட்டுக்கொண்டிருந்தான். சாயங்காலம் ஐந்து மணியடித்தது. கமலாவின் பிதா உலாவுவதற்காக மோட்டாரில் புறப்பட்டார். குழந்தையைப் பார்த்ததும் கூப்பிட்டார். அவள் போனால் தானே? "ஹூ ஹூ, நான் வரமாட்டேன். பாபாவுடன்தான் இருப்பேன்" என்று சொல்லி விட்டாள். "இங்கேயே விளையாடிக்கொண்டிருக்கட்டும், விட்டு விடுங்கள்" என்றான் ரசூல்.

டாக்டர் ஏதோ சொல்ல வாயெடுத்தார்; தொண்டையடைத்துக் கொண்டது. பேசாமல் திரும்பி விட்டார். கமலா ஓடி வந்து பாபாவின் மடியில் உட்கார்ந்து கொண்டாள். டாக்டர் போன சிறிது நேரத்திற் கெல்லாம் அவருடைய ஆள் வந்து, "பாபா, இன்றைக்குப் பூரா—ஒருநாள் நன்றாக விளையாடிக் கொள்ளும். எஜமானர் டில்லிக்கு மாற்றப் பட்டிருக்கிறார். நாளை காலை புறப்படுவார். இன்றுதான் உத்தரவு வந்தது" என்றான். ரசூலின் கண்கள் மூடிக்கொண்டன. நீர் மளமளவென்று வழிந்தது. சில துளிகள் கமலாவின் கன்னத்தில் விழுந்தன. அவள் பாபாவின் முகத்தைப் பார்த்தாள். கொஞ்ச நேரம் பார்த்துக்கொண்டே யிருந்தாள். பிறகு ஆத்திரத்தோடு கேட்டாள்: "என்ன! என்ன!! ஏன் அழுகிறாய்?"

குழந்தை பயந்ததைக் கண்டு பாபா கண்ணைத் துடைத்துக் கொண்டான். "ஏண்டீ கண்ணே! நீ என்னை— உன் பாபாவை— விட்டுவிட்டு டில்லிக்குப் போயிடுவையே, எவ்வளவு தூரம்...!"

"அம்மா சொல்ரு — டில்லிலே பெரிய பார்க் இருக்காம். அங்கே பெரிய பெரிய சிங்கம் இருக்காம். கரடியிருக்காம், சின்னச் சின்ன குருவி யிருக்காம். பாபா நான் உன்னைக் கூட்டிண்டு போவேன். நீ என்னைத் தோள்மேலே தூக்கிக்கோ. நான் உனக்கு எல்லாத்தையும் காட்டரேன். அப்பறம் இரண்டு பேரும் இங்கேவந்து இலந்தைப் பழம் தின்போம் அல்லவா" என்ருள் கமலா.

ரசூல் ஒரு பெருமூச்சு விட்டான். "அடே அப்பா—என்ன வெள்ளை மனம்! கமலா என் கண்ணே நீ திரும்பி வரமாட்டாய். அங்கேதான் இருப்பாய். பெரிய வளாவாய். காலேஜில் படிப்பாய். என்னை மறந்துவிடுவாய்."

இதற்குள் தாயார் கமலாவை சாப்பிடக் கூப்பிட்டாள். இரவு வந்துவிட்டது! வேலையாள் அவளைக் கூட்டிப்போக வந்தான். அவள் மறுத்தாள். வலுக்கட்டாயமாக குழந்தையைத் தூக்கிக்கொண்டு போனுன். அவள் வீறிட்டு அழுதாள். தாயார் அவளைச் சமாதானப் படுத்த உணவு ஊட்டினுள். விளையாட்டுக் காண்பித்தாள். தாயாரைக் கட்டிக்கொண்டே கமலா தூங்கி விட்டாள்.

ரசூல் அந்த இரவை அழுதே கழித்தான். எப்படியோ பொழுது விடிந்தது. அவன் இலந்தை மரத்தடியில் கடந்துகொண்டிருந்தான். சூரியன் உதித்தாய் விட்டது. ஆனுல் தினம் போலக் கமலா வரவில்லை. அங்கிருந்தே பார்த்தான். தாயார் அவளை அலங்கரித்துக் கொண்டிருந்தாள். இனி ரசூலால் கமலாவைக் காணுது ஒரு நிமிஷங்கூட இருக்க முடியாது. "கமலா! வா வா" என்று ஆனந்தம் பொங்கக் கூப்டான். அவளும் ஓட யத்தனித்தாள். ஆனுல் விட்டால்தானே!

வாசலில் மோட்டார் நின்று கொண்டிருந்தது. சாமானெல்லாம் ஏற்றியாய் விட்டது. இப்பொழுது வீடு காலி. கமலாவும் அவள் தாய் தந்தையரும் வந்து மோட்டாரில் ஏறிக்கொண்டார்கள். ரசூல் பைத்தியம் பிடித்தவனைப்போல, இரண்டு கைகளையும் நீட்டிக்கொண்டு மோட்டாரை நோக்கி ஓடி வந்தான். "கமலா... என் கண்ணே......நீ போகிருயா ...என்னை விட்டு விட்டு......ஒரு தடவை என் மடியில் உட்கார்ந்து விளையாடு வா, வா," என்றழைத்தான்.

கமலா அழுதுவிட்டாள். "நான் பாபாவிடம் போகிறேன். மோட்டாரில் வரல்லே. என்னை விட்டுவிடு," என்று கதறினுள்.

டாக்டர், ரசூலை சமாதானப் படுத்தினுர். அவனும் மோட்டாரிலேயே கொஞ்ச நேரம் கமலாவுடன் கொஞ்சிவிட்டு விலகி நின்று கொண்டான். கமலா அழுதுகொண்டே யிருந்தாள். மோட்டார் புறப்பட்டு விட்டது.

"பாபா, பாபா என ஆர்வத்தோடு அழைக்கும் கமலாவோ

இங்கு இல்லை. அன்றே ரசூல் அந்த வேலையை விட்டு விட்டான். நமாஸ் படிப்பது, முழந்தாளிட்டு அல்லாவை வணங்குவது, மசூதியை சுத்தஞ் செய்வதுமாக நாளைக் கழித்தான்.

பனிரண்டு வருஷங்கள் கழிந்துவிட்டன. "இனியும் ஏன் நான் உலகில் துன்பப்பட வேண்டும்? என்னை எதற்காக இனியும் உயிரோடு வைத்திருக்கிறாய்? நான் அஜ்மீர் மசூதிக்குப் போகிறேன். டில்லியில் கமலாவைக் காண்பேன். அவள் எப்படியிருக்கிறாளோ—எவ்வளவு பெரியவளாகிவிட்டாளோ, எந்த வகுப்பில் படிக்கிறாளோ" என்றெல்லாம் அவன் எண்ணங்கள் ஓடின.

டெல்லி வந்து ஊரெல்லா மலைந்து கடைசியில் டாக்டர் வீட்டை யடைந்தான். சேகவன் வந்து, 'பெரியாரே! என்ன வேண்டும்' என்று கேட்டான்.

"ஒன்றும் வேண்டாம், கமலாவைக் கொஞ்சம் கூப்பிடு," என்றான் ரசூல். சேவகன் சிரித்துக் கொண்டே கூடத்திற்குப் போனான். ஞாயிற்றுக்கிழமை கமலா தன் கலாசாலை நண்பன் வரவை எதிர்பார்த்துச்சோபாவில் சாய்ந்திருந்தாள். சித்திரங்களில் அவள் கண்கள் மாட்டிக்கொண்டன. "யாரோ உங்களைக் காண வந்திருக்கிறார்" என்று அவன் சொன்னான்.

கமலா வெளியில் வந்தாள்.

"கமலா! என்னை அடையாளந் தெரியவில்லையா? பனிரண்டு வருஷங்களுக்கு முன் நீ பூனாவில் இருந்தாய். அப்பொழுது குழந்தை. என்னை பாபாவென்று கூப்பிடுவாய். நான் உனக்கு இலந்தைப் பழந்தருவேன். இதையெல்லாம் மறந்துவிட்டாயா."

கமலா பதில் கூறினாள்—"அதெல்லா மிருக்கட்டும். இப்பொழுது இங்கு ஏன் வந்தாய். சட்டென்று சொல்லு. எனக்கு நேரமில்லை."

"பெண்ணே! நான் என்னுடைய கமலாவைப் பார்க்க வந்தேன். அவள் இப்பொழுது எவ்வளவு பெரியவளா யிருக்கிறாள்—என்ன படிக்கிறாள் யாருடன்......"

இதற்குள் ஆள் வந்து, "காலேஜிலிருந்து அய்யா வந்து கூடத்தில் காத்திருக்காரு" என்றான்.

"சரி, நீ என்னைப் பார்த்தாச்சல்லவா. நான் போகிறேன்" என்று சொல்லிக் கொண்டே அவள் திரும்பினாள்.

"போ அம்மா போ. நான் எல்லாம் இன்று பார்த்தாய்விட்டது. கடவுள் உனக்குச் சந்தோஷத்தைத் தாட்டும்" என்று சொல்லி தடியைக் கையில் எடுத்துக் கொண்டான். பல ஆயிரம் ஆசிர்வாதங்களைக் கூறிக்கொண்டே அஜ்மீருக்குப் போகும் பாதையில் செல்லலானான்.

(சி. ரா. சேஷாத்திரி ஹிந்தியிலிருந்து மொழி பெயர்த்தது.)

———

காசி யாத்திரை

ஒரு கதம்பம்

சதயம்

1

நெட்டை ரெங்கன் ஆயிரத்தில் ஒருவன் என்றால் பொருந்தும். அவன் உருவம் ஒருபுற மிருக்கட்டும்—உயர்ந்த மூங்கில் கம்பு போன்ற தேகத்தின்மேல் தென்னங் குறும்பை போன்ற தலை—அதில் உச்சிக் குடுமி. அவன் பேச்சும், மாதிரியுமே தனி!

'வாழையிலே கொல்லையிலே
நடந்து வந்தான் நெட்டை
ரெங்கன்'

என்று அவன் சிரித்துக் கொண்டு பாடும் பொழுது கேட்பதைக் காட்டிலும் பரமானந்தம் வேறில்லை. தட்டுச் சுற்று வேஷ்டியின் மேல் துண்டை சதா இடுப்பில் கட்டியிருப்பான், சுவாமி தரிசனம் செய்யப் போகிறவன் போல. தெருவில் போகும் போது கையைத் தட்டிக் கொண்டும், தலையை ஆட்டிக்கொண்டும் தான் போவான். அடியெடுத்து வைத்தானானால் அவனுடன் யாரும் நடக்க முடியாது. எட்டு மணிக்கு எங்களூரை விட்டுப் புறப்பட்டானானால், பத்து மணிக்குப் பனையபுரம் போய் விடுவான்—பதினைந்து மைல்!

"நெட்டை ரங்கா, பஜனை மடத்தில் வைத்தியர் இருப்பார், கூட்டிக்கொண்டு வாயேன்" என்று நீங்கள் சொல்லி முடிப்பதற்குள் பஜனை மடம் போய்ச் சேர்ந்து விடுவான். வைத்தியர் எதிரே வந்தாலும் நிற்கமாட்டான்!

பிச்சு சாஸ்திரி பரம வைதிகம்—பரம தரித்திரம். ஆனால் அதிகாலை ஸ்நானமும் அந்திவேளை பஜனையும் தவறமாட்டார். கரடு தட்டிப்போன குட்டைப் பேர்வழி. கரகர வென்ற தொண்டை. 'பிரளயபயோதி ஜலே,' என்று அவர் அஷ்டபதியைப் பாடினால் போதும்—ஈசுவரன் "உனக்கென்ன வேண்டும், பக்தா, உடனே சொல்!" என்று வந்து விடுவார். ஏகாங்கி! பாவம், ஆற்றங்கரையிலும் பஜனை மடத்திலும் அவரைப் பார்க்கணும் மாறி மாறி.

அப்பு பதினைந்து வயது பயலானாலும் படிப்பு என்ற வாசனையே அற்றவன். ஒரு கால் லேசாக நொண்டி. வாயால் சதா ஏதாவது துரும்பையோ கல்லையோ போட்டுக் கொண்டேதான் இருப்பான். கண்ட விடமெல்லாம் கூரையைப் பிய்ப்பதுதான் வேலை அவனுக்கு. பேசும் வார்த்தைகளை யெல்லாம் இரண்டு தரம் சொல்லுவான்—முதல் தரம் மத்திய ஸ்தாயியிலும் பிறகு மந்

திர ஸ்தாயியிலுமாக, ஒருவனை வைதானானல் "அயோக்கியப் பயலே!" என்று உரக்கச் சொல்லிவிட்டு உடனே மெள்ள 'அயோக்கியப் பயலே' என்று சொல்லிக் கொள்வான்.

இந்த மூன்று பேரும் காசி யாத்திரை போவதென்று தீர்மானித்து தஞ்சாவூர் ஸ்டேஷனில் டிக்கட்டு வாங்க வந்துவிட்டார்கள் என்றால், அது ஆச்சரியம் தானே?

கெட்டை ரெங்கன் கையில் கொஞ்சம், காசுண்டு. முப்பது வயது ஆகியும் கலியாணம் ஆகவில்லை. எதனாலோ? கலியாணத்தில்தான் காசி யாத்திரை கிடையாது. நிஜமாகவே காசி யாத்திரை செய்து விடுவது என்று தீர்மானித்து விட்டான் போலிருக்கிறது.

"பிச்சு மாமா காசிக்கு வரேளோ?" என்று கேட்டு வைத்தான் ஆற்றங் கரையில்.

"தயார்" என்று அப்பொழு ஜால்ராவையும் சொம்பையும் கையில் எடுத்துக் கொண்டார் அவர்.

"மாமா நானும் வரட்டுமா?" என்றான் அப்பு அதையே திருப்பிச் சொல்லிக்கொண்டு.

பார்த்தான் கெட்டை ரெங்கன். கையாள் ஒருவன் இருக்கட்டுமென்று 'சரி' யென்றான்.

ராத்திரியே பயணம். கெட்டை ரங்கன் சில்லறையெடுத்து அப்புவிடம் கொடுத்து "டேய், அப்பு, ஆபத்துக்குக் கையில் இருக்க வேண்டும். கால் ரூபாய்க்கு ரவை வாங்கிக்கொண்டு வா!" என்றான்.

"இதோ!" என்று ஓடினான் அப்பு. ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் குண்டு நிறைய வாங்கிக் கொண்டு வந்து கூடத்தில் கொட்டினான்.

"என்னடா இது!"

"ரவை!"

"கோலி குண்டு எதற்கடா?" என்று கெட்டை ரங்கன் அப்புவைப் பளாரென்று கன்னத்தில் விட்டான்.

"நீங்கள் தானே சொன்னேள்?"

"கோதுமை ரவைன்னு சொன்னேன்!"

2

ஸ்டேஷனில் ஏகக் கூட்டம். கெட்டை ரங்கன் டிக்கட் கொடுக்கும் ஜன்னலண்டை அரைமணி நேரம் நின்று பார்த்தான். கூட்டம் குறைகிற வழியாக இல்லை. சட்டென்று கொஞ்சம் முண்டிக் கொண்டு முன்னே போய், தன் தலையை டிக்கட் கொடுக்கும் சந்திற்குள் நுழைத்து விட்டான். தலைதான் சின்னதென்றேனே!

"ஓய், யாருங்காணும் நீ! எடும் தலையை வெளியே!" என்று

டிக்கட் கொடுப்பவன் ரூல் கம்பை எடுத்துத் தலையில் போட்டான். நெட்டை ரங்கன் அசையவில்லை. டிக்கட்டை வாங்கிக்கொண்டு தன் தலையை வெளியே எடுத்தான். இந்த சம்பவத்திற்குப் பிறகு தான் எஸ். ஐ. ஆர். ஜன்னல் சந்துகளை சிறிதாக்கி விட்டார்கள்.

வண்டியிலும் கூட்டம் தாங்க முடியவில்லை. எப்படியோ அவர்கள் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள். மூட்டை வைக்கும் பலகை பிச்சு சாஸ்திரிக்கு எட்டவில்லை. மடி சஞ்சியை ரங்கன் வாங்கி அதில் வைத்தான்.

"மாமா, என்ன மடிசஞ்சி கனக்கிறது?"

"ரங்கா, சும்மா இரு!"

அப்புவுக்கு ரயிலில் கூரை பிடுங்க இடமில்லை. ஆகையால் வண்டி யோரங்களையெல்லாம் கிள்ளிக் கிள்ளிப் பார்த்துக் கொண்டே இருந்தான்.

பிச்சு சாஸ்திரி கண் மூடித் தூங்கி, பக்கத்திலிருந்த ரங்கன் மேல் முட்டிக் கொண்டார். ரங்கன்

'வண்டியிலே புகை வண்டியிலே
ஏறிக்கிட்டான் நெட்டை ரங்கன்'

என்று பாட்டை மாற்றி முணுமுணுத்துக் கொண்டிருந்தான்.

மேலே பலகையில் வைத்திருந்த மடிசஞ்சி மூட்டை ரயில் ஆட்டத்தில் மெல்லமெல்ல நகர்ந்து கீழே உட்கார்ந்திருந்த ஒருவர் மண்டையில் விழுந்த பொழுது நக்கென்று சத்தம் கேட்டது.

"ஐயோ! தலை போச்சு!' என்று ஒருவர் அலறினபொழுது "அப்பப்பா, கால்விரல் போச்சு!"

என்று எதிரிலிருந்தவர் கத்தினார்.

"யார் மூட்டை ஐயா இது?" என்று ஆத்திரத்துடன் பல குரல்கள் கேட்டன.

பிச்சு சாஸ்திரி விழித்துக் கொண்டு விஷயத்தைக் கண்டு கல்லுப் பிள்ளையார்போல கம்மென்று இருந்து விட்டார். வாயைத் திறந்தால் மண்டையுடைந்துபோய் விடுமென்று மூவரும் கண் மூடிக் கொண்டார்கள்.

இப்படி அனுதைப் பொருளாகப் போன மடிசஞ்சியை ஒருவர் அவிழ்த்துக் கொட்டினர். ஜால்ரா ஜோடி, சின்ன சொம்பு, பலகைப் பாறைக்கல் ஒன்று,எல்லாம் கீழே விழுந்தன. சாஸ்திரி வேஷ்டி துவைக்கும் கல்!

மடிசஞ்சி சாமான் அதோகதி தான் என்று பிச்சு சாஸ்திரி தீர்மானம் செய்து கொண்டுவிட்டார். காசி யாத்திரை ஆரம்பம்!

(தொடரும் பாருங்கள்)

ஸ்ரீரஞ்சனி டாக்கீஸார் தயாரிப்பு

Exhibitor: Apply to:

GEMINI PICTURES CIRCUIT, 141, Broadway, Madras.

குரலும் பதிலும்

(கு.ப. ராஜகோபாலன்)

முகுந்தன் வெறி பிடித்தவன் போல கட்டிலின்மேல் உட்கார்ந்திருந்தான். பக்கத்தில் ராதை நின்றுகொண்டிருந்தாள். கடைசியாக அறையை விட்டுச் சென்ற புரோகிதர் தன் பின்னால் கதவைச் சாத்திக்கொண்டு போனார். எழுந்துபோய் அதைத் தாளிடக் கூடத் தோன்றாமல் அவன் இடிந்துபோய் உட்கார்ந்திருந்தான்.

ராதை ஒரு அழகிய கோபப் பார்வையுடன் அவன் சும்மா உட்கார்ந்திருப்பதைக் கடிந்துகொள்பவள் போல மெதுவாகச் சென்று கதவைத் தாளிட்டாள். பிறகு கட்டிலண்டை வருவதற்காக காலெடுத்து வைக்கும் போதே கண்ணெடுத்து ஒருதரம் புருஷன் முகத்தைப் பார்த்தாள். அதில் ஒருவிதமான உணர்ச்சியையும் அவள் காண முடியவில்லை. ஒரு விதமான திகில் அதில் இருந்தது போல அவளுக்குப் பட்டது. பாதி வழியில் மேஜையருகே அப்படியே நின்று போய்விட்டாள்.

முகுந்தன் அவளைப் பார்த்தான் கண்களால்; அந்தப் பார்வையே, ஒவ்வொரு தடவையும் அவன் பார்த்தபொழுது, அவன் எண்ணங்களை எங்கோ கொண்டு போயிற்று. ஆகையால் அவளை அவன் உண்மையில் பார்க்கவே வில்லை. அவன் எண்ணங்கள் அவளைப் பார்க்க விடவில்லை.

அன்று காலை அவளை முதல் முதலில் பார்த்ததிலிருந்துதான் அவனுக்கு அந்த திக்பிரமை. கலியாணமான பிறகு எட்டு வருஷங்கள் கழித்து அப்பொழுது தான் அவளை அவன் பார்த்தான். அவளுக்குப் பத்து வயது; அவனுக்கு இருபது—கலியாணத்தின் பொழுது.

கலியாணத்திற்கு வந்திருந்த அவன் நண்பன் சுந்தரம் கேலி செய்தான்.

"இந்த எலிக்குஞ்சை எங்கேயடா தேடிப் பிடித்தாய்? இன்னும் பத்து வருஷமாகுமே அது விட்டிற்கு வருவதற்கு? உன் முழங்காலுக்கு வருவாள்! பேஷ்!"

ஆமாம், அன்று எலிக்குஞ்சு போல இருந்தவள் சாந்தி முகூர்த்தத்தன்று காலையில், மணையின் முன்பு, அவன் பக்கத்தில் குதிரை போல நின்றாள். அவள் உடலில் பொங்கி நின்ற இளமையின் ஜ்வாலை அவன்மேல் சூடாக அடித்தது; அவன் உடல் குன்றிற்று; உள்ளம்கூட குன்றிற்று. அவளுடைய மேனியின் மினுமினுப்பு அவன் கண்களைக் கூசச் செய்தது.

கலியாணம் ஆன தினத்தன்று சம்பந்திகளிடையே மனஸ்தாபம் ஆரம்பித்தது. காரணங்கள் என்னவென்று சொல்லவேண்டிய அவசியமே இல்லை. முகுந்தன் மாமியார் வீட்டுப் பக்கம் எட்டிப் பார்க்கக்கூட அவன் தாயார் அனுமதிக்கவில்லை. ஒவ்வொரு சமயத்தில் முகுந்தனுக்கு மட்டும் மனச்சாட்சி வந்து முன் நிற்கும். ஆனால் தாயாரின் கோபத்திற்குப் பயந்து அவன் மனைவி ஒருவள் தொட்டுத் தாலி கட்டினவள் இருந்தாள் என்பதையே மறந்தான். முதலில் அவளுக்கு ஆறுதலாகக் கடிதங்கள் ரகசியமாக எழுதிக்கொண்டிருந்தான். அந்த விஷயம் தாயாருக்கு எப்படியோ தெரிந்து விட்டது. பிறகு அதையும் நிறுத்திவிட்டான்.



ராதை அப்பொழுது ஒல்லியாகவும் இளைத்தும் சின்னஞ் சிறுமியாகவும் இருந்ததால் முகுந்தன் மனதில் கலியாணத்தின் போது ஒருவிதமான கிளர்ச்சியும் ஏற்படவில்லை. அவளை ஒரு குழந்தை போலத்தான் பாவிக்க முடிந்தது அவனால். நலங்கின் போதும், ஊஞ்சலின் போதும் அவன் எதிர்பார்த்திருந்த புல்லரிப்பும் ஆனந்தமும் அவனுக்கு ஏற்படவில்லை. ராதையின் கை அவன் கையில் துடிக்கவில்லையென்று அவன் மனதில் சலிப்பேற்பட்டது. அவளுடைய முகத்தில் ஆவலோ, உணர்ச்சியோ ஒன்றும் அவனுக்குத் தென்படவில்லை. சரிதான், சுந்தரம் சொன்னதில் ஒன்றும் பிசகில்லை என்று தீர்மானித்துவிட்டான்.

அவன் கலாசாலைப் படிப்பு முடிந்து வேலையில்லாமல் ஊர் சுற்றினதும், பொழுதை வெட்டியாகக் கழித்ததும், எழுதினதும், சிறை சென்றதும் மூன்று வருஷ காலங்கள். அதன் பிறகு அவன் சர்க்கார் வேலையில் அமர்ந்து வாழ்க்கையின் உன்னதத் தூண்டுதல்கள் எல்லாம் அற்றுப் போய், சுகத்தையும் அதைக் கொடுக்கும் என்று அவன் எண்ணின பணத்தையும் தேடி பொறி தட்டித் திரிந்த காலத்தில் பழைய சுந்தரம்தான் அவனுக்குத் தோழன்.

வருமான வரி இலாகா குமாஸ்தாவாக முகுந்தன் ஏராளமாகச் சம்பாதித்தான். அவன் தாயாரும் தகப்பனரும் கிராமத்தில் இருந்தார்கள். இவனை யாரும் கேட்பாரில்லை, அவ்வளவுதான். சுந்தரத்தின் உதவி கொண்டு அதபாதாளத்தில் இறங்கினன்.

அந்த வாழ்வில் அவன் ஒன்றையுமே விலக்கென்று வைத்துக் கொள்ளவில்லை. மற்றொரு மூன்று வருஷங்களுக்குப் பிறகு உடம்பும் மனதும் உடைந்து வியாதிஸ்தனக அந்த சக்தியிலிருந்து வெளியேறினன்—ஒரு தினுசாக. அதற்கப்புறம்தான் அவனுடைய தாயார் தான் செய்த பிசகை அறிந்தாள். பிள்ளையை ஒரு குடித்தனத்தில் வைக்க வேண்டுமென்று மறு விவாகப் பிரயத்தினங்கள் செய்தாள். ஆனல் முகுந்தனுடைய நடத்தையைப் பற்றிய விவரங்கள் எங்கும் பரவி விட்டன. பெண்களை வைத்துக் கொண்டு திண்டாடுகிறவர்கள் கூட கிட்டவர யோசித்தார்கள்.

பிறகு அவன் தாயார் சம்பந்திகளுடன் சமரசப் பேச்சு நடத்த ஆரம்பித்தாள். மற்றுமோர் வருஷம் கழிந்த பிறகு சம்பந்திகளும் சாந்தி முகூர்த்தம் செய்து பெண்ணைக் கொண்டு விட சம்மதித்தார்கள்.

அன்று காலையில் ராதையைப் பார்த்த பிறகுதான் தன் மனைவியென்று ஒருவள் தனியாக எங்கோ, வளர்ந்து கொண்டு வந்திருக்கிருள் என்பது ஒரு ஆச்சரியமான செய்திபோல் அவள் மனதில் தாக்கிற்று. அதை உணர்ந்ததும் அவனை அறியாமல் அவன் உடல் நடுங்கிற்று.

அவன் பத்மா வீட்டில் பகலும் இரவுமாகக் கழித்த காலமெல்லாம் ராதையின் அழகு அதன் பாட்டிற்கு, அதை அறியாமல், தான் வளர்வதே வீண் என்பதை உணராமல், வளர்ந்து கொண்டு வந்தது! அந்த வாழாவெட்டி நிலைமையால் தான் அந்த வளர்ச்சியைத் தடுக்க முடிந்ததா? தடை பட்ட கொடி நுனி எங்காவது சுற்றி வளைந்து வெளியேறி விடுவது போல, ராதையின் யௌவனம் எப்படியோ தலையெடுத்து நின்றது. அவள் துக்கத்தையும் மீறிக்கொண்டு.

நிமிஷத்திற்கு நிமிஷம் ராதை திரும்பித் திரும்பிக் கணவன் முகத்தைக் கவலையுடன் கவனித்தாள். தன் அவள் ஆவற் பெருக்கையே அடக்க முயலுபவள் போல் உதட்டைப் பலதடவை கடித்துக் கொண்டாள். ஆனல்! நின்ற இடத்தை விட்டு நகரவில்லை அவள்.

மின்சார விளக்கு தவிர குத்து விளக்கு கூட ஒன்று அறையில் இருந்தது. அதிலிருந்து எண்ணெய் குறைந்து திரி படர்ந்து தெரிய ஆரம்பித்தது. அதை உற்றுப்பார்ப்பவன் போல முகுந்தன் தன் பார்வையை அதில் செலுத்தினன். அது அந்த சந்தர்ப்பத்தில் தன் வாழ்க்கை இன்பத்தையே சூசனை செய்து காட்டுவதுபோல் இருந்தது.

சற்று தூரத்தில், பூமியே வெடித்து அதிலிருந்து வெளியே வந்த ஒரு வியப்புபோல ராதை விசித்திரமாக நின்ருள். முகுந்தன் விளக்கையும் அவளேயும் மாறி மாறிப் பார்த்தான்.

ஆமாம்! அன்று கலியாணத்தின் பொழுது முகுந்தன் ஒரே துடிப்பாக இருந்தான்; ராதை அதற்குப் பதில் சொல்லத் தெரியாத பச்சைக்குழந்தையாய் இருந்தாள். அவள் இன்று சௌந்தரியத்தைச் சுமந்து மெய் நிறைந்த யுவதியாக நின்ருள் அவனை எதிர் பார்த்து. ஆசையோடு எழுந்தோடி அவளே வரவேற்க அவனுக்கு அப்பொழுது அவா இல்லை, ஊக்கம் இல்லை.

பெண்ணழகு அளிக்கும் பெரு மகிழ்ச்சியை அவன் அடைந்து அனுபவத்துச் சலித்துப் போய் விட்டான். பெண்ணின் பார்வை —ராதையின் பார்வை—இப் பொழுது அவன்மேல் விழுந்த பொழுது வெறும் கரிக்கட்டையின்மேல் தான் விழுந்தது. முன் போல பளிச்சென்று பிரதிபலிக்கும் கண்ணுடிமேல் அல்ல. அவளுடைய இளமையின் அழைப்புக் குரல் அவன் காதில் பட்டது; அதற்குப் பதில் குரல் கொடுக்க அவன் தொண்டையில் தொனிப்பு இல்லை.

தீராதென்று மெள்ள எழுந்து போய் முகுந்தன் ராதையின் கையைப் பற்ற முயன்ருன். அது வரை சிலைபோல நின்றவள், ஏதோ பாம்பு தன்னைத் தீண்ட வந்ததுபோல சடக்கென்று ஒதுங்கி நின்ருள். ஏன் அப்படிச் செய்தாள் என்பது அவளுக்கே தெரியாது. அந்தக் கணம் வரை முகுந்தன் ஏன் எழுந்து பாய்ந்து வந்து தன்னைக் கைப்பற்றவில்லை என்று பிரமித்து நின்றவள், திடீரென்று அவன் அருகே வந்ததும் விலகி நின்ருள்.

"ராது, கிடக்கிறது, வா!" என்று முகுந்தன் மறுபடியும் நெருங்கினன்.

"வேண்டாம்!" என்று வாய்க்கு வந்ததைச் சொன்னள் ராதை.

"என்ன வேண்டாம்!" என்று முகுந்தன் ஆச்சரியப் பட்டுக் கொண்டு பின் வாங்கி நின்ருன்.

தான் சொன்ன வார்த்தையை முகுந்தன் திருப்பிச் சொன்ன பிறகு தான் தான் சொன்னது என்ன வென்று ராதைக்குத் தெரிந்தது.

முகுந்தனுக்கு அதிக நேரம் நிற்க முடியாது. திடீரென்று படுக்கையில் போய் உட்கார்ந்து கொண்டான். அப்பொழுது எதிரே யிருந்த நிலைக்கண்ணுடியில் அவன் உருவம் தெரிந்தது.

அதைக் கண்டதும் அவன் முகம் விகாரமடைந்தது. கொஞ்ச தூரத்தில் அம்மன்போல அலங்காரத்துடன் நின்ற ராதையையும் பார்த்தான்.

"வேண்டாம்!" என்று அவள் அர்த்தத்துடன் சொன்னளோ இல்லையோ அவனுக்கு அந்த வார்த்தையில் அர்த்தம் தோன்றிற்று. அவனுக்குக் 'குப்' என்று வியர்த்தது.

"ராது! இங்கே வாயேன்!" என்ருன் முகுந்தன் அயர்ந்த குரலில்.

ராதையின் முகம் அனல்பட்ட பூப்போல வாடிவிட்டது ஒரு நிமிஷத்தில். மாலையைக் கழற்றி மேஜைமேல் போட்டாள்.

"ராதா வரமாட்டாயா?"

"இத்தனை வருஷங்கள் ஆயிற்ரு இந்த வார்த்தைகளைச் சேர்ப்பதற்கு?" என்ருள் ராதை.

"ராதா—"

"என் பெயர் நினைவில்லே, இப்பொழுதுதான் ஞாபகம் வந்தது—"

"என்னை மன்னி, ராதா!"

"இப்பொழுதேது நினைவு வந்தது, திடீரென்று?"

அவன் வாய் அடைத்து விட்டது.

"இவ்வளவு வருஷம் கூப்பிட வேண்டாம் என்று தோன்றினல் என்னை எதற்காகக் கலியாணம் செய்து கொண்டீர்கள்?"

"என் தாயார்—"

"உங்கள் தாயாரா என்னைக் கலியாணம் செய்து கொண்டாள்? பத்து வருஷங்கள்! அடடா! நீங்கள் கூப்பிடுவீர்கள் என்று ஏங்கி ஏங்கி,பொங்கி என் உள்ளம் அடங்கிப்போய்விட்டது. இன்று குரலில் ஆர்வம் இல்லே!"

முகுந்தன் தலே குனிந்து உட்கார்ந்து கொண்டிருந்தான். அவள் சொன்ன ஒவ்வொரு சொல்லிலும் எவ்வளவு உண்மை இருந்தது?

"வா!' என்று நீங்கள் உண்மையாகக் கூப்பிட்டாலல்லவா நான் முன்னல் அடி எடுத்து வைக்க முடியும்? இத்தனை நாள் இருந்தீர்களே திரும்பிப் பாராமல், இன்றேன் வந்து என்னை ஏமாற்றுகிறீர்கள்? நான் பாட்டிற்கு அடைத்துக்கொண்டு கிடந்தேனே, என்னை ஏன் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறீர்கள்?

"இப்பொழுதுதான் ராதா—"

"நீங்கள் இஷ்டப்பட்டபொழுது கூப்பிடலாமோ— வேண்டா வெறுப்பாக?" என்று கோபத்துடனும் வெறுப்புடனும் கேட்டாள் ராதா.

முகுந்தன் திடீரென்று படுக்கையை விட்டுக் கீழே இறங்கினன்.

"ராதா, உன்னையும் கெடுத்தேன், நானும் கெட்டேன். என்னை மன்னித்துவிடு. நான் உன்னைத் தொடக் கூடாதவன். அன்று நம் கைகள் கலந்த குற்றத்தோடு நிற்கட்டும். களங்கமின்றி செழித்திருக்கும் இந்த சௌந்தரியத்தைத் தீண்ட என் கை கூசுகிறது......ஆமாம்! உன்னைத் தொட யோக்யதை அற்றவன் நான். வெளியே எல்லோர் முன்பும் சொல்ல தைரியமில்லை எனக்கு...இதோ உன்னிடம் சொல்லிவிட்டேன்!..."

முகுந்தன் உணர்ச்சி மேலிட்டு கட்டிலில் குப்புற விழுந்து அழுதான்.

ராதா ஸ்தம்பித்துப் போய் நின்ருள் அப்படியே.

வைத்திய கோவிந்தன்

18691

வரதன்

சலிப்பில்லாமல் அறுத்துத் தள்ளும் ஸர்ஜன்களும், எண்ணிக்கைக் கணக்கில்லாத எல். எம். பீக்களும், உழைப்பும் சிறப்பும் மிகுந்த யுனானி வைத்தியர்களும் சித்தர்களும் மலிந்திருக்கும் இந்நாளில் எங்களூர் வைத்தியக் கோவிந்தனை நீங்கள் பார்த்ததுண்டா என்றால், சிறிது நகைப்புக்கு இடமேற்படும். இருந்தாலும் அவனிடம் உள்ள சில அரிய குணங்களை நீங்கள் அறிந்து கொள்ள அவகாசம் ஏற்படுமானால், பிறகு உங்கள் நகைப்பு ஆச்சரியமாக மாறிவிடும்.

பண்டிதர் என்ற பட்டத்தைத் தன் பெயருக்குப் பின் ஒட்டிக்கொள்ளாமல் அடக்கத்துடன், ஆனால், அதிக பிராபல்யத்துடன் வாழ்ந்து வந்த ‘வெங்கிட்டனு’டைய செல்வக் குமாரன் வைத்தியக் கோவிந்தன். வைத்திய பரம்பரையில் வாழையடி வாழையாக வந்த ‘தன்வந்தரி’யின் தனயன் கோவிந்தன். வைத்தியம் என்ற ஒரே ஒரு பிதுராஜ்ஜித சொத்தை வெகு ஜாக்கிரதையாய்ப் பாதுகாத்து, அதன் மூலம் தன்னுடைய அந்தஸ்தை சமூகத்தில் தேடிக்கொண்டு மிகுந்த செல்வாக்குடன் வாழ்ந்து வருபவன் எங்கள் கோவிந்தன்.

‘பரட்டை’த்தலை, பாந்த குழி விழுந்த கண்கள், பெரிய காதுகள், கூர்மையான மூக்கு, ‘கதுப்பு’ வற்றிப்போன கன்னங்கள், வெற்றிலைப் பாக்கு மென்ற வாய், வெள்ளிக் கம்பி போன்ற தலைமயிர், நான்காய் மடித்துத் தோளில் போடப்பெற்ற துண்டு, கணுக்காலுக்கு மேலே தொங்கும் அரை வேஷ்டி, கனத்த மடி. இந்த அடையாளங்களுடன் கும்பிடுகின்ற கோலத்தோடு, கூனல் உள்ளவன் மாதிரி குழைந்து குழைந்து நடந்து வருகின்றானே, அவன் தான் கோவிந்தன்.

மடித்துத் தோளில் போட்டிக்கும் துண்டு, நம்மிடம் நூற்றைம்பது வருஷ காலமாய் விடாமல் குடிகொண்டிருக்கும் அடிமைத்தனத்திற்குப் போதிய அத்தாட்சி. ஏன்? மிராசுதார்களையோ, ‘ஐயமாரையோ’ அவன் கண்டுவிட்டால் அவனது கைகள் தாமாகவே பளிச்சென்று துண்டை எடுத்துக் ‘கமுக்கட்டைக்கு’க் கொண்டு வந்து விடும். கூனல் முதுகும் வயதின் வினையல்ல, அடிமைத்தனத்தின் அறிகுறியே. அவனது தொழில் போட்டிக்காரர்களில் சிலரைப்போல வண்டியிலோ, சைகிளிலோ, காரிலோ ‘கடுசாக’ வராமல், பாதரக்ஷைகூட இல்லாத பாதசாரியாய் வந்து தொழில் நடத்தி வருவது, அவன் குடும்பத்தாருக்குத் தொன்று தொட்ட வழக்கங்களில் ஒன்று.

கனத்த மடியில் என்ன வைத்துக்கொண்டிருக்கின்றான் என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறீர்களோ! கிழிந்துபோன ஒரு அடி சதுர

முள்ள பட்டுத் துணியால் சுற்றப்பட்ட வெகு காலத்திய வெற்றிலைச் செல்ல மாகிய மருந்துப் பெட்டியும், குப்பையை அலங்கரிக்கக்கூட உதவாத ஒன்றிரண்டு பழைய காகிதமும், வாடல் வெற்றிலையில் எழெட்டும், பல பாடாங்குத் துண்டுகளும் இருப்பதைக் கண்குளிரக் காணலாம்.

'டாக்டரே! வாருங்கள்; உட்காருங்கள்' என்றெல்லாம் மரியாதையாய் நாம் வரவேற்றால், கோவிந்தனுக்கு ஏற்படும் சங்கோசத்துக்குக் கங்குகரை யிருக்காது. "சாமி, சாமீ! அந்தப் புது கௌரவம் ஒன்றும் எனக்கு வேண்டியதில்லை. எப்பொழுதும் போல "கோவிந்தா! வாடா; கையைப் பாரடா" என்று சொல்வதுதான் நல்லது. ரொம்ப அழகுங்கூட. "புது வெள்ளம், பொய், புது கௌரவம், பிறர் பொருள், எல்லாம் நிலைத்து இருக்காது. சமயத்துக்கு உபயோகப்படாது" என்று சொல்லும் அவனது வார்த்தைகளில் எவ்வளவு அனுபவம் நிறைந்து ஒலிக்கின்றது.

"கோவிந்தா! உடம்பு சரியாயில்லை. கையைப்பாரு" என்று சொன்னால், அருகில் வந்து அமரிக்கையாய் அமர்வான். மருந்துப் பெட்டியைச் சுற்றியிருக்கும் கிழிசல் பட்டுத்துணியை எடுத்து உதறிவிட்டு கைமேல் போட்டு, நடு மூன்று விரல்களால் இரத்தத் துடிப்பை ஊன்றிப் பார்ப்பான். சிறிது நேரம் நிதானமாய் ஆலோசனை செய்த பிறகு "சாமீ! பித்தத்தில் இத்தனை கொதிப்பு எங்கிருந்து ஏற்பட்டது?" மண்டையில் கனம், தலைக் கிறுகிறுப்பு, கால், கண் இவைகளில் கனத்த 'ஒச்சல்', வயிற்றுப் பிரட்டல், வாந்தி எடுக்குமோ என்ற தோற்றம் முதலிய அடையாளங்களை ஒவ்வொன்றாய் நம்மிடமிருந்து வருவித்து விடுவதில் பயிற்சி பெற்ற உபாத்தியாயரை விட, ஒரு டிகிரி ஏற்றந்தான். "சாப்பாட்டில் மந்தம் ஏற்படும். தொட்ட காரியத்தில் எல்லாம் அலுப்புத் தோன்றும் நினைக்கும் எண்ணங்கள் எல்லாம் சுழன்று கொண்டே போகும். நினைத்த எண்ணம் ஏற்படுதல் அருமை. 'பத்துத் தப்படி' கூசாமல் நடக்க முடியாது" என்றெல்லாம் நம் உடம்பில் ஏற்பட்டிருக்கும் கோளாறுகளை ஒன்று விடாமல் உரைத்திடுவான்.

பிறகு மருந்துப் பெட்டியைத் திறந்து அதிலுள்ள பல சீசாக்களில் ஒன்றை எடுத்து ஒரு தரம் குலுக்கிவிட்டுக் கிழிந்த காகிதத் துண்டில் வெள்ளைப் பொடியில் ஒரு பாகமும் கறுப்புப் பொடியில் இரண்டு பாகமுமாய்க் கொட்டிக் கலப்பான். பழுப்புச் சர்க்கரை வீட்டிலிருந்து கொண்டு வரச் சொல்லுவான். சர்க்கரையில் சூர்ணத்தைப்போட்டு ஒன்றாக்கி, எழுந்து நம்மை பார்த்துக்கொண்டு நிற்பான்.

"சாமீ! கிழக்கு நோக்கி உட்காருங்கள்" என்று நம்மிடம் கூறிவிட்டு சில வார்த்தைகளைக் கண்மூடின வண்ணமாய்ச் சொல்வான். அவையென்ன என்கின்றீர்களா? "காளீ, கறுப்பாயி, காட்டேறி, பேச்சியாயி உங்கள் எல்லோரையும் நம்பியே ஐயருக்கு இம்மருந்தைக் கொடுக்கின்றேன். நீங்கள் தான் வியாதியைச் சொஸ்தப்படுத்த வேண்டும்" என்று சொல்லும்பொழுது, கண்ணிமைக்குள் கோவிந்தன் தனது பேச்சியாயியுடன் நேரில் பார்த்தே சம்பாஷிக்கின்றானோ என்ற சந்தேகம் உதிக்கும்.

"கோவிந்தா! நீ சொன்ன அடையாளங்கள் எல்லாம் அனேகமாய் உடலில் தெரிகின்றன. அவை பித்தத்தால் தான் விளைந்தன என்று எப்படிச் சொல்வது?" என்று அடிப்படையான சந்தேகங்களை விளக்கஞ்

செய்து கொள்ள நாம் விரும்பினல், அவனிடமிருந்து வரும் பதில் என்ன தெரியுமா? "சாமீ! கை நாடிகளில் வாதம் ஒருபங்கும், பித்தம் அரைப் பங்கும், சிலேஷ்மம் கால்பங்குமாய்க் கூடிக் கலந்து ஓடினல், அந்த மனிதன் உண்டு, திரிந்து, ஓடியாடி வாழ்வதில் ஒருவிதச் சொணக்கமும், ஏற்படாது. அவனுக்கு வியாதியே இல்லை என்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

"ஆனல் உங்கள் கையில் அறைப்பங்கு அடிக்க வேண்டிய பித்தநாடி ஒரு பங்காக ஓங்கியடிக்கிறது. ஆதலால் தான் இந்த விபரீதம்" என்று சொல்லிவிட்டு நாற்பது வருஷங்களுக்கு முன் இளம் பிராயத்தில்தான் மனப்பாடம் செய்த பாடல்களில் ஒன்றைச் சொல்ல ஆரம்பிப்பான்.

> "பித்தத்தில் பித்தமாகில் பிதற்றிடும் கிறுகிறுப்பு
> சைத்திய மதிகமாகும் சரீரத்தில் இளைப்புமுண்டாம்
> அத்தியாய் உலரும்மேனி ஆக்கையும் சுரத்தால்நோவும்
> புத்தியு மடியும்மிக்கப் பொறுமைபோய்க் கோபம்ஆமே"

இந்தப் பாடலைக் கேட்டபின் வைத்திய சாஸ்திரத்தின் பெருமையையும், "வைத்தியர்களுக்குக் கைவிரல் நுனியில் மூளையுண்டு" என்று ஒரு பெரியார் கூறியுள்ள உண்மையையும் உடனே தெரிந்து கொள்ளலாம்.

'செய்நன்றி கொன்ற' சில மக்களைப் பற்றிப் பேசும்போது கோவிந்தனுக்கு ஏற்படும் கோபம் அசாத்தியம். "சாமீ! அம்மணி அம்மா வூட்டுக் குழந்தைக்கு இருபது நாளாய்ப் பித்தவாதசுரம் அடித்ததாம். கைபார்த்து மருந்து கொடுக்க ஆஸ்பத்திரி டாக்டர் ஐயாவை அழைத்தார்கள். அந்த இங்கிலீஷ் வைத்தியருக்கு வந்து பார்வையிட ஒவ்வொரு தடவைக்கும் ஐந்தாறு ரூபாய், இஞ்ஜெக்ஷனுக்காக மருந்துக்கு எழெட்டு ரூபாய் எல்லாம் அழுதார்களாம். பணத்துக்குக் கேடு ஏற்பட்டதே ஒழிய உடம்புக்குச் சீர் ஒன்றும் ஏற்படவில்லை. அந்த வைத்தியரும் கைவிட்டு விட்டாங்களாம்.

"அப்பொழுது என்னிடம் ஓடி வந்தார்கள். நான் போய் கை பார்த்து, என் பொடியில் மூன்று பொட்டணங்களை இஞ்சி 'சொரஸத்'தில் கொடுத்தேன். பேச்சியாயி புண்ணியத்தில் குழந்தை கண்ணைத் திறந்து பார்த்தது. ஏதோ 'உயிர்ப்பிச்சை' உண்டாயிற்றே என்று—பத்து, எட்டு வேண்டாம்—ஒன்றிரண்டு ரூபாயாவது கொடுத்தார்களோ? எட்டணவை வைத்து வெற்றிலை பாக்குக் கொடுத்து இன்றைக்கு எடுத்துக் கொண்டுபோ. நாளைக்குப் பாங்கிலிருந்து பணம் எடுத்துத் தருகிறேன் என்றார்கள். ஜனங்களுடைய குதைப் பாருங்கள். ஆடம்பரத்தோடிருந்தால் பணத்தை அவிழ்க்கிறார்கள். அடக்கத்துடன் இருக்கும் ஏழையை ஏமாற்றுகிறார்கள். கடவுளும் அதற்குத் தகுந்தாற் போலத்தான் கூலி கொடுப்பார்" என்று சொல்லுகையில், அதில் உள்ள நியாய புத்தியை ரஸிக்கின்றவர்கள் மிகச் சிலரே!

கெடு வைப்பதில் கோவிந்தன் நிபுணன். 'இந்தப் பிராணன் எட்டு நாளைக்குமேல் தாங்காது' என்று கோவிந்தன் கூறிவிட்டால் அநேகமாய் அந்த நாளைத் தாண்டுவது அருமை. அவனது அனுபவத்தில் பத்து கேஸுகளில் ஒன்று ஒரு வேளை தவறியிருக்கக்கூடும். "ஏண்டா கோவிந்தா! மேலத்தெருவு கிழ ஐயாவுக்கு எத்தனை நாட்களுக்குக் கெடு

சொல்லியிருக்கிறாய்?" என்று கேட்டால் "சாமி! நான் என்ன பிரம்மாவா?" என்ற அடக்கத்துடன் ஆரம்பிப்பான்.

"அது கிழப்பிராணன்; வைரம் பாய்ந்த எலும்புக்கூட்டில் ஒடுகிறது. நாலுநாள் சொல்லலாம், ஐந்துநாள் சொல்லலாம், நாலும் ஐந்தும் ஒன்பது நாள் கூடச் சொல்லலாம் என்று வைத்திய சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. ஒன்று மாத்திரம் நிச்சயம். இந்தத் தடவை தேறுவதற்கு வழியில்லை. அடங்குவதற்கான அறிகுறிகள் எல்லாம் சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறபடி, தோன்றி விட்டன. பல் கறுத்துவிட்டது. வாயால் சுவாசம் விடுகின்றது. மூக்குப் பெருத்திருக்கின்றது. கண்ணில் ஒளி மங்கி விட்டது என்று கூறிவிட்டு,

"கண்ணும்பல்லும் தான்கறுத்துக் கருதும்மூச்சு வாய்திறந்து
உண்ணும்வயிற்றில் சிலேஷ்மம்ஒடி மிகவேதான் நடந்தால்
பண்ணும்மருந்து பலியாதுபண்பாய் சுவாசம்மேல் வாங்கும்
மண்ணும்விண்ணும் தானறியமரணம் ஆவார் கண்டீரே"

என்ற பாடலையும் பாடித் தன் அபிப்பிராயத்தை ஸ்திரப்படுத்துவான். இந்த மாதிரியான இடங்களில் இந்திரனுக்குக் கோவிந்தன்பேரில் ஒரு கண் என்று கேள்வி. ஏன்? தேவ ரகஸ்யத்தை எப்படியோ தெரிந்துகொண்டு கோவிந்தன் முன் கூட்டியே தகவலைத் தெரிவித்து விடுகிறானாம்!

கோவிந்தனிடம் உள்ள குறை ஒன்றே ஒன்றுதான். குடிகெடுக்கும் கள்ளின் கூட்டுறவுதான் அது. ஆனால் அப்பொழுதும் நிதானம் தவறுவதில்லை என்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியம்! "எண்டா கோவிந்தா! கள்ளைக் குடித்துக் கெட்டுபோகிறாய்?" என்றால், "சாமி! ஊரில் உள்ளவர்கள் வியாதி வருகிறபோது தானே என்னை வரவழைக்கின்றார்கள்? மீதி நாட்களில் என்னை யார் வேண்டுகிறார்கள்? அதேமாதிரி இந்தக் கள்ளுக்கடை இருக்கிற மட்டும் இந்தக் குடிப்பழக்கம் என்னை விடாது. காந்தி மந்திரிகள் மூன்று வருஷத்துக்குள் கள்ளை ஒழித்துவிடப் போகிறார்கள் என்று சொல்லுகிறீர்களே! நான் அப்பொழுது மூன்று நாட்களில் கள்ளை ஒழித்து விடுகிறேன்" என்று ஒரே யடியாய்ப் பேசிவிடுவான். என்ன போட்டிப் பந்தயம்!

"சாமீ! புதிசா 'லைசென்ஸ்' என்று என்னமோ நாட்டு வைத்தியர்கள் எல்லாரும் வாங்க வேண்டுமாமே! நாற்பது வருஷமாய் வைத்தியம் பார்த்து வருகிற எனக்கு எதற்கு லைசென்ஸ்? அப்படி ஏதாவது 'கிட்டி முட்டி' வந்து விட்டால் நீங்கள் எல்லாரும் என்னை அறியாதவர்களா? வந்து கேட்கிறவர்களுக்கு லைசென்ஸ் வாங்கித் தருகிறோம் என்று சொல்லுங்களேன். இல்லாவிட்டால் கோவிந்தனை வைத்தியத்துக்குக் கூப்பிடாதீர்கள். அவன் எப்படியாவது பட்டினி கிடந்து சாகட்டும். உங்கள் வியாதியும் சொஸ்தமாகாமல் போகட்டும்" என்று சொல்லும் வார்த்தைகளைக் கேட்டு இரங்காமல் இருக்கத் துணிவீர்களா?

சுத்தப் பட்டிக்காடு!

து. ராமமூர்த்தி

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அப்பொழுது டிக்கட் பரிசோதகர் சிவராமனிடம் வந்து "டிக்கட், டிக்கட்" என்றார். சிவராமன் ஜேபியிலே கையை விட்டு அதில் டிக்கட்டைக் காணமல் திடுக்கிட்டான். அதை அறிந்து கொண்டு அந்தப் பெண் விழுந்து விழுந்து சிரித்தாள். சிவராமனுக்கு மானம் போய் விட்டது. அதற்குள் டிக்கட் பரிசோதகர் "டிக்கட், டிக்கட்" என்று மறுபடி இரைந்து கத்தினர்.

தூக்கிவாரிப் போட்டதுபோல சிவராமன் தூக்கத்திலிருந்து விழித்து நிமிர்ந்து உட்கார்ந்தான். எதிரில் அந்த ஹிட்லர் மீசைக்காரன், முன் போலவே பழைய இடத்தில் சிரித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பதையும், நடுவில் டிக்கட் பரிசோதகர் ஒருவர் நின்று கொண்டு தன்னை டிக்கட் கேட்பதையும் பார்த்து டிக்கட்டை எடுத்து அவருக்குக் காண்பித்தான்.

செங்கல்பட்டு ஜங்ஷனில் மீசைக்காரன் இறங்கினது, அந்தப்பெண் தன் வண்டியில் ஏறினது, அப்புறம் அதற்கு மேல் நடந்த சம்பாஷணை எல்லாம் தான் கனவிலே கண்டது தான், நிஜமாக நடக்க வில்லை என்பதை உணர்ந்ததும், அவன் அடைந்த சந்தோஷத்தை விவரிக்க முடியாது. அதெல்லாம் கனவிலே நடவாமல் உண்மையிலேயே நடந்திருந்தால், அந்தப் பெண்ணிடம் அவனுக்கு ஏற்பட்டிருந்த மதிப்பெல்லாம் பறந்தல்லவா போய் விட்டிருக்கும்!

ஆனல் அந்தக் கனவு கண்டதிலே அவன் மனதில் இன்னெரு பெரிய மாறுதல் ஏற்பட்டு விட்டது. சின்னக்குப்பம் கிராமத்தினிடம் ஏற்கனவே அவன் கொண்டிருந்த வெறுப்பை அது அதிகப்படுத்தி விட்டது. "நம் கனவிலே வருகிறவர்களுக்குக்கூட அல்லவா சின்னக்குப்பம் என்றால் வேம்பாய் இருக்கிறது!

சின்னக் குப்பம் போகிறேன் என்றதும் அவள் எப்படி மூஞ்சியிலடித்தாற் போல் சிரித்தாள் பார்த்தாயா? போதாத குறைக்கு சரோஜனி என்ற பெயரும் அவளுக்குப் பிடிக்க வில்லை. ஏன், எனக்குக் கூடத் தான் பிடிக்க வில்லை. சரோஜனியாம் சரோஜனி!—" என்று நினைத்துக்கொண்டு, "பேசாமே போவதா அல்லது வந்த வழியே திரும்பிப் பட்டணத்துக்குப்

போய்விடுவதா?" என்று யோசிக்கலானான்.

வண்டி விழுப்புரம் ஜங்ஷனை அடைவதற்குள் சிவராமன் யோசித்து ஒரு முடிவுக்கு வந்து விட்டான். வண்டி ஜங்ஷனில் நின்றதும், அங்கிருந்து அப்படியே சென்னைக்குத் திரும்பி விடுவது என்று தீர்மானித்துக் கொண்டு, பெட்டியையும் படுக்கையையும் எடுத்துக் கொண்டு ரயிலிலிருந்து இறங்கினான். அப்போது, எழும்பூரில் அந்தப் பெண்ணை ரயிலேற்றி விட்டவர் அவளைப் பார்த்துக் கொள்ளும்படி தன்னிடம் சொல்லி விட்டுப் போயிருக்கையில், தான் இப்படி அவளைக் கவனியாமலே இருந்து விட்டோமே என்று தோன்றிற்று.

தோன்றினதும், அவளிடம் ஏதாவது கேட்கலாமா என்று நினைத்தான். பிறகு, "அவள் தூங்கிக் கொண்டிருக்கிறாளோ என்னமோ! அதுவும் தவிர மாபவரம் தாண்டிப் போகிறேன், என்று சொல்லி விட்டு இங்கே இறங்கினேனே. அவள் ஏன் என்று கேட்டால் என்ன சொல்வது?" என்று நினைத்துக் கொண்டு, பேசாமல் அங்கிருந்து சென்னைக்குப் போகும் பாசஞ்சர் வண்டி வரும் பிளாட்பாரத்துக்குப் போய்ச் சேர்ந்தான்.

4

நான்கு மாதங்களுக்குப் பிறகு ஒருநாள் சிவராமன் "கலைஉலகம்" பத்திரிகாலயத்தில் தன் அறையில் உட்கார்ந்து எழுதிக்கொண்டிருந்தபோது, சேவகன் வந்து யாரோ ஒரு ஸ்திரீ அவனைப் பார்க்க வந்திருப்பதாகத் தெரிவித்தான். அவளை உள்ளே வரும்படி சொன்னதும், முன்பு சிவராமன் சின்னக்குப்பம் போகப் பிரயாணப்பட்டபோது அதே வண்டியில் சென்ற அந்த யுவதி கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தாள்.

அவளைப் பார்த்ததும் சிவராமன் திடுக்கிட்டுப் போய், பிறகு சமாளித்துக் கொண்டு நாற்காலியை எடுத்துப் போட்டு, "உட்காருங்கள்" என்று உபசரித்தான். அவனைப் பார்த்ததும் அவளும் திகைப்படைந்தது போல் ஒரு கணம் நின்றாள். பிறகு புன் சிரிப்புடன், "என்னை அடையாளம் தெரிகிறதா உங்களுக்கு?" என்று கேட்டாள். அந்தக் குரல் சிவராமனின் மூளையைச் சிதற அடித்தது.

அவள் கேட்ட கேள்வியினால் அவன் உள்ளம் பரவச மடைந்தது. அந்தப் பெண் தன்னை நன்றாய்க் கவனித்திருந்ததோடு அல்லாமல், இன்னும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டும் இருக்கிறாள்!

"தெரியாமலென்ன? இரண்டு மாதத்துக்கு முந்தி ஊருக்குப் போனீர்களே; உங்கள் மாமா ரயிலேற்றி விட்டாரே—" என்று சிரித்துக் கொண்டே சொன்னான்.

அவளும் சிரித்து விட்டு, "ஒரு கதை எழுதியிருக்கிறேன். உங்கள் பத்திரிகையில் போடுவீர்களா?" என்று கேட்டாள்.

"அதற்கென்ன, நன்றாய் இருந்தால் போடுகிறோம். உங்களைப் போல் படித்தவர்கள் எல்லாம்

எழுத வேண்டும் என்றுதானே எங்கள் ஆசை."

அந்த யுவதி தான் கொண்டு வந்திருந்த கையெழுத்துப் பிரதியை அவனிடம் கொடுத்தாள். அதை வாங்கி வைத்துக்கொண்டு, "மறு

"இல்லை, நான் மறுபடி வர மாட்டேன். இன்று சாயங்கால எக்ஸ்பிரஸில் ஊருக்குப் போகிறேன்" என்று கூறி விடைபெற்றுக் கொண்டு அவள் வெளியே சென்றாள்.

சிவராமன் அவள் கொடுத்து விட்டுப்போன எழுத்துப் பிரதியை எடுத்து சாவகாசமாக படிக்கத் தொடங்கினான். கொஞ்சம் படித்தவுடனேயே அவன் உடல் நடுங்கிற்று; ரோமம் சிலிர்த்தது; நெஞ்சு திக்கு திக்கென்று அடித்துக்கொள்ள ஆரம்பித்தது.

படியும் என்றைக்காவது இந்தப் பக்கம் வந்தால் வாருங்கள். படித்துப் பார்த்துவிட்டு கதை எப்படி இருக்கிறது என்று சொல்லுகிறேன்" என்றான் சிவராமன்.

அந்தக் கதையின் சுருக்கம் இது தான்:—

பெரிய குப்பம் என்ற கிராமத்தில் பார்வதி என்று ஒரு சிறு பெண். அவள் அடுத்த வீட்டுப்

பையனாகிய நாகராஜனுடன் இணை பிரியாதவளாய் வளர்ந்து வருகிறாள். அப்பொழுது நாகராஜன் வீட்டார் திடீரென்று அந்த கிராமத்தை விட்டுச் சென்னைக்குப் போய்விடுகிறார்கள்.

பிறகு பார்வதி வளர்ந்து யுவதியாகி, காலேஜில் சேர்ந்து படிப்பதற்காக சென்னைக்கு வந்து தன் மாமா வீட்டில் தங்குகிறாள். அதற்கு முன்பெல்லாம் பட்டணத்தைப் பார்க்கவேண்டும், அங்கே வசிக்க வேண்டும் என்றெல்லாம் அவள் மனதில் அடக்க முடியாத ஆசை ஒன்று இருந்து வந்தது.

சென்னைக்கு வந்து நகர வாசம் என்றால் இன்னதென்று அனுபவித்து அறிந்த பிறகு அவள் மனதில் ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டது. நகரத்து ஜனங்களின் பேச்சோ, அவர்கள் நடை உடை பாவனைகளோ ஒன்றும் அவளுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. மாலை நேரத்தில் வீட்டை விட்டு வெளிப்பட்டால், சென்னை நகரத்திலுள்ள அழகான கட்டிடங்களோ, கடைகளோ, வாசஸ்தலங்களோ அல்லது நாகரீகமாக உடை அணிந்த ஸ்திரீ புருஷர்களோ அவள் கண்களுக்கு இன்ப மூட்டவில்லை. தெரு ஓரங்களிலும், திறந்த வெளிகளிலும், அங்கங்கே மரத்தடிகளிலும் குடியிருந்த பரம ஏழைகள், பிச்சைக்காரர்கள், நோயாளிகள் இவர்களுடைய கோர ஸ்வரூபங்கள் தான் அவள் கண்களுக்கு முன்னால் எப்போதும் காட்சியளித்தன.

அவைகளை பார்க்கும் போது நகரவாசிகள்மேல் கோபமும் அருவருப்பும் அவளுக்கு உண்டாகும். "சே, இதுதானா இவர்களுடைய நாகரிகம்! வறுமையும் நோயும் கண்ணெதிரில் இப்படித் தாண்டவமாடும் போது எப்படி இவர்கள் தங்கள் சுக சௌகர்யங்களிலேயே ஈடுபட்டவர்களாக இருக்கிறார்கள்? எப்படி இவர்களுக்குத் ராத்தூக்கம் பிடிக்கிறது?—" என்றெல்லாம் எண்ணமிடுவாள்.

எப்பொழுது தன் படிப்பு முடியுமென்றும், எப்பொழுது தான் மறுபடி பட்டிக் காட்டுக்கே திரும்பிப் போய் விடுவோமென்றும், பரிசுத்தமான கிராமத்துக் காற்றை எப்பொழுது மறுபடி உட்கொள்ளப் போகிறோமென்றும் ஏக்கங் கொள்வாள்.

இப்படியிருக்கும்போது ஒரு நாள் பார்வதி தன் காலேஜ் தமிழ்ச் சங்கத்தில் பிரசங்கம் செய்வதற்காக வந்த நாகராஜன் என்ற இளைஞனைப் பார்த்ததும், அவன் தன் பால்ய ஸ்நேகிதன் தான் என்று அடையாளம் கண்டு கொண்டாள். தான் அவனைத் தெரிந்து கொண்டதை அவனிடம் கூற வேண்டும் என்றும், அவனுடன் முன்போல் பேச வேண்டும் என்றும் அவளுக்கு ஆசையாக இருந்தாலும் வெட்கம் குறுக்கே வந்து தடுத்தது.

அப்பொழுது பேசாமல் இருந்து விட்டு, பிறகு அவர்கள் வீட்டை அறிந்துகொண்டு அங்கே சென்றாள். அப்பொழுது நாகராஜன் வீட்டிலில்லை. அவன் தாயாரையும் மற்றவர்களையும் பார்த்த பிறகு பார்வதிக்கு அவர்களிடமும் வெறுப்பு ஏற்பட்டு

விட்டது. அவர்கள் முன்போ லில்லாமல் நகர நாகரிகத்தில் ஊறிப்போனவர்களாய் இருந்தது தான் இதற்குக் காரணம்.

இந்த சமயத்தில் பார்வதிக்கு அவள் தகப்பனரிடமிருந்து கடிதம் வந்தது. அவளுக்கு அந்த வருஷம் கல்யாணம் செய்ய உத்தேசித்திருப்பதாகவும், நாகராஜன் தகுந்த வரன் என்று தோன்றுவதாகவும் அவர் எழுதியிருந்தார். பார்வதிக்கோ இதற்குள் நாகராஜன் என்றாலே அருவருப்பாக போய்விட்டது. தகப்பனருக்கு ஒன்றும் பதில் எழுதாமல் இருந்து விட்டு, கோடை விடுமுறைக்காகக் காலேஜ் சாத்தப்பட்டதும் பெரிய குப்பத்துக்குப் போகப் புறப்பட்டாள்.

ரயில் புறப்படும் சமயத்தில் அந்த ரயிலில் நாகராஜனைப் பார்த்ததும் அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. நாகராஜனும் அவளைப் பார்த்தான், ஆனல் அடையாளம் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. இதனல் பார்வதியின் கோபம் அதிகமாயிற்று. "நாம் பார்த்தவுடனே அவரைத் தெரிந்து கொண்டோம். அவருக்கு நம்மைத் தெரியவில்லை பார்த்தாயா? இந்தப் பட்டணம் வாசிகளே இப்படித்தான். வருஷக் கணக்காய் ஒரு வீட்டில் இருப்பார்கள்; ஆனல் அடுத்த வீட்டுக்காரன் யார் என்று கேட்டால் தெரியாது. இந்த மாதிரி மனுஷரைப் போய் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமாம்!—" என்று நினைத்துக் கொண்டாள்.

பிறகு நாகராஜன் எங்கே போகிறன் என்ற யோசித்துப் பார்த்த போது அவன் தன்னைப் பார்க்கப் பெரிய குப்பத்துக்குத் தான் போகிறன் என்று தோன்றிற்று. பார்வதி சிந்தனையில் ஆழ்ந்தாள். நாகராஜன் முகத்தில் எப்படி விழிப்பது? கல்யாணம் பண்ணிக்கொள்கிறாயா என்று கேட்டால் எப்படி முடியாதென்று சொல்வது?

நீண்ட யோசனைக்குப் பிறகு பார்வதி ஒரு முடிவுக்கு வந்தாள். மாயவரம் ஜங்ஷனில் ரயில் நின்றதும் இறங்கி, சென்னைக்குப் போகும் மெயிலில் ஏறினள். அந்த வருஷம் லீவைப் பல்லைக் கடித்துக்கொண்டு சென்னையிலேயே கழித்துவிட வேண்டியது தான். நாகராஜன் பெரிய குப்பம் போய்த் தன்னைக் காணமல் ஏமாறட்டும்! அவ்வளவுதான்!

* * *

அதற்குமேல் அந்தக் கதையைப் படிக்கத் தோன்றவில்லை சிவராமனுக்கு. உதட்டைக் கடித்துக்கொண்டு கடைசிப் பக்கத்தைப் புரட்டினன். கதையின் அடியில், 'சரோஜா' என்று மணி மணியாக எழுதப்பட்டிருந்த மூன்று எழுத்துக்களும் அவன் கண் எதிரில் நர்த்தனம் செய்வது போலிருந்தன. அந்தப் பெயரை வாய்விட்டுப் படித்தபோது அது அவன் செவிகளுக்குத்தேவகானம் போல் இனிமையாக ஒலித்தது. ஆனல் தான் படித்ததை நினைத்துப் பார்த்தபோது அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது.

"என்னைக் கண்டாலே அருவருப்பாக இருக்கிறதாம்! என்

முகத்தில் எப்படி விழிக்கிற தென்று தெரியவில்லையாம்! அப் படியா சமாசாரம்! என்னை இவள் எட்டிக காயாய் வெறுக்கும்படி நான் என்ன அப்படி கெட்டுப் போய் விட்டேன்? அதையும் அவள் வாயாலேயேதான் சொல்லி விடட்டுமே" என்று நினைத் துக்கொண்டான்.

அன்று எக்ஸ்பிரஸ் வண்டியை அவனால் பிடிக்க முடியவில்லை. ஆகையால் அன்றிரவு புறப்பட்டடு மெயிலில் சின்னக் குப்பத்துக் குப் பிரயாணமானான்.

* * *

சிவராமன் அதுவரையில் எவ் வளவோ எதிர் பாராத விஷயங் களைக் கண்டும் கேட்டும் இருக் கிறான். ஆனால் சின்னக்குப்பத் தில் அவன் கண்டதையும் கேட் டதையும் போல் வேறெதுவும் அவனை அப்படித் திடுக்கிடச் செய்ததில்லை.

சரோஜா அடக்க முடியாத மகிழ்ச்சியுடன் அவனை வரவேற் றாள். இது உண்மையில் அவ னுக்குத் திகைப்பூட்டுவதாக இருந்தது. அவளுடன் தனிமை யில் பேசிக்கொண் டிருந்தபோது, "அதிருக்கட்டும்; நகர நாகரி கத்தில் ஊறினவனை என்னைக் கண்டாலே உனக்கு வெறுப்பாய் இருந்ததே. என் முகத்தில் விழிக்கவும், இப்படி என்னுடன் பேசிக்கொண்டிருக்கவும் உனக்கு எப்படி தைரியம் வந்தது?" என்று கேட்டான்.

சரோஜா சிரித்தாள்.

"அதெல்லாம் கதையில் அல் லவா வருகிறது? உண்மையில் என்னைப் பொறுத்தவரையில் அதெல்லாம் நிஜமில்லை. நீங்கள் தான் அப்படி எல்லாம் நடந்து கொண்டீர்கள். என்னைப் பட்டிக் காடு என்று வெறுத்தீர்கள். விழுப்புரத்தில் ரயில் நின்றதும் நிற்காததுமாய் இருக்கையில் தொப்பென்று இறங்கித் திரும் பிப் போனீர்கள். அந்த மாதிரி எல்லாம் நான் நடந்து கொண் டிருந்தால் உங்களுக்கு எப்படி இருக்கும் என்று பார்க்கத்தான் கதையில் அப்படி எழுதினேன்" என்றாள்.

சிவராமன் ஒரு பெருமூச்சு விட்டு, தங்களை யாராவது கவனிக் கிறார்களா என்று முன் ஜாக் கிரதையாகச் சுற்றிலும் ஒருதரம் பார்த்துக் கொண்டான்.

முற்றிற்று

சிறுவருக்கு

மூக்கைப் பிடி!

எம். கல்யாணராமன்

ஒரே ஒரு ஊரில் ஒரு பலாப் பழ வியாபாரி இருந்தான். அவன் ஒவ்வொரு நாளும் அரண்மனைக்குச் சென்று பலாப்பழம் விற்பது வழக்கம்.

அவனுக்கு ராஜகுமாரியின்மேல் மிகவும் ஆசை. ஏனென்றால், அவள் ரொம்ப அழகு. அவளிடம் எப்படியாவது பேசவேண்டும் என்று எண்ணிக்கொண்டிருந்தான். ஒரு நாள் ராஜகுமாரியின் தாதி அவனைப் பார்த்தாள்.

"உன் பெயர் என்ன?" என்று கேட்டாள் அவள்.

"என் பெயர் எலி!" என்றான் அவன்.

"சரி, நாளைக்கு வா, வாங்கிக் கொள்ளுவார்கள்" என்று தாதி சொல்லிவிட்டாள்.

மறுநாள் ராஜகுமாரி அவனைப் பார்த்தாள்.

"உன் பெயர் என்ன?" என்று அவனைக் கேட்டாள்.

அதற்கு அவன் "என் பெயர் பலாப்பழம்!" என்று சொன்னான்.

"சரி, நாளைக்கு வாங்கிக் கொள்ளுகிறேன்!" என்றாள் ராஜகுமாரி.

மறுநாள் ராணியின் கண்ணில் பட்டான்.

"உன் பெயர் என்ன?" என்று கேட்டாள் அவள்.

"என் பெயர் சுளை!" என்று பதில் சொன்னான்.

அதற்கும் மறுநாள் அரசன் கண்ணில் பட்டான்.

"உன் பெயர் என்ன?" என்று அரசன் கேட்டான்.

"என் பெயர் மூக்கு!" என்றான்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் அரண்மனையிலேயே பொழுது போய்விட்டது.

"இன்று எப்படியாவது ராஜகுமாரியைத் தனியாகப் பார்த்து விடவேண்டும்" என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான். வியாபாரி அங்கேயே ஒரு மூலையில் ஒளிந்துகொண்டிருந்தான்.

அன்று அமாவாசையாகையால் ஒரே இருட்டாக இருந்தது. சரியாக நடு நிசியில் அடிமேல் அடிவைத்து அந்தப் புறத்திற்குள் நுழைந்தான். அப்போது தாதி அவனைப் பார்த்துவிட்டாள்.

"எலி, எலி!" என்று கத்தினாள். உடனே ராஜகுமாரி உள்ளேயிருந்தபடியே அவளை அதட்டினாள்.

"எலியாய் இருந்தால் என்ன பயம்? பேசாமல் தூங்கு" என்றாள்.

அவன் உடனே உள் பக்கம் போனான்; ராஜகுமாரி அவனைப் பார்த்துவிட்டாள்.

"அம்மா, பலாப்பழம் பலாப்பழம்!" என்று கத்தினாள்.

"என்னடி ராத்திரியில் பலாப்பழம்? பொழுது விடியட்டும் வாங்கித் தருகிறேன்" என்றாள் ராணி.

அவன் விழுந்தடித்துக் கொண்டு மற்றொரு பக்கம் ஓடினான். ராணி அவனைப் பார்த்துவிட்டாள்.

"சுளை, சுளை!" என்று கத்தினாள் ராணி.

"சீ, அதற்கென்ன வந்தது இப்பொழுது?" என்று சொல்லிவிட்டு அரசன் எழுந்து வெளியே வந்தான். அவன் வியாபாரியைப் பார்த்துவிட்டான். உடனே அவன் வாயிற்படியில் நின்றுகொண்டு காவலாட்களை நோக்கி "மூக்கைப்பிடி, மூக்கைப் பிடி!" என்று கத்தினான்.

உடனே அவர்கள் தங்கள் மூக்குகளைப் பிடித்துக்கொண்டார்கள். அரசன் மேலும் மேலும் "மூக்கைப் பிடி, மூக்கைப் பிடி!" என்று கத்தவே அவர்கள் நன்றாக அழுத்திப் பிடித்துக்கொண்டார்கள்.

அவர்கள் உடனே மூச்சுத் திணறி கீழே விழுந்தார்கள்.

பழ வியாபாரி உடனே தப்பியோடிவிட்டான்.

அரசனுக்கு வெகு கோபம் வந்துவிட்டது ஆட்களின்மேல்.

"போய் அவனைப் பிடித்துக்கொண்டு வாருங்கள்!" என்று உத்தரவிட்டான்.

அவன் வந்ததும் அவன் சாமர்த்தியத்தை மெச்சி அவனுக்கு அரண்மனையில் ஒரு உத்தியோகம் செய்து வைத்தான்.

சட்டம் செல்லாது!

அ. கி. ஜயராமன்

1

"எந்தச் சட்டம் வந்தாலென்ன? என் ரூபாய் எப்படியும் வசூலாகிவிடும்" என்றார் கனகம் செட்டியார்.

அவருக்கு வசூலும் ஆகிவிடும். அந்த கிராமத்தில் அவர்தான் கொஞ்சம் பசையுள்ள பேர்வழி. அதோடு மளிகைக் கடையும் வைத்திருந்தார்.

ஏழைப்பட்டி கிராமத்திற்கும் ரயில்வே லயனுக்கும் இருபத்தேழுமைல் தூரம். ஒதுப்புறமான கிராமம். மொத்த ஜனத்தொகை நானூறு பேருக்குமேல் இருக்கவே இருக்காது.

சுற்றிலும் உள்ள கூரை வீடுகளின் மத்தியில் ஒரு சிறு கல் வீடு. அதிலேதான் பின்புறம் குடித்தனமும், முன்புறம் மளிகைக் கடையும் வைத்துக்கொண்டிருந்தார் கனகம் செட்டியார். வீரப் படையாச்சியும் அந்தக் கிராமத்தவன்தான். அவனுடைய பிதுரார்ஜித சொத்து, அவனைச் சம்பாதித்தது, எல்லாமாகச் சேர்ந்து மொத்தம் அவனுக்கு பனிரண்டு செண்டு குறைய ஒரு ஏக்கர் நிலமும் ஒரு சிறு குடிலும் தான்.

இதைத் தவிர, அவனுடைய முதல் மனைவி இறந்தபொழுது தன் இரு குழந்தைகளையும் செல்வமாக அளித்துச் சென்றாள். அடுத்தபடியாக மணந்த பேச்சியாயிக்கு பிறந்த குழந்தைகள் இரண்டு. ஆக நான்கு குழந்தைகளுடன், இரண்டு கிழப் பசுக்கள், அதன் கன்றுகள், ஒரு ஜதைக் காளை மாடுகள், நான்கு ஆடுகள், ஐந்தாறு கோழிகள் இவை அவனுடைய ஆஸ்திகள்.

2

முதல் மனைவி இறந்ததும் வீட்டுப் பொறுப்பை நிர்வகிக்க யாருமில்லாமையால், இரண்டாவது கல்யாணம் செய்து கொண்டே தீர வேண்டுமென்று தீர்மானித்து விட்டான் வீரப்படையாச்சி.

அப்பொழுதுதான் அவன் கனகம் செட்டியாரிடம் முதல் முதலாக ஐம்பது ரூபாய் கடன் வாங்கினான். வட்டி நூற்றுக்கு இரண்டு.

வருஷம் இரண்டாயிற்று. வீரப் படையாச்சி வட்டி கொடுக்கவில்லை. செட்டியார் தினம் வீரப் படையாச்சியின் வீட்டிற்கு நடக்கலானார்.

வீரப்படையாச்சிக்கு இரண்டு வருஷமாக விளைவு இல்லை. அவனுக்கு மாத்திரமல்ல; அந்தக் கிராமத்திலேயே விளைவு கிடையாது.

வட்டிப் பணத்திற்குச் செட்டியார் தொந்திரவு செய்யலானார்.

வீரப் படையாச்சி, தன் வீட்டில் கன்று போட்டிருந்த பசுவை செட்டியார் வீட்டிற்கு கறவைக்கு ஓட்டினான் சிறிது சமாதான மடையட்டுமென்று.

மாட்டைக் கறந்து சாப்பிட்டு வந்தார் செட்டியார். ஆனால் ரூபாய் கேட்பதை மட்டும் நிறுத்தவில்லை.

மூன்றாவது வருஷம் பிறந்தது. அசலும் வட்டியும் சேர்ந்து எண்பத்தைந்து ரூபாயாகிவிட்டது. வீரப் படையாச்சி அந்த வருஷமும் வட்டி கொடுக்கவில்லை. செட்டியார் கடைசியிலும் பதினைந்து, இருபது ரூபாய் பாக்கியாகிவிட்டது. என்ன செய்வான் சம்சாரி? விளைவில்லை.

இதன் நடுவேதான் கடன் நிவாரணச் சட்டமும் வந்தது. குடியானவர்கள் உள்ளம் களித்தார்கள். செட்டியாருக்கு வர வேண்டிய தொகையில் அநேகமாய் பாதிக்கு மேல் போய்விடும் என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. அவர் உள்ளூர காங்கிரஸைத் திட்டலானார்.

3

வழக்கம்போல் அன்றும் அவர் வீரப்படையாச்சியின் வீட்டிற்கு வந்து "என்னப்பா, கோட்டு காலாவதியாகி விடும்போலிருக்கிறது, என்ன சொல்லுகிறாய் பணத்திற்கு?" என்றார்.

வீரப்படையாச்சி வணக்கத்துடன் ஒரு கும்பிடு போட்டு, 'ஏன் செட்டியாரே, என்னமோ சட்டம் கிட்டம் என்று சொல்லுராங்களே! அதுலே நமக்கேதானும்..." என்று ஆரம்பித்தான்.

செட்டியாரின் மனம் திக்கென்றது. கோபமும் ஆத்திரமும் பொங்க, "அதெல்லாம் பத்தி நமக்கென்ன வந்தது? நீ என்ன சொல்லுகிறாய்?" என்றார்.

"அதான் சொல்ரேனே. எல்லாரும் சொல்ராங்க, சட்டப்படி நான் உங்களுக்கு காலணாகூட கொடுக்கவேண்டியதில்லை என்று. நீங்கள் என்னமோ ரூபாய் கேட்கிறீர்கள்" என்றான்.

செட்டியாருக்குக் கோபம் வந்துவிட்டது. "எந்தச் சட்டம் வந்தாலென்ன! என் ரூபாய் எப்படியும் வசூலாகிவிடும்" என்றார் செட்டியார்.

"நான் என்ன சொல்லப் போரேன்? ஊருலே எல்லாம், அப்படி சொல்ரபோது எப்படிக் கொடுக்கிறது?" என்றான் வீரப்படையாச்சி. கொடுப்பதற்கு அவனிடம் பணமும் கிடையாது.

"சரி, ஆனால் நான் கோர்ட்டுக்குப் போகவேண்டியது தானா?" என்றார் செட்டியார்.

"போய்த்தான் பார்த்துடுவமே? சந்தேகம் தீர்ந்துவிடும்". என்றான் படையாச்சி.

செட்டியார் கோபத்துடன், "ஆகட்டும் பார்க்கிறேன்" என்று விறைப்புடன் சென்று விட்டார். சென்றதுடன் நிற்காமல் வீரப் படையாச்சியின் பிராமிஸரி நோட்டையும், தனக்குச் சேரவேண்டிய கடை பாக்கியையும் சேர்த்து பிராது செய்து விட்டார்.

4

சட்டப்படி வட்டி தள்ளுபடி செய்ததுபோக, அசல் ரூபாய் ஐம்பதும், கோர்ட் செலவு பதினைந்தும், கடை.பாக்கி இருபதும் ஆக எண்பத்தைந்து ரூபாய்க்கு வீரப்படையாச்சியின் மேல், 'டிக்ரி'யாகி விட்டது.

காலை நேரம். மணி எட்டு இருக்கும். கனகம் செட்டியார் ஒரு அமீனாவுடன் வீரப்படையாச்சியின் வீட்டிற்கு வந்தார்.

வீரப்படையாச்சிக்கு உள்ளூரப் பயம்தான். மெதுவாக எழுந்து செட்டியாருக்கு ஒரு கும்பிடு போட்டான்.

"என்னப்பா சொல்கிறாய்? உன் நிலம் வீடு எல்லாவற்றையும் ஜப்தி செய்யப் போகிறோம்" என்றான் அமீனா. வீரப்படையாச்

சிக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் கண்களில் கண்ணீர் வந்து விட்டது. கோபத்தால் மீசை துடித்தது.

உள்ளே இருந்த பேச்சியாயி வாசற்படியண்டைவந்து, "பால் கொடுக்க மாடு கொடுத்தேனே, எங்கள் குடியை இப்படியா கெடுக்க வேண்டும்!" என்று கதறலானாள்.

செட்டியார் சாந்தத்துடன், "வீரா! நான் சொல்வதைக் கேள். சட்டப்படி போனாலும் எண்பத்தைந்து ரூபாய் கொடுத்தே ஆக வேண்டும். இல்லாவிட்டால் வீட்டையும் நிலத்தையும் ஜப்தி செய்யும்படி நேரிடும். ஆனால் நீ ஏழை! உன்னைக் கெடுக்க எனக்கு இஷ்டமில்லை. உன் வீட்டையும் நிலத்தையும் நான் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை" என்று நாசூக்காகப் பேசினார்.

"ஆகையால் நான் சொல்கிறபடி செய். உன் நிர்ப்பந்தம் தீர்ந்துவிடும். இப்பொழுது நீ கொடுக்க வேண்டிய டிக்ரியை பைசல் செய்து கொள்ளுகிறேன். அதற்காக நீ இன்றைய தேதியில் ரொக்கம் பெற்றுக் கொண்டதாக நூற்றி இருபத்தைந்து ரூபாய்க்கு உன் நிலத்தையும் வீட்டையும் என் பேருக்கு, "பந்தகமாக" எழுதிக் கொடுத்துவிடு. பிறகு வருஷத்தில் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்துக் கொண்டுவா," என்றார்.

"அது என்ன கணக்கு செட்டியாரே, நூற்றி இருபத்தைந்து ரூபாய்" என்றான் வீரப்படையாச்சி. அவன் நாக்குக் குழறியது.

"அதுவா, அசல் ரூபாய் ஐம்பது. அதற்கு சட்டப்படி தள்ளுபடியான பழைய வட்டி மூன்று வருஷத்திற்கு முப்பத்தாறு ரூபாய், கடைபாக்கி இருபது ரூபாய், கோர்ட் செலவு பதினைந்து, இப்பொழுது பந்தகப் பத்திர செலவுக்காக ஒரு நாலு, ஆக ரூபாய் நூற்றி இருபத்தைந்துக்கு எழுதிக் கொடுத்தால் எல்லாம் சரியாகிவிடும்" என்றார் செட்டியார்.

"அப்படி செய்து விடப்பா. அதுதான் உனக்கும் அவுங்களுக்கும் இரண்டு பேருக்கும் நல்லது" என்றான் அமீனா.

வீரப்படையாச்சிக்கு வேறு வழியில்லை. இருக்கிறதும் ஏலத்தில் போய்விட்டால் பிறகு கஞ்சிக்கென்னசெய்வது?

பேசாமல், எண்பத்தைந்து ரூபாய்க்குப் பதில் நூற்றி இருபத்தைந்து ரூபாய்க்குச் செட்டியாருக்குத் தன் சொத்தைப் பந்தகமாக எழுதிக் கொடுத்தான்.

மறுநாள் கடையில் உட்கார்ந்து கொண்டு, "எந்த சட்டம் வந்தாலென்ன? என்னை ஒன்றும் செய்ய முடியாது. எந்தச் சட்டமும் என்னிடம் செல்லாது" என்று சொல்லிக் கொண்டிருந்தார் செட்டியார். அவரிடம்தான் சட்டம் செல்லவில்லையே!

———

ரேடியம் ராணி—மேரி கியூரி

(வே. ம.)

போலந்து தேசமானது தற்போது உலகத்தின் கவனத்தை இழுத்துக்கொண்டு நிற்கிறது.

இந்த போலந்தில் மேரி கியூரி 7-11-1867-ல் பிறந்தாள்; 6-7-1934-ல் பிராஞ்சு தேசத்தில் இறந்தாள். இவளது வாழ்க்கையில் பெரும்பாகம் பிரஞ்சு தேசத்தில்தான் கழிந்தது.

இவளும் இவளுடைய கணவனுமாக ரேடியம் (கதிர்) என்ற வஸ்துவைக் கண்டு பிடித்து, அமுலுக்குக் கொண்டு வந்தார்கள். இவளுக்கு ரேடியம் — ராணி என்ற பெயரைத் தாராளமாக வைக்கலாம்.

இந்த ரேடியத்தின் விசேஷத்தையும், இந்த ஸ்திரீ ரத்தினத்தின் சரித்திர விசேஷத்தையும் இங்கு குறிப்பிடுகிறோம்.

இவளுடைய தந்தை, தாய், இருவரும் உபாத்தியாயர் வேலை செய்து வந்தார்கள். குடும்பம் பெரிதாகவே, தாயார் வேலையை விட வேண்டியதாயிற்று. பின்பு குடும்ப அலுவல்களைக் கவனிப்பதுடன், செருப்பு தைக்கும் வேலையில் ஈடுபட்டு, குடும்பம் முழுவதிற்கும் அவளே செருப்பு சப்ளை செய்து வந்தாள். பின்பு க்ஷயரோகம் பிடித்துக் கொண்டது.

இந்த ரோகம் பிடித்துக் கொண்ட விஷயத்தைப் பெற்றோர்கள், குழந்தைகளுக்குத் தெரியாதபடி, ரகஸ்யமாக வைத்துக் கொண்டார்கள். நிரம்ப சுத்தமான ஆடைகளைத் தாயார் தரித்துக் கொள்வாள்; சுறுசுறுப்புடன் வீட்டின் பூரா வேலையையும் கவனிப்பாள்; தன் மட்டில் நிர்தாக்ஷண்யமாக நடந்து கொள்வாள். தனக்கு என்று சாப்பாட்டு தட்டங்களைப் பிரத்தியேகமாக எடுத்து வைத்துக்கொண்டு, அவைகளை மற்ற எவரும் உபயோகித்துக் கொள்ளாதபடி, பாத்துக் கொள்வாள்.

குழந்தைகளை ஆலிங்கனம் செய்து கொள்ள மாட்டாள்; செல்லம் கொடுப்பதானால் குழந்தைகளின் நெற்றியை பரம அன்புடன் தடவிக் கொடுப்பாள்; முத்தம் கொடுக்க மாட்டாள். அவளுடைய அறையிலிருந்து, சிறிய இருமல்கள் மற்ற அறையிலுள்ளோர்களின் செவிகளில் விழுந்து கொண்டிருக்கும்; தந்தையின் முகத்தில் மாத்திரம் ஒரு பாலைவனத் தோற்றம் சதா விழுந்திருக்கும்.

தினசரி மாலையில் செய்யப்படும் பிரார்த்தனையில், "எங்கள் தாயின் ஆரோக்கியத்தைத் திரும்பிக்

கொடும்'' என்ற வேண்டுகோளும் சேர்க்கப்பட்டது. அந்த அறையி லிருந்து வரும் இருமலையும், தந்தையின் முகத்தில் விழுந்திருக் கும் விசனத்தையும், பிரார்த்தனை யில் சேர்க்கப்பட்ட மேலே சொன்ன வேண்டுகோளையும் தவிர,குழந்தைகளுக்குத் தாயின் அசௌக்கியத்தினுடைய விபரீ தம் யாதொன்றும் தெரியாது.

மூத்த குழந்தை, இளைய குழந் தைகளுக்குத் தமாஷாக வாத்தி யார்த்தனம் பண்ணிற்று. தன்னை யறியாமலேயே, விளையாட்டி லேயே, தனது நான்காவது வயதில், பெரிய பாடத்தை இந்த இளங்குழந்தை மேரி, சரியாகப் படித்து விட்டாள். கேட்டவர்கள் மௌனமாக கேட்டுவந்தபடியால், அந்த கவனத்தில் குழந்தை மோஹித்து, படித்துக்கொண்டே போனாள்.

திடீரென பீதி ஏற்பட்டது. குழந்தைக்குக் கண்ணீர் பெருகி விட்டது. அபயக் குரலில் குழந் தை, "தயவு செய்து மன்னிக்க வேண்டும். நான் வேணுமென்றே படிக்கவில்லை. என் குற்றமல்ல. அக்காளுடைய குற்றமும் அல்ல. அது அவ்வளவு சுலபமாக இருந்த தால், படித்து விட்டேன்," என்று புலம்பித் தவித்தாள்.

தான் படிக்கக் கற்றுக்கொண்டு விட்டது ஒரு குற்றமென்றும், அது மன்னிக்க முடியாத குற்றம் என்றும், நினைத்துக்கொண்டு, குழந்தை, கையையும் மென்னி யையும் பிசைந்து கொண்டு பரி தபித்தது.

வயதிற்குத் தகுந்த புஸ்தகங் களைக் குழந்தைகளின் கையில் கொடுக்க வேண்டும். இந்தக் குழந்தையோ வயதிற்கு மிக வும் மீறிய புத்திசாலி. ஆகை யினால் பெற்றோர்கள், சாமர்த்திய மாகப் பாடுபட்டு, கூடிய மட்டில் புத்தகம் யாதொன்றும் அவ ளுடைய கைக்குக் கிடைக்காம லேயே பார்த்துக் கொண்டார்கள். அவளிடம் பொம்மைகளைக் கொடுத்து, பொழுது போக்கச் சொன்னார்கள். அவளைப் பாட வைத்தார்கள். அவளை நந்த வனத்தில் உலாவச் செய்தார்கள். படகுகளை ஓட்டுவது, பட்சணங் களைப் பண்ணுவது, மரங்களில் ஏறுவது—இந்த விளையாட்டுகளில் இவள் பொழுதைப் போக்கும்படி பெற்றோர்கள் செய்தார்கள்.

இந்தக் குடும்பத்திற்கு அநே கம் கிராமங்களில் பந்து வர்க்கங் கள் உண்டு. பள்ளிக்கூடங்களுக்கு நீண்ட லீவு ஏற்பட்டபோதெல் லாம், இந்தக் குடும்பத்தினர் அந்தக் கிராமங்களுக்குச் செல் வார்கள். குழந்தைகள், நாகரீகத் தினுடைய விகாரங்களில் ஈடு படாமல், மாசு படாமல், குடி யானவர்களுக்கிடையே பரவச மாகிக் காலத்தைக் கழிப்பார்கள்.

1872-ல் இவளுக்கு வயது ஐந்து. அந்தக் காலத்திலெல்லாம் போலந்து ரஷ்யாவினுடைய ஆதிக்கத்தில் இருந்து வந்தது. அப்போது போலிஷ்காரனாகப் பிறந்தவனின் பிழைப்பு, ரொம்ப கடினம்தான். 1864-ல் போலிஷ் காரர்கள் ஒரு சுதந்திரக் கலகத் தைச் செய்தார்கள். முறியடிக்கப் பட்டார்கள்; படுதோல்வி யடைந் தார்கள். ஆயினும் போலந்து சாவதற்கு சம்மதிக்கவில்லை.

போலந்தைப் பணிய வைப்பதற்கு ரஷ்யா, பல குரூரமான முறைகளைக் கையாண்டது. பிரமாதமான போலிஷ் படையை அமைத்து, கவனித்து வரும்படி செய்தது; மதத்தை மடியச் செய்வதற்கு பல கோளாறுகளைச் செய்தது; உணர்ச்சி கொடுக்கும் புஸ்தகங்களைப் போலிஷ்காரர் படிக்கவொட்டாமல் செய்தது; சுதேச பாஷை உபயோகிக்கப் படுவதைத் தடுத்தது.

இதற்கு எதிர்ப்பு வேலையை சுதேசிகள் சுறுசுறுப்புடன் செய்தார்கள். தைரியஸ்தனுக்கு வேறு மார்க்கமே அற்றுப்போய் விட்டதால்,உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவதையே அந்தத் தலைமுறையினர் சாதகம் செய்தார்கள். இந்த தீரமான சுதேசிகளுக்கு இருந்த ஸ்தானங்களை ரஷ்யா சக்ரவர்த்தி, பிடுங்கிக் கொண்டு விடாமல் இருக்கும் பொருட்டு அவருடைய ஆட்கள் செய்த சகல அவமானங்களையும் சுதேசிகள் சகித்துக் கொண்டிருந்தார்கள். அந்த ஸ்தானங்களில் இருந்து கொண்டு, போலிஷ் வாலிபர்களுக்கு ரகசியமாக தேசாபிமானத்தை போதித்தார்கள்; மற்றவர்களுக்கும் ரகசியமாக சுயராஜ்ய மார்க்கத்தைப் போதித்து வந்தார்கள்.

ஆதலால் மேலுக்கு மாத்திரம் மரியாதை. உள்ளூர, ரஷ்யர்களுக்கும் சுதேசிகளுக்கும் ஆழ்ந்த பகைதான் வளர்ந்து வந்தது. பள்ளிக்கூடங்களில் எல்லாம் சுதேசி உபாத்தியாயர்களை அதிகாரிகள் வேவு பார்ப்பதும் தண்டிப்பதுமாக இருந்தார்கள். ரஷ்ய பாஷையில் தான், போலிஷ் வாலிபர்களுக்குப் போதிக்க வேண்டும், என்று ஒரு விதியையும் ஏற்படுத்தியிருந்தார்கள்.

ரஷ்ய அதிகாரிகள்—பள்ளிக்கூடங்களில், பௌதிக சாஸ்திரப் படிப்பைக் குறைத்து விட்டார்கள். ஆகையினால், மேரியின் தந்தைக்குச் சொந்தமான அந்த சாஸ்திரம் சம்பந்தப்பட்ட சாமான்கள் வெளியே செல்வது கிடையாது. வீட்டிலே ஒரு கண்ணாடி பீரோவில் அவைகளை அவர் வைத்துவிட்டார். பீரோவிற்கு வெளியில், "பௌதீக சாஸ்திரக் கருவிகள்", என்று எழுதி ஒட்டி வைத்து விட்டார். இவைகளைத் தொட்டுப் பார்த்து, இன்னவையென்று அறிந்து கொள்ள வேண்டும், என்று மேரியை ஒரு ஆவல் தூண்டிக்கொண்டேயிருந்தது.

ஒரு நாள், கால் கட்டை விரலில் நின்றுகொண்டு, உயர எழுதியிருப்பதை ஒவ்வொரு எழுத்தாகப் படித்து, அதை ஒரு பாட்டாக பாடிக் கொண்டாள். அந்தப் பாட்டைப் பாடிக்கொண்டே, ஒரு வாரம் பொழுது போக்கினாள்.

நாளடைவில் பள்ளிக்கூடம் சென்று மேரி படிக்க ஆரம்பித்து விட்டாள். எந்த பாடத்திலும் மேரிதான் முதலாக நின்றாள். கணக்கு, சரித்திரம், இலக்கியம், ஜெர்மன் பாஷை, பிரெஞ்சு பாஷை, மதப் புத்தகம் யாவற்றிலும் இவளுக்குத்தான் முதல் ஸ்தானம்.

ஒரு நாள் பள்ளிக்கூடத்தில் போலந்து தனது சுதந்திரத்தை இழந்தபோது இருந்த போலிஷ் அரசனைக் குறித்து சரித்திர வாத்தியார் மேரியை ஒரு கேள்வி கேட்டார். இவள் தேசாபிமானம் நிறைந்த பதிலைச் சொன்னாள். உபாத்தியாயர் உள்ளம் பூரித்தார். குழந்தைக்கு நல்ல ஆசீர்வாதம் கொடுத்தார். திடுக்கென ஒரு ஸிக்னல் வந்தது; அதாவது, ரஷ்ய இன்ஸ்பெக்டர் வருகிறார் என்று அர்த்தம். உடனே ஆனந்தமெல்லாம் ஒழிந்தது. இருபத்தைந்து இளம் மாணவர்களும், உபாத்தியாயரும் சேர்ந்து ஓசைப்படாமல் மூச்சு விடாமல் சதி செய்தார்கள்.

இன்ஸ்பெக்டர் நுழைந்தார். "என்ன பாடம் நடந்தது?" என்ற கேள்வி கேட்டார். அந்த இருபத்தைந்து குழந்தைகளில் ஏதோ ஒரு குழந்தையின் தலையில் அந்தக் கேள்வி விழப்போகிறது. மேரி, "தெய்வமே, தயவு செய்து இன்ஸ்பெக்டர் என்னைக் கூப்பிடாமலிருக்கட்டும்" என்று தனக்குள் பிரார்த்தனை செய்து கொண்டாள்.

அந்தக் கேள்வி செவியில் பட்டதுமே, அந்த இருபத்தைந்து, குழந்தைகளின் களங்கமற்றிருந்த முகங்களில், பொய்யும் புனை சுருட்டும், அழகையே அழித்து விட்டு வந்து உட்கார்ந்துகொண்டன. அந்த முகங்களுக்குப் பின்புறத்தில் பயமும், தந்திரமும், பகையும் குடியேறிக்கொண்டன.

இன்ஸ்பெக்டர் மேரியைக் கூப்பிட்டு, "என்ன பாடம் நடந்தது?" என்றார்.

மேரி, உடனே ஒரு கட்டுக் கதையைத் தயாரித்து, "இது தான் நடந்தது," என்றாள். பின்னிட்டு, ராஜ விச்வாஸத்தைப் பரிசோதிக்கும்படியான சில கேள்விகளைக் கேட்டார். அதற்கெல்லாம் மேரி, பொருத்தமான, திருத்திரமான, பதில்களைச் சொல்லி விட்டாள். 'பேஷ்' என்று மெச்சி விட்டு இன்ஸ்பெக்டர் வெளியே போய்விட்டார்! ஆனைவரும், "இன்றைக்குத் தப்பினோம்," என்று பெருமூச்சுவிட்டார்கள். உபாத்தியாயினி மேரியை நெற்றியில் முத்தமிட்டாள்; மேரி கண்ணீர் விட்டாள்.

அப்போது, போலந்தில், எந்த அயோக்கியப் பயலும் எந்தச் சோம்பேறிப் பயலும், "நான் இதைக் கண்டேன் அதைக் கண்டேன்," என்று சொல்லி, ரஷ்ய ஆட்சியில் துரோகத்தால் பதவியும் மேன்மையையும் அடைந்து விடும்படி யிருந்தது.

மேரிக்கு இதெல்லாம் பரம வேதனை. பொய் எப்போதும் பொய். இந்த நிலைமையை அவள் பகைத்தாள். வெறுத்தாள். இந்த திடீர் திகில்களை அவளால் சகிக்க முடியவில்லை. "கவலையற்ற பேபியாக நான் எப்போதாவது இருந்திருப்பேனா?" என்று இந்த இளம் வயதில் அவளுக்கு திகைப்பு ஏற்பட்டது. அடிமை தேசத்தின் குழந்தைகளுடைய கதி அதோ கதிதான்!

எவ்வளவு மறைத்த போதிலும், இவளுடைய தந்தையின் சுதேச அபிமானத்தை ரஷ்யாவின் அதிகாரவர்க்கம் கண்டு

கொண்டது; ஆகையினால் அவரைக் கீழ்தர வேலைக்குத் தள்ளினார்கள். சம்பளத்தைக் குறைத்தார்கள். குடும்பம் பெரிதாகிவிட்டது. வருமானம் குறைந்தது. தாயின் நோய்க்கு வைத்தியச் செலவு வேறு. தரித்திரம் ஏற்பட்டுவிட்டது.

ஆகையினால் இதுவரைக்கும் இருந்துவந்த வீட்டைக் குடும்பம் காலி செய்துவிட்டது. வேறு மலிவான வீட்டிற்குச் சென்றது. அப்படியும் செலவிற்குக் கட்டவில்லை.

ஆதலால் மாணவர்களுக்கு வீட்டிலேயே சாப்பாடு போட்டு, பிரத்யேகமாக படிப்பும் தந்தை சொல்லிக் கொடுத்து வந்தார். இதனால் கொஞ்சம் பணம் கிடைத்தது. ஆனால், வீடு ஏறக்குறைய ஒரு ஹோட்டல் மாதிரியாகி விட்டது. இதனால் குடும்ப வாழ்க்கையிலிருந்து அந்தரங்கம் என்பது பறந்தோடி விட்டது.

இந்த தரித்திரத்தில், இடி போல ஒரு பெருத்த நஷ்டமும் வந்து விழுந்தது. தந்தையின் மைத்துனர் ஒருவர்—"அற்புதமான மில் ஒன்று வைக்கிறேன், பொருளை அள்ளலாம்" என்று தந்தைக்குப் போதித்து, அவர் திரட்டி வைத்திருந்த பொருளையெல்லாம் கக்கிக்கொண்டு போய் விட்டார். பிறகு, "எல்லாம் தொலைந்தது. எல்லாம் நஷ்டம்" என்று வெறுங்கையை விரித்து விட்டான்.

"குடும்பத்திற்கே நான் பெரிய அதிர்ஷ்டத்தைச் செய்து விட்டேன்," என்று தந்தை புலம்பி வந்தபோது—1876-ல் பெற்றோர்களுடைய தலையில் ஒரு பேரிடி விழுந்தது. கிருஷ்ண தோஷ ஜுரம் அடித்து, ஸோஸியா என்ற குழந்தை இறந்தாள். தாயார் அப்போது படுத்த படுக்கையாக இருக்கிறாள். குழந்தையின் சவப்பெட்டியுடன் கல்லறைக்குச் செல்வதற்கு, அவளுடைய உடம்பு இடம் கொடுக்கவில்லை. கட்டிலில் இருந்து கொண்டே—பெட்டியில் ஸோஸியாவின் சவம் செல்வத்தை—படுக்கையில் புரண்டு புரண்டு, ஜன்னல்கள் வழியே, சவம் செல்வதைக் கண்டு தாய் துடித்தாள்!

லக்கின குணாதிசயங்கள்

இதுவரை நட்சத்திர குணாதிசயங்களைப்பற்றிச் சொல்லி முடித்தோம்.

இனி இராசிகளின் லட்சணங்களையும் அவற்றில் ஜெனிப்பவர்களின் பலாபலன்களையும் சொல்வோம்.

1. மேடம்

மேடத்தின் பொதுவான நாழிகை $4\frac{1}{4}$.

இதற்கு பூதம்	தேயு
உருவம்	ஆண்
உற்பவம்	தாது. (விதை)
நிறம்	சிவப்பு
திக்கு	கிழக்கு
அதிபதி	அங்காரகன்
சாதி	க்ஷத்திரியன்
அங்கம்	சிரசு
இடம்	காடு
குணம்	திரம்
வடிவம்	ஆடு
விழிப்பு	இரவில்

மேட லக்கினத்தின் குணாதிசயங்கள். ராஜப் பிரபுக்களால் மதிக்கப்படுபவன். திடமான புத்தியை யுடையவன். நகைப்புறும் வார்த்தைகளில் பிரியப்படுபவன். நீண்ட திடமான தந்தங்களை யுடையவன். பற்களில் மிருதுவான சதைப்பற்றுள்ளவன். சமர்த்தாக தனத்தைத் தேடும் வல்லபன். நல்ல தரும சாஸ்திரங்களைக் கேட்போன். ஆனால் சிலகாலம் அவற்றில் பற்றற்றவனாய் இருந்து பின்னால் அவற்றில் பற்றுள்ளவனாவான். நீண்ட அல்லது அகன்ற கழுத்தை உடையவன். நெறியான வார்த்தைகளைப் பேசுபவன்.

முன் கோபமுடையவன். தாய் சுகமற்றவன். களத்திர தோஷ முள்ளவன். சிலநாள் பிதிர் சுகமுற்றும் பிரிபவன். அந்நிய தேச சஞ்சாரன். சுகத்தில் இச்சையுறினும் பிறருக்குக் காட்டிக்கொள்ளாத வன். மனைவியின் மேல் மிகுந்த பிரியமுள்ளவன். முடியாத காரியங் களையும் செய்யப் பிரியப்படுபவன். ஆய்ந்து பாராமல் காரியங்களைச் செய்து பின் வருத்தப்படுபவன். அளவாகப் புத்திரரைப் பெறுபவன்.

பிதுர் பாக்கிய மூறினும் இடையிற் குறைந்தோ அல்லது அடை யாமலோ போவான். சகோதரர் ஒற்றுமையற்றவன்; நீசரைப் பகைப் பன்; ஆயினும் சிலர்பால் பிரியம் வைத்து சில தொழில் செய்து தக்க லாபம் அடைபவன். அநேகரின் சிநேகம் கொள்ளுபவன். நேசரால் வருந்துபவன். சரீரத்தில் இடையில் காயமடைபவன். ஆயுதச் சிகிச்சை செய்து கொள்ளுபவன். அவ்வடு எப்பொழுதும் மாறாதிருப்பவன். அல்லது அக்னி முதலியவற்றால் சரீர பின்ன மடைபவன். போர் புரிந்தேனும் வடுப்படுபவன். நீதியான தொழில் செய்து பொருள் சம்பாதிப்பதுடன், சில காலங்களில் நீதியற்றும் பெரும்பொருள் தேடுபவன். ஆதி மத்தியந்தங்களில் வறுமையாலும் சத்துருக்களாலும் வருந்துபவன். தெரியாத வழக்குகளையும் பற்றி உள்ள முக்கிய கருத்தை அறிந்துரைப்பவன். நிலையாத அநேக சுகங்களை அடைபவன். அறிவையுரைத்து அழகைப் பெறுபவன். பரந்த நெற்றியை உடையவன். அழகிய நேத்திரமுள்ளவன். கெற்ப பிணி அல்லது உதிர நோய் உள்ளவனுமாவான்.

பின்னும் மேட லக்கினத்தில் சூரியன் இருக்கப் பிறப்பார் கள் ஆயின், சூரத்தனமுள்ளவன். பிரகாசிக்கும் தக்க அறிவைப் படைத்தவன். புத்திர தோஷமுள்ளவன். ஆயினும் மணி போன்ற ஏக புத்திரனால் கீர்த்தியடைபவன். அரசர் முதலிய பெருந்தகை யோருக்கும் மந்திரியைப்போல் புத்தி சொல்லும் புண்ணியன். ராஜாபிமானி. அந்திய காலத்தில் தக்க ஞான நூல்களை ஆராய்ந்து மோட்ச சாதனத்தையும் அடைபவன். பூர்வ ஜென்ம புண்ணியத் தால் அநேக சௌக்கியங்களையும் அடைபவன். மேலும் தியாகஞ் செய்பவன்.

ஆனால் மற்றும் சந்திரன் முதலிய கிரக சம்பந்தமோ அல்லது பார்வையோ இல்லாமல் அதியச்சனுபு மிருக்கில், அரசர் குலத்தில் உதித்து ராஜ்ய பரிபாலனம் செய்வான். சாமான்ய குடும்பங்களில் பிறப்பானயின் அறிவின் விருத்தியினால் மதிமயக்கங் கொண்டு திரிவான். ராஜ குலத்தில் பிறந்தால் ராஜ்ய மாளுவான் என்றும், சாதாரண குடும்பங்களில் பிறந்தால் பைத்தியம்போல் திரிவான் என்ற காரணம் என்னவென்பீர்கள். அதை அநுபோகத்தால் அறியலாம்.

இதே மேட லக்கினத்தில் சூரியன் இருக்க ஒரு பெண் பிறக்கு மாயின் நல்ல தைரியமும் வித்தை புத்தி மேன்மையுமுண்டாம்.

ஆனால் சூரியன் அதி யுச்சம் பெற்றோ, சந்திரன் முதலிய கிரகங்கள் சூரியனைச் சேர்ந்தோ அல்லது பார்க்காமலுமிருக்கின் தான் ஒரு ராஜ் யத்தை ஆளும் அரசியுமாவாள். மணஞ் செய்யின் கணவனோ டொற்றிருப்பதுதான் சந்தேகம். பொதுவில் கணவனோடு இல்லற தருமம் நடத்துவாளாயின் குறை கொண்டு வருந்தச்செய்யும். தான் உதித்து வாழும் குடும்பங்களிலும் சில குறைகள் உண்டாகும். தடுத்துக்கொள்ள சூரிய நமஸ்காரம் செய்து வர நன்மையாம்.

பின்னும் மேட லக்கினத்தில் சந்திரன் தனித்து நிற்பானுயின் மிருந்த சுகங்களை அனுபவிப்பவன். மிருதுவான அழகிய சரீர முள்ளவன். சீத தேகி. (சீதம் - குளிர்ச்சி.) மெதுவானதும் அழ கிய சாதுரிய வசனமும் உடையவன். மரக்கலப் பிரயாணம் செய்ப வன். தனக்குத் தெரியாத இடங்களில் அழகிய மச்சமுடையவன். தாய்க்கு இனியன். விசித்ர வாகன சுகமுடையவன். பிதுரினும் மேலான யோகங்களை அடைபவன். காய் கறி முதலிய பதார்த்தங் களில் மிகப் பிரியமுள்ளவன். அற்ப சந்தோஷங்களில் வெறுப்புள் ளவன். இடை வயதில் வாயு, சீத சம்பந்தமான பிணிகளால் வருந்து பவன். இளகிய மனமுள்ளவன். ஸ்திரீகளால் பாக்கிய முதலிய நன்மை அடைபவன். பால் பசு விருத்தி உள்ளவன். பசுமை நிற முடைய வஸ்துக்களில் பிரியப்படுபவன். பராசக்தி முதலிய தெய் வங்களைத் துதிப்பவன். தனது அறிவில் எப்போதும் முக்கிய காரி யங்களை ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பவனுமாவான்.

மேலும் மேடத்தில் செவ்வாய் இருக்கின் மிக்க கீர்த்தியுள்ள வன். திடம் பொருந்திய சொற்களை யுள்ளவன். எப்பொழுதும் போர் புரியப் பிரியப்படுபவன். அரசராயினும் மதியாதவன். தந்தை சொற் கேளாதவன். சிறு வயதில் தாயை இழப்பவன், அல்லது சுக மற்றவன். சத்துருக்கள் எப்பொழுதும் உள்ளவன். சத்துருக்களை எதிர்த்துச் ஜயமடைபவன். குருவுக்கும் புத்தி புகட்டுபவன். அதிக மான திட்சணியம் பொருந்திய மூளையை உடையவன். சரீரத் தில் அறுபட்ட காயங்கள் உள்ளவன். அரசரும் அஞ்சத் தக்க அறி வைப் பெற்றவன். சேதி சொல்லுபவன்.

நீர் முதலிய பிணிகளால் வருந்துபவன். சிறு தோஷமுள்ள உத்தமமான களத்திரமுள்ளவன். எக்காரியங்களையும் மறைக்காமல் மனைவியோடொற்றுச் செய்பவன். மனையாளுக்கினியான். அஞ்சாத நெஞ்சம் படைத்தவன். கனமான சரீரத்தையுடையவன். ஆதி மத்தி யாந்தங்களில் கொடிய வினையால் தரித்திரத் தன்மை யுறினும் உடனே முன்போன்ற வாழ்வைப் பெற்று உயர்வானுமாவன்.

(தொடரும்)

உண்மை பேசு!

திரும்பத் திரும்ப சரிபார்த்து, திருத்தப்பட்ட சிந்தனைகள், முறிவே ஏற்படாத ஆழ்ந்த கருத்துக்கள்—இவைகளின் அடிப்படையிலிருந்து, கிளம்பி வருவதுதான் உண்மை.

*　　*　　*

மனித சமூகத்தின் சந்தோஷத்துக்கும், ஐக்ய பாவத்துக்கும் அடிப்படை உண்மைதான். இந்த இன்றியமையாத குணம் இல்லாது போனால், வார்த்தைக்கு மதிப்பு இல்லை; சிநேகிதத்தில் நம்பிக்கை இருக்காது; கொடுக்கும் வாக்குறுதிகளுக்கு ஒரு ஸ்திரத்தன்மை இருக்காது.

*　　*　　*

இயற்கை, காலம் இவைகளின் குரல் தான் உண்மை.

*　　*　　*

உன் வார்த்தைகளுக்கு உன் செய்கைகள் ஒத்துக் கொடுக்கின்றன. அந்த உன் வார்த்தைகள், உன் விசாலமான ஹிருதயத்தை உச்சரிக்கின்றன. உன் ஹிருதயமோ நியாயம், நல்லது, அறிவு இவைகள் அடங்கினதாக இருக்கிறது. இவைகள் தான் உண்மையோடு பொருந்தினவை.

*　　*　　*

ஒரு முடிவுக்கு வர, நியாயம் காட்டுவதற்கு, உண்மை தகவல் கொடுக்கிறது. மனது செய்த தப்புகளையும் நிவாரணம் செய்து விடுகிறது. அறிவை சந்தோஷப் படுத்துகிறது. 'இஷ்டம்' என்று ஒன்று இருக்கிறதே அதைக் கீழ்ப்படியச் செய்கிறது. என் ஞாபகசக்தியையும் கூட.

*　　*　　*

இந்த உலகத்திலேயே இயற்கை அழகாக கருதப்படுவது, கண்யமாயும், உண்மையோடும் இருப்பதுதான். பொருத்தமான அம்சங்கள் முகத்தை அழகு படுத்துகின்றன. நேர்த்தியான சின்னங்கள் ஒரு கட்டிடத்தை அழகு படுத்துகின்றன. பொருத்தமான சுருதிலயம் சங்கீதத்தை அழகு படுத்துகிறது. கற்பனை வீசும் கவிதையிலும் உண்மைக்குத்தான் உயர்ந்த இடம்.

*　　*　　*

சகல ஆசிர்வாதங்களிலும் விலை மதிக்க ஒண்ணாதது உண்

மையின் பண்புதான். அது இல்லாது போனால் மனிதன் குருடன் தான். தர்க்க நீதிக் கண் தான் உண்மை.

* * *

உண்மையை துணிவோடு நான் எடுத்துச் சொன்னால், யார் என்னைப் பொய்யன் என்று சொல்ல முடியும்? என் வார்த்தைகளை, ஒன்றுக்கும் உதவாதது என்று எவன் சொல்வான்?

* * *

ஒவ்வொருவனும், உண்மைக்காக பரிந்து போகக் கூடிய யோக்யதை உடையவன் இல்லை. அநேகர் உண்மை மீதுள்ள ஒரு ஆலோசனையபற்றப் பற்றுவில் கோளாறாக நடந்து கொண்டு, உண்மைக்கு விரோதிகளாகவே நிலையாக ஆகிவிடுகிறார்கள்.

* * *

அழியாத தன்மைகொண்ட சூரியன்தான் உண்மை. சூரியனை மேகம் பல சமயங்களில் மறைத்து விடுகிறது. அதனால் சூரிய ஒளி மங்கிவிட்டது என்று ஆகாது. அதுபோல உண்மையை மறைத்துவிட முடியாது. அதன் ஒளியும் மங்காதது. நல்ல வளர்ச்சியைத் தடுக்கும் என பலஹீனங்களால், விருப்பு வெறுப்புகளால், அறைகுறையான நம்பிக்கைகளால், இன்னும் ஆயிரக்கணக்கான குறைகளால்தான் உண்மை மங்குகிறது.

* * *

உண்மையைச் சொல்லி விட்டால் வழக்கம் அதற்கு இடம் கொடுத்துவிட வேண்டும். உண்மைக்கும் தர்க்க நீதிக்கும் முன், ஒரு மனிதனும் வழக்கத்தைப் பெரிதாக மதிக்க வேண்டாம்.

* * *

அறிவுக்கே இருப்பிடம் உண்மை. சகல பொருள்களும் வந்து சேர்ந்து அங்கே அனுப்பாறிக் கொள்கின்றன. அதுதான் நிரந்தர, சாஸ்வத நிலை.

* * *

உண்மையை ஆராய்ந்து காண்பதில், மனிதனுடைய மனோ சக்திகளையும், சுதந்திரங்களையும் வளர்ப்பதில் ஒவ்வொரு பரம்பரைக்கும் அதற்கென்று வேலை ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. நாம் நமது பங்கை செலுத்த வேண்டாமா?

* * *

மனப் பூர்வமாக உண்மையைக் கடைப்பிடிப்பவனின் மனதிலே உள்ள ஆயிரக்கணக்கான குறைகள் நிவாரணமாகி விடுகின்றன.

* * *

"உண்மையை விலைக்கு வாங்கி விடு—என்ன விலை கொடுத்தாலும் சரி. எவ்வளவு உழைப்பு உழைத்தாகிலும் சரி; தியாகம் செய்தாகிலும் சரி; உன் அறிவையோ புத்திசாலித்தனத்தை உபயோகித்தாகிலும்சரி அதைவாங்கி விடு. அது கிடைத்து விட்ட பிறகு விடாதே. உன் சுகத்துக்காகவோ, உன் வளர்ச்சியை உத்தேசித்தோ, புகழுக்காகவோ, அல்லது வாழ்க்கைக்காகவோ அதை விற்று விடாதே."

* * *

அறிவாளிகள் கையில் உண்மை ஒரு வைர மணி. முட்டாள்கள் கையில் உண்மை ஒரு கத்தி!

பச்சையாக உண்மையைச் சொன்னால் அது யாருக்கும் மகிழ்ச்சி தருவதில்லை.

* * *

ஒரு தனிப்பட்ட கக்ஷியின் சின்னங்களை அணிந்து கொண்டு வருவதில்லை உண்மை!

* * *

உண்மையை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். முதலில் உண்மையை ஆராய்வது; அதாவது தேடுதல். இரண்டாவது அதன் இடத்தை அறிந்து கொண்டு விடுவது; அதாவது அதை உணர்வது. மூன்றாவது அதில் நம்பிக்கை கொள்வது, அதாவது அதை அநுபவித்து சந்தோஷப்படுவது.

* * *

'ஒரு சில கருக்காய்கள் இருக்கிறது' என்பதற்காக ஒரு கதிர் உண்மையை வீசி எறிந்துவிடக் கூடாது; ஏனென்றால், அதற்கு நேர் எதிரிடையாக, அதில் இருக்கும் ஒரு சில தான்ய மணிகளுக்காக ஒரு கதிர் கருக்காய்கூட நமக்குக் கிடைக்கலாம்.

* * *

கலங்கின ஜலத்தில் முகத்தைப் பார்க்கவே முடியாது. ஜலம் அமைதியாக நிற்கும் வரையில் தெளிவாகப் பார்க்கவும் முடியாது. அதே மாதிரி கஷ்டப்படும் காலத்தில் உண்மையைக் கொஞ்சம்கூட நீ பார்க்க முடியாது. நிலைமை அமைதியான பிறகே தான் உண்மை வெளியே தெரியும்.

உண்மைக்கு மனிதர்கள் ஐஸைப் போல குளிர்ச்சி மனப்பான்மை காட்டுகிறார்கள்; பொய்யிடம் நெருப்பைப் போல் எறிச்சல் கொள்கிறார்கள்.

* * *

குப்பை கூளங்களைப்போல தவறுகள் ஜலத்தின் மேல் மட்டத்தில்தான் மிதந்து கொண்டிருக்கும். முத்தைத் தேடுகிறவன், ஆழத்திற்குள் நீந்திப் போய்த்தான் பார்க்க வேண்டும்.

* * *

உண்மைக்கு இருப்பிடம் எது தெரியுமா? நமது ரகஸ்யமான ஹிருதயத்தில்தான் இருக்கிறது. அடிக்கடி பொய்யை உச்சரிக்கிறதே, அந்த நாக்கில் அல்ல!

* * *

உண்மையைத் தரையில் வைத்து நசுக்கினாலும் எகிறி மேலே கிளம்பும். கடவுளின் சாச்வத கால அளவுதான் அதற்கும்! ஆனால் காயப்பட்ட தவறோ வேதனையோடு அலறுகிறது. அதனை வழிபடுபவர்களிடையேயே உயிரை விடுகிறது.

* * *

பூராவும் நம்புவதற்கு முன் உண்மையை மனிதர்கள் காதலிக்க வேண்டும்.

* * *

கடவுள் வாக்கு அழியாதது. ஏன்? அதுதான் உண்மை. அதற்கு முன்பு பொய் நிற்கிறதில்லை.

கிட்டுவின் கட்டுரை

"ரஞ்சனன்"

ராகவாச்சாரி அன்று வந்த தபால்களைப் புரட்டினதும் திடுக்கிட்டுப் போனான். அவன் எதைக் காணக்கூடாது என்று பிரார்த்தனை செய்துகொண்டே கடிதங்களைத் தொட்டானோ, அந்த சனியனே எதிரில் வந்து நின்றது. விடாமுயற்சியுள்ளவர்கள் தோல்வியடையமாட்டார்கள் என்ற பெரியார் வாக்கைப் பொய்யாக்க வந்ததைப்போல் அந்தக் கையெழுத்துப் பிரதி அவனுக்கே திரும்பி வந்திருந்தது. அது "புயல்காற்று" பேப்பருக்கு "கிட்டு" என்ற புனைப் பெயரில் அவன் எழுதிய கட்டுரை!

அவன் பத்திரிகைகளோடு போராடும் ஒரு எழுத்தாளன். மூன்று வருஷங்களாக ஓய்ச்சல் ஒழிவில்லாமல் எழுதுகிறான். ஆனால் நேற்றுவரை அந்தப் பத்திரிகாசிரியர்களுக்கு அவன்மீது கொஞ்சம்கூட இரக்கம் பிறக்கவில்லை. ஒருவராவது அவன் கதைகளையோ கட்டுரைகளையோ பிரசுரிப்பதாகக் காணோம்.

அவனும் எவ்வளவோ மார்க்கங்களைக் கையாண்டு பார்த்து விட்டான். முதலில் பிரசாரத்திற்காக எழுதினான். விஷயம் ஆலயப்பிரவேசம். ஹரிஜனங்களைக் கோவிலுக்குள் விடுவதா, வேண்டாமா என்பதைப் பற்றி ஒரு கதை எழுதி முதலில் ஒரு பத்திரிகைக்கு அனுப்பினான். கடைசியில் மீனாக்ஷி கோவில் திறந்து ஹரிஜனங்களுக்கும் விடப்பட்டதைக் குறித்து அந்தக் கதையின் முக்கியமான ஆள் மீனாக்ஷியைப் போற்றுவதோடு கதை முடிகிறது.

ராகவாச்சாரி சர்வ நிச்சயத்தோடிருந்தான், அந்தக் கதை வெளிவந்துவிடுமென்று! அப்படி அவன் நினைப்பதற்கு அநேக காரணங்களும் இருந்தன. அவன் கட்டுரை அனுப்பிய பத்திரிகை புதிதாக ஆரம்பிக்கப்பட்டு இரண்டு மூன்று இதழ்கள்தான் வெளியே வந்திருந்தன. இரண்டாவது, அவர்கள் பிரசுரிக்கும் கதைகளுக்குப் பணம் கொடுப்பதில்லை. கடைசியாக, அவன் எழுதிய கதை ரொம்ப 'டாபிகல்'!—அதாவது அன்று அவர்கள் கண்முன் நடக்கும் விஷயம். எனவே தன் கதையை எதிர்பார்த்துப் பார்த்து இரண்டு மூன்று பத்திரிகைகள் வாங்கினான்.

கதையைக் காணாமல் போகவே, ஸ்ரீ ராகவாச்சாரிக்கும் கோபம் உண்டாகத்தான் செய்தது. பத்திரிகை ஆபீஸுக்குப் போய் "ஓய்! என்னங்காணும்! என் கதையைப் போடுகிறீரா இல்லையானால் திருப்பிக்கொடுத்து

விடுகிறீரா ?" என்று கோபித்துக் கொள்ளலாமா என்று ராகவாச்சாரி யோசனை செய்து பார்த்தான். அது அவ்வளவு உசிதமில்லை என்று அவனுக்குப் பட்டது.

உடனே ஒரு அரையணா ஸ்டாம்பு ஒன்று வாங்கி, ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதி, அதோடு அதையும் வைத்து அந்த ஆபீஸுக்கு அனுப்பினன். அவனுடைய கதையைத் தாங்கி வரும் பாக்கியம் அந்தப் பத்திரிகைக்கு இல்லாவிட்டால், அந்தக் கதையை உடனே திருப்பி யனுப்புவதற்காக ஸ்டாம்பும் அதோடு வைத்திருப்பதாக எழுதி யிருந்தான். மறுநாளே கையெழுத்துப் பிரதி அவனிடம் வந்து சேர்ந்தது.

அது முதற்கொண்டு ராகவாச்சாரி அந்தப் பத்திரிகையை லட்சியம் செய்வதில்லை. அது வெளி வந்ததா இல்லையா என்று கூடக் கவனிப்பதில்லை. ஆனல் அந்தப் பத்திரிகை என்னமோ வெளி வந்துகொண்டேதான் இருந்தது. அதைப்பற்றி வேறு இடங்களில் மதிப்புரை எழுதியவர்களும், பத்திரிகை மிகவும் நன்ருக இருக்கிறதென்றுதான் எழுதினர்களே ஒழிய, "பத்திரிகை நன்ருக இல்லை; ஏனென்ருல் 'கிட்டு' வென்ற புனைப்பெயரோடு ஒரு கதையும் அதில் ஸ்ரீ ராகவாச்சாரியால் எழுதப்படவில்லை" என்று எழுதவில்லை.

அடுத்தபடியாக "நகைச் சுவையூட்டும் கதைகளையும், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் சிறந்த கட்டுரைகளையு" மாவது கொஞ்சம் எழுதிப் பார்க்கலாமா என்ற எண்ணம் வந்த உடனே பேனவைக் கையிலெடுத்தான் ராகவாச்சாரி. "கிட்டு" என்ற புனைப் பெயரில் எழுத்தித் தள்ள ஆரம்பித்தான்!

எவ்வளவோ கட்டுரைகள் அதிலும் எழுதி விட்டான்; ஆனல் ஒன்றையாவது அச்சடித்துப் பிரசுரித்து அவன் கண்ணல் பார்க்கவில்லை. காலணப் பேப்பர் முதல், "விலை அணா எட்டு" என்று போடப்பட்டிருக்கும் பத்திரிகைகள் வரையில் அவைகளை அனுப்பிவிட்டான். நடுவில் இரண்டொரு ஆண்டு மலர்களுக்கும் அவைகளை அனுப்பி வைத்தான். அவைகள் திரும்பித் திரும்பி வந்து அவன் காலைத் தான் கட்டிக் கொண்டன.

இந்த மாதிரி எழுதுவதையும் தாற்காலிகமாக நிறுத்தி வைத்தான் "கிட்டு" என்ற ராகவாச்சாரி! இப்படியே எழுதிக்கொண்டு போவதிலும், அந்த மண்டைக் கிறுக்குப் பிடித்த ஆசிரியர்கள் அதை "வேண்டாம், வேண்டாம்" என்று சொல்லித் திருப்பி விடுவதிலும் அர்த்தமே இல்லை! இதை உணர்ந்துகொண்ட ராகவாச்சாரி தன் எழுத்தை வேறு விதமாகத் திருப்பினன். மறுமலர்ச்சி, கலை இவைகளின் பாணியில் அவன் எழுத்துக்கள் திரும்பின.

கதைகளின் மிகுதியால் தான், தன்னுடைய கதைகள் திருப்பி விடப்படுகின்றனவோ என்ற சந்தேகம் "கிட்டு"வுக்கு. எனவே கதைகளோடு சேர்த்து நடுவில் இரண்டொரு அரசியல் கட்டுரை

களையும் எழுதினன். அவைகளை எல்லோரும் எழுதும் முறையில், சாதாரணமாக எழுத அவன் முயலவில்லை. "இயற்கையின் ஒரு பகுதியாகிய மனித உள்ளத்தின் கற்பனைதானே அரசியலும்!"

இந்தத் தடவை அந்த ஆசிரியர் பிரமித்துப் போனர். "படைகளைக் கொண்டு வந்து ஆஸ்டிரியாவின் ஓரங்களில் ஹிட்லர் குவித்த போது, உலகமெல்லாம் நடுநடுங்கிற்று. இந்தியாவின் ஒரு மூலையில் இடியிடித்தது; மின்னல் மின்னியது. உலக நாசத்திற்கு முன் வரும் பிரளயத்தைப்போல், ஹிட்லரின் படைகள்........." என்று படித்துக் கொண்டே போகும்போது ஆசிரியரின் மூச்சே நின்று போயிற்று. அவர் பதில் எழுதினர் :—

ஸ்ரீ "கிட்டு" அவர்களுக்கு,

உங்களுடைய அரசியல் கட்டுரையைப் படிக்கும்போது என்னுடைய உடலே நடுக்கம் கொடுத்துப் போய் விட்டது. அது ஒரு எழுத்துச் சித்திரம். ஆனல் இதைப் படிப்பவர்கள் எல்லாம் அந்தக் கட்டுரையைப் படித்து மூர்ச்சித்து விழாமல் இருக்க வேண்டுமே என்ற கவலையால், நான் அதைப் பிரசுரிக்காமல் விடுகிறேன். மன்னிக்க வேண்டும்..."

"இது உபயோகப்படாது" என்பதை இவ்வளவு நாகரீகமாகச் சொன்னவரின் மேலும் "கிட்டு"வுக்குக் கோபம் வராமலில்லை. ஆனல் கோபித்துக்கொண்டு அவரை என்ன செய்ய முடியும்? உதவியற்ற "கிட்டு"வின் கோபம் அதனளவிலே நின்றது. வேறு எந்தப் பத்திரிகையிலாவது ஒரு கட்டுரை, அல்லது கதை எழுதி, அச்சடித்த அந்தப் பக்கத்தைப் பிய்த்து, இந்த ஆசிரியருக்கு அனுப்பவேண்டும் என்ற ஆவல் அவனுக்கு!

இவ்வளவுக்கும் மத்தியில் அவனே ஒரு பத்திரிகை ஆரம்பித்து, பல இடங்களிலிருந்தும் திரும்பி வந்த தன்னுடைய கையெழுத்துப் பிரதிகளை உலகிற்குக் காட்டி விட்டால் என்ன—என்ற எண்ணம் அவனுக்கு வராமலில்லை. ஆனல் அதில் ஸ்வாரஸ்யம் அதிகமில்லை என்று அவனுக்குப் பட்டது. முயன்றே பார்த்து விடுவது என்ற ஊக்கம் மறுபடியும் ராகவாச்சாரிக்கு உண்டாயிற்று.

"வேணுகோபாலன் என்ற ஒரு பையன் எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷை எழுதிவிட்டு வீட்டுக்கு வருகிறன். 'ரிஸல்ட்' பார்க்கும் போது, அவனுக்கு 'பெயில்' ஆகி விடுகிறது.

வீட்டிலிருந்த ரூபாயை எடுத்துக் கொண்டு வெளியே ஓடி விடுகிறன்! பையன் வீட்டுக்கு வரவே இல்லையே என்று நினைத்துக் கொண்டு கவலைப்பட்டுக்கொண்டிருந்த தகப்பனுரை, யாரோ ஒரு பையன் ரயிலில் அகப்பட்டு இறந்துவிட்டான் என்று பத்திரிகைகளில் வந்திருந்த செய்தி திடுக்கிடச் செய்கிறது. அவர் தேடிக் கொண்டு போகிறர். ஆனல் அந்தப் பையன் வேறு; தன் பையன் வேறு. வீடு திரும்பும்போது பையன் உள்ளே இருந்துகொண்டு எட்டிப் பார்க்கிறன்!"

இதை, "விழுந்து விழுந்து சிரிக்கும்படியான" ஒரு கட்டுரையில் புகுத்தி எழுதி, பத்திரிகை ஒன்றிற்கு அனுப்பி வைத்தான் "கிட்டு." அது திரும்பி வரவில்லை. "கிட்டு"வுக்குப் பரம சந்தோஷம். கடைசியில் மூளையுள்ள ஆசிரியர் ஒருவராவது இருக்கிறாரே என்ற சந்தோஷத்தில் அவருக்கு ஒரு கடிதம்கூட எழுதிவிட்டான்.

ஆனால் மறுநாளே அவனது கையெழுத்துப் பிரதி திரும்பி வந்ததைக் குறித்து அவனுக்கு உண்டான வருத்தம் இவ்வளவவ்வளவல்ல. "அடாடா! யாரையோ போயல்லவா 'மூளையுள்ளவன்' என்று எண்ணிவிட்டோம்" என்று தன்னைத்தானே நொந்துகொண்டான். ஆனாலும் "கிட்டு"வுக்கு என்றைக்குமுள்ள தைரியமும், ஊக்கமும் அவனை முன்னுக்குத் தள்ளின. அவன் மனம் தடுமாறவில்லை!

"வேணுகோபாலன்" என்ற பெயர்கொண்ட தனது கதாநாயகனைக் "கோபால கிருஷ்ணன்" என்று மாற்றி யமைத்தான். அவனுடைய தாயாருக்கு முன்பு "சுப்புலட்சுமியம்மாள்" என்று இருந்ததை இப்பொழுது "மீனாட்சியம்மாள்" என்றும் தந்தையின் பெயரை "சுந்தரேசுவர ஐயர்" என்றும், மாற்றி எழுதி, அதே பத்திரிகைக்கு அதே புனைப்பெயரில் எழுதினான்.

பத்திரிகாசிரியருக்கு இதைப் படிக்கும்போதே சிரிப்பு வந்தது. "இதென்ன—பெரிய கூத்தாக வல்லவா இருக்கிறது" என்று அதைத் திருப்பி யனுப்பிவிட்டார்! "இவ்வளவு சீக்கிரத்தில் நீங்கள் எழுதிய முதல் கட்டுரை மறந்து விடுமென்று நீங்கள் நம்புவதாக இருந்தால், அதற்கு மறுப்பாகவே இந்தக் கடிதம் எழுதப்பட்டது" என்ற பதிலும் அந்தக் கட்டுரையோடு சேர்ந்து கதாசிரியரை அடைந்தது.

ஆனால் மறுநாள் போக அடுத்த நாள் அதே கையெழுத்துப் பிரதி "கோபாலகிருஷ்ணன்" என்பதற்குப் பதிலாக "எதிராஜ்" என்னும் பெயரோடுகூட அவரிடம் வந்த உடனேயே, அந்த ஆசிரியருக்குத் தூக்கி வாரிப்போட்டது. பலம் கொண்டமட்டும் வீசிக் குப்பைக் கூடைக்குள் எறிந்தார். பிறகு தன் வேலையைப் பார்த்தார்.

மறுநாள் குமாஸ்தா வராததால், வந்திருந்த தபால்களைப் பிரித்துக்கொண்டிருந்த பத்திரிகாசிரியர் "கிட்டு" என்ற புனைபெயரைக் கண்டு திடுக்கிட்டுப்போனார். அனேகமாக அவருக்கு மூர்ச்சை போட்டுவிட்டது. சில வரிகள் அந்தக் கட்டுரையில் படித்ததும் 'ஓ' என்று அலறிக்கொண்டு, அதை மறுபடியும் விட்டெறிந்தார். இந்தத் தடவை அது குப்பைக் கூடையில் விழவில்லை. ஜன்னலுக்கு வெளியே போய் விழுந்தது!

இனிமேல் "கிட்டு" என்ற பெயர் கொண்ட எந்தக் கட்டுரையும், கதையும் பிரிக்கப்படாமலே வீசி எறியப்பட வேண்டும் என்று உத்தரவிட்டுவிட்டு, இனிமேல் ஆசிரியருக்கு வரும் தபால்களெல்லாம், சொந்த ஹோதாவில் எழுதப்படாத வரையில்,

உதவி ஆசிரியர் பிரித்துப் பார்த்து "அபாயகரமானது இல்லை" என்று நிச்சயமாகத் தெரிந்து கொண்டாலொழிய தன்னிடம் அனுப்பக்கூடாது என்று "ஆர்டர்" செய்தார்.

மறுநாள் தபால்கள் வரும் போது ஆசிரியருக்கு அடி வயிற்றில் புளியைக் கரைத்தது. 'சார்! "கிட்டு" வென்று புனைபெயர் போட்டு ஏதாவது வந்திருந்தால் நான் சொன்னது ஞாபக மிருக்கட்டும். பத்திரம்' என்றார். உதவியாசிரியர் அவரைப் பார்த்து பரிதாபப்பட்டார். "ஐயோ, இந்த உதவிகூட உங்களுக்குச் செய்யாமல் இருப்பேனா?" என்று பதில் சொன்னார் அவர்.

தபால்களைப் புரட்டிக் கொண்டே வந்தபோது, இரண்டொரு கையெழுத்துப் பிரதிகள் தென்பட்டன. "சார்! வேண்டுமானால் நான் வாசிக்கட்டுமா" என்றார் உதவி ஆசிரியர். "நீங்களும் கேட்டதாக இருக்கும், நீங்கள் ஒருதரம் படிக்க வேண்டாம்"

'அது "கிட்டு"வின் கட்டுரை இல்லையே!'

"இல்லவே இல்லை, சார்."

"பேஷ்! அப்படியானால் வாசி."

ஒன்றை எடுத்து வாசித்தார். பாதி வாசிப்பதற்குள் அசிரத்தை தட்டிவிட்டது ஆசிரியருக்கு. "சிச்சீ. நன்றாக இல்லை சார். அடுத்ததை எடுங்கள்" என்றார். அடுத்ததும் நன்றாக இல்லை. இப்படி மூன்று நான்கானதும் கடைசியில் ஒன்று மீதியிருந்தது. 'ஸார். அது "கிட்டு" இல்லையே?' என்று கேட்டுக்கொண்டு சந்தேகம் நிவர்த்தியானதும், "சரி! படியுங்கள்" என்றார்.

முதல் இரண்டு வரிகள் கூடப் படித்திருக்கமாட்டார். "சார். ஐயோ! சார்! சார்!!" என்ற கதறல் கேட்டதும், துள்ளி எழுந்தார் உதவி ஆசிரியர்.

ஆசிரியரோ, "ஐயோ! பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கே! சார்! அதை முதலில் விட்டெறியுங்கள்" என்றதும் 'இல்லையே. இது "கிட்டு" எழுதவில்லை! சார், யாரோ ராகவாச்சாரியல்லவா எழுதியது!' என்று உதவியாசிரியர் எதிர் கட்சியாடினார்.

"அது யாராக இருந்தாலும் தூர எறியுங்கள். அது "கிட்டு"வின் இன்னொரு புனைப் பெயரோ என்னமோ? யாருக்குத் தெரியும்?" என்றார் பத்திரிகாசிரியர்.

கடைசியில் அவரை உட்கார வைத்து உதவியாசிரியர் விஷயத்தை விசாரித்தார். அவர்கள் இருவரும் வெகுநேரம் விவாதித்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதன்படியே "கிட்டு"வினுடைய கட்டுரையைப் பிரசுரிப்பதற்கு முன் ஒரு நிபந்தனை போட்டு விடுவதென்றும், அதற்கு ஒப்புக்கொண்டால் அந்தக் கட்டுரையை பிரசுரிப்பதென்றும் அவர்கள் முடிவு செய்தார்கள்!

எனவே அந்த முடிவின்படி "கிட்டு"வுக்கு ஒரு அழைப்பு அனுப்பப்பட்டது. அவன் வந்த உடனே ஆசிரியர், உதவி யாசிரியர், மானேஜர் எல்லோருமாக அவனை அழைத்துக்கொண்டு போய், அந்த அறைக்கு அடுத்த மொட்டை மாடியில் நாற்காலி,

மேஜை, பெஞ்சிகளெல்லாம் போட்டு உட்கார வைத்து, அவனுக்கு ஒரு தேக் கச்சேரி நடத்தினார்கள்.

பிறகு எல்லோரும் வெகு நேரம் "கிட்டு" வைப் புகழ்ந்து பேசிய பிறகு, இனிமேல் அவர் அந்தப் பத்திரிகைக்கு எழுதுவதில்லை என்று சத்தியம் செய்தால், ஆசிரியர் அந்தக் கட்டுரையைப் பிரசுரிப்பதற்கு ஒரு ஆக்ஷேபணையுமில்லை என்று மெள்ள மெள்ளத் தெரிவித்து விட்டார்.

கிட்டுவும் அதே மாதிரி சத்தியம் செய்தான். அந்த வாரம் வியாழக்கிழமை வரவேண்டிய பேப்பரில் தலையங்கத்தையும் நிறுத்திவிட்டு "கிட்டு" வின் கட்டுரை பிரசுரிக்கப்பட்டது. தன் ஜென்மத்தில் முதல் தடவையாக ராகவாச்சாரி தன்னுடைய கட்டுரையை பத்திரிகைகளில் பார்த்து மகிழ்ந்து போனான்!



நட்சத்திர பலா பலன்கள்

(1) அசுவனி-மகம்-மூலம்.

3-9-39 இரவு 4-20 முதல்
4-9-39 இரவு5-55 வரை.

மன சந்தோஷம், நினைத்த காரியங்களைத் தொடரின் ஜெயந்தரும், நூதன நேசரை அல்லது தன் காரிய ஜயத்தைக் குறித்து ஒருவரைக் காணினும் நலமுண்டாகும், நேசரின் பேட்டி, அதனால் மன மகிழ்ச்சி, குடும்ப சுகம் சௌக்கியம், நற் கதை காவியங் கேட்டு ஆனந்தித்தல்.

4-9-39 இரவு 5-55 முதல்
6-9-39 காலை 6-50 வரை.

இந்நாளில் தொழிலில் ஜாக்கிரதையாய் இருக்கின் நலமாம், பிறருக் காக உதவி செய்யின் துன்பமுண்டாகும், வாகனம் ஏறி வேகமாய் நடை செய்யின் இடர்காய முண்டாகும். கஷ்டம் தாத்தக்க வழிகளில் ஈடுபட் டால், மிகத் துன்பமுண்டாகுமே தவிர கஷ்டத்தை நீக்கி இன்பமடைய முடியாது. சாதாரணமாய்ச் செய்யும் தொழிலிலுங்கூட சர்வ ஜாக்கிரதை யாய் இருக்கின் நலம், மன மயக்கமுண்டாகும்.

6-9-39 காலை 6-50 முதல்
7-9-39 காலை 7-3 வரை.

இந்நாளில் சுகமாய் தொழில் நடக்கும். காரிய அனுகூலத்திற்காக தக்கவர்களைக் காணின் நலமுண்டாகும். பலனை பெறத்தக்க நூதன காரியங் கள் எதைத் தொடரினும் பின் வெற்றி தரும். ஆதலின் இத்தினத்தில் முக்கியமான காரியங்களை முடித்துக்கொள்வதற்கு எத்தனிக்கின் நன்மை யுண்டாகும்.

7-9-39 காலை 7-3 முதல்
8-9-39 காலை 6-36 வரை.

இத்தினத்தில் நூதன பலன் தாத்தக்க காரியந் தொடரின் நலமுறாது. முறைப்படி தொழில் நடக்கும், பந்து மித்திரர்கள் பேட்டியும் அதனால் சிறு கவலையும் உண்டாகும்.

8-9-39 காலை 6-33 முதல்
8-9-39 இரவு 5-21வரை.

இத்தினத்தில் எக்காரிய மெடுக்கினும் ஜெயந்தரும், நல்லோர் இணக் கம், தேகாரோக்கியம், குடும்ப சந்துஷ்டி, தொழிலில் மனோல்லாசம், சத்துருவினிடமிருந்துங்கூட காரியங்களை அடைய வேண்டுமாயின், இந் நாளில் எத்தனிக்கின் ஜெயம்தரும், இது மிகவும் உத்தமமான நாள்.

8-9-39 இரவு 5-21 முதல்
9-9-39 இரவு 3-29 வரை.

இந்நாள் பெரும் நன்மை தாத்தக்கதல்ல, ஏதேனும் காரியத்தைக் குறித்து மன சஞ்சலம் அல்லது அலைச்சல், சத்துருத்வம், நற்காரியங்கள்

நூதனமாய்த் தொடரின் நலந்தராது, தொழிலிலும் பிசகுகள் உண்டாகும். ஆதலின் முன் ஜாக்கிரதையாய் இருக்கின் நலம்.

9-9-39 இரவு 3-29 முதல்
10-9-39 இரவு 1-5 வரை

இந்நாள் எவ்வித கஷ்டமுமில்லாமல் தொழில் நடக்கும், எவ்வித கவலைகள் இருக்கினும் வரினும், உடனுக்குடன் மகிழ்ச்சி உண்டாகும், பிறர் கையில்சிக்கிய பொருளை அடைவதற்கு எத்தனிக்கின் பலன் தரும், கணக்கு காரியங்கள் ஒழுங்கு செய்வதற்குத் தகுதியான நாள்.

(2) பரணி-பூரம்-பூராடம்

3-9-39 இரவு 4-20 முதல்.
4-9-39 இரவு 5-55 வரை

எத்தொழில்களும் தவக்கமாய் நடத்தல். நடக்கும் காரியங்களைக் குறித்துச் சிந்தனை, பொருள் முடக்கம், அவ்வகையில் மனத்தாபங்கள், சேதியால் கவலை, முன்னோர்களின் முகத்திருப்பம், முறைப்படி தொழில் நடக்கினும் சோம்பல் உண்டாகும், கலகமும் கலக்கமும் உற்றகலும்.

4-9-39 இரவு 5-55 முதல்
6-9-39 காலை 6-50 வரை.

மன சந்தோஷம், நினைத்த காரியங்களைத் தொடரின் ஜெயந்தரும், நூதன நேசரை அல்லது தன் காரியத்தைக் குறித்து ஒருவரைக் காணினும் நலமுண்டாகும், நேசரின் பேட்டி அதனால்மனமகிழ்ச்சி, குடும்ப சுகம் சௌக்கியம், நற்கதை காவியங் கேட்டானந்த மடைதல், பொதுவில் இத்தினம் சுகமாய் நடக்கும்.

6-9-39 காலை 6-50 முதல்
7-9-39 காலை 7-3 வரை.

இந்நாளில் தொழிலில் ஜாக்கிரதையாய் இருக்கின் நலமாம், பிறருக்காக உதவி செய்யின் துன்பமுண்டாகும், வாகனங்களேறி வேகமாய் நடைசெய்யின் இடர்காய முண்டாகும். கஷ்டந் தரத்தக்க வழிகளில் ஈடுபட்டால் மிக்க துன்பமுண்டாகுமே தவிர கஷ்டத்தை நீக்கி இன்பமடைய முடியாது. சாதாரணமாய்ச் செய்யும் தொழிலிலுங்கூட சர்வ ஜாக்கிரதையாய் நடத்தல் நலமாம், மன மயக்கமும் உண்டாகும்.

7-9-39 காலை 7-3 முதல்
8-9-39 காலை 6-33 வரை.

இந்நாளில் சுகமாய் தொழில் நடக்கும். காரிய அனுகூலத்திற்காக தக்கவர்களைக் காணின் நலமுண்டாகும், பலன் தரக்கூடிய நூதன காரியங்கள் எதைத் தொடரினும் பின் வெற்றி தரும், ஆதலின் இத்தினத்தில் முக்கியமான காரியங்களை முடித்துக் கொள்வதற்கு எத்தனிக்கின் நன்மையுண்டாகும்.

8-9-39 காலை 6-33 முதல்
8-9-39 இரவு 5-21 வரை.

இத்தினத்தில் நூதன பலன் தரத்தக்க காரியந் தொடரின் நலமுறாது, முறைப்படி தொழில் நடக்கும், பந்து மித்திரர்கள் பேட்டியும் அதனால் சிறு கவலையும் உண்டாகும்.

8-9-39 இரவு 5-21 முதல்
9-9-39 இரவு 3-29 வரை.

இத்தினத்தில் எக்காரிய மெடுக்கினும் ஜெயந்தரும், நல்லோ ரிணக்கம், தேகாரோக்கியம், குடும்ப சந்தஷ்டி, தொழிலில் மனோ உல்லாசம், சத்தருவினிடமிருந்தங்கூட காரியங்களை அடைய வேண்டுமாயின் இந்நாளில் எத்தனிக்கின் ஜெயந்தரும், இது மிக உத்தம மான நாள்.

9-9-39 இரவு 3-29 முதல்
10-9-39 இரவு 1-5 வரை.

இந்நாள் பெரும் நன்மை தாத்தக்கதல்ல, ஏதோ ஒரு காரியத்தைக் குறித்து மிக்க சஞ்சலம் அல்லது அலேச்சல், சத்துருத்வம், நற்காரியங்கள் நூதனமாய்த் தொடரின் நலந்தராது, தொழிலிலும் பிசகுகள் உண்டாகும்.

(3) கார்த்திகை-உத்திரம்-உத்திராடம்.

3-9-39 இரவு 4-20 முதல்
4-9-39 இரவு 5-55 வரை.

இந்நாள் மிக்க மகிழ்ச்சியோடு நலன் தரும். இஷ்ட காரிய சித்தி. மேலவரால் மன மகிழ்ச்சி, முறைப்படி தொழில் கவலையில்லாமல் நடக்கும். நேசரின் பேட்டி அவர்களால் மகிழ்ச்சியுண்டாகும், இத்தினத்திலும் முக் கியமான நற்காரியங்கள் செய்யில் பலன் தரும்.

4-9-39 இரவு 5-55 முதல்
6-9-39 காலே 6-50 வரை.

எத் தொழில்களும் தவக்கமாய் நடத்தல். நடக்கும் காரியங்களேக் குறித்துச் சிந்தனே. பொருள் முடக்கம், அவ்வகையால் மனத்தாபங்கள். சேதியால் கவலே. முன்னோர்களின் முகத்திருப்பம். முறைப்படி தொழில் நடக்கினும் சோம்பல் உண்டாகும். கலக்கமும் கலக்கமுமுற்றகலும்.

6-9-39 காலே 6-50 முதல்
7-9-39 காலே 7-3 வரை.

மனச் சந்தோஷம், நினேத்த காரியங்களேத் தொடரின் ஜெயந் தரும். நூதன நேசரை அல்லது தன் காரிய ஜெயத்தைக் குறித்து ஒருவரைக் காணினும் நலமுண்டாகும். நேசரின் பேட்டி, அதனல் மன மகிழ்ச்சி. குடும்ப சுகம், சௌக்கியம், நற்கதை காவியங் கேட்டானந்தமடைதல். பொதுவில் இத்தினம் சுகமாய் நடக்கும் என்பதாம்.

7-9-39 காலே 7-3 முதல்
8-9-39 காலே 7-33 வரை.

இந்நாளில் தொழில் ஜாக்கிரதையாய் நடத்தல் நலம், பிறருக்காக உதவி செய்யின் துன்பமுண்டாகும். வாகனங்களேறி வேகமாய் நடை செய்யின் இடர்காயமுண்டாகும். கஷ்டந் தாத்தக்க வழிகளில் ஈடுபட் டால் மிக்கத் துன்பமுண்டாகுமே தவிர கஷ்டத்தை நீக்கி இன்பமடைய முடியாது. சாதாரணமாய் செய்யுந் தொழிலினுங் கூட சர்வ ஜாக்கிரதை யாய் நடத்தல் நலமாம்.

8-9-39 காலை 6-33 முதல்
8-9-39 இரவு 5-21 வரை.

இந்நாளில் சுகமாய் தொழில் நடக்கும். காரிய அனுகூலத்திற்காக தக்கவர்களைக் காணின் நலமுண்டாகும். பலன் பெறத் தக்க நூதன காரியங்கள் எதைத் தொடரினும் பின் வெற்றி தரும், ஆதலின் இத் தினத்தில் முக்கியமான காரியங்களை முடித்துக் கொள்வதற்கு எத்தனிக்கின் நன்மையுண்டாகும்.

8-9-39 இரவு 5-21 முதல்
9-9-39 இரவு 3-29 வரை.

இத்தினத்தில் நூதன பலன் தரத்தக்க காரியந் தொடரின் நலமுரு து. முறைப்படி தொழில் நடக்கும், பந்து மித்திரர்கள் பேட்டியும் அதனல் சிறு கவலையும் உண்டாகும்.

9-9-39 இரவு 3-29 முதல்
10-9-39 இரவு 1-5 வரை.

எக் காரியத்திலும் வெற்றி, நல்லோர் இணக்கம், தேகாரோக்கியம்; குடும்ப சந்துஷ்டி, தொழில் மனேல்லாசம். சத்துருவினிடமிருந்துங்கூட காரியங்களை அடைய எத்தனிக்கின் ஜெயந்தரும், இது மிகவும் உத்தமமான நாள் ஆகையால் முக்கிய காரியங்கள் தொடர நன்ரும்.

(4) ரோகிணி-அஸ்தம்-திருவோணம்.

3-9-39 இரவு 4-20 முதல்
4-9-39 இரவு 5-55 வரை.

இந்நாளில் எவ்வித கஷ்டமுமில்லாமல் தொழில் நடக்கும், கவலைகளிருக்கினும் அல்லது வரினும் உடனுக்குடன் மகிழ்ச்சியுண்டாகும், பிறர் கையில் சிக்கிய பொருளை அடைவதற்கு எத்தனிக்கின் பலன் தரும், கணக்கு காரிய ஒழுங்கு செய்வதற்கும் இது தகுதியான நாள்.

4-9-39 இரவு 5-55 முதல்
6-9-39 காலை 6-50 வரை.

இந்நாள் மிக்க மகிழ்ச்சியோடு பலன் தரும், இஷ்ட காரிய சித்தி, மேலோரால் மனமகிழ்ச்சி, முறைப்படி தொழில் கவலையில்லாது நடக்கும், நேசரின் பேட்டி அவரால் மகிழ்ச்சியுமுண்டாகும், இத்தினத்திலும் முக்கியமான நற்காரியங்கள் செய்யின் பலன் தரும்.

6-9-39 காலை 6-50 முதல்
7-9-39 காலை 7-3 வரை.

எத்தொழில்களும் தவக்கமாய் நடத்தல், நடக்கும் காரியங்களைக் குறித்து சிந்தனை, பொருள் முடக்கம், அவ்வகையால் மனத்தாபங்கள், சேதியால் கவலை, முன்னேர்களின் முகத் திருப்பம், முறைப்படி தொழில் நடக்கினும் சோம்பல் உண்டாகும், கலகமும் கலக்கமு முற்றகலும்.

7-9-39 காலை 7-3 முதல்
8-9-39 காலை 6-33 வரை.

இத்தினத்தில் நூதன பலன் தரத்தக்க காரியந் தொடரின் நலமுரு து, முறைப்படி தொழில் நடக்கும், பந்து மித்திரர்கள் பேட்டியும் அதனல் சிறு கவலையும் உண்டாம்.

8-9-39 காலை 6-33 முதல்
8-9-39 இரவு 5-21 வரை.

மன சந்தோஷம், நினைத்த காரியங்களைத் தொடரின் ஜெயந் தரும், நூதன நேசரை அல்லது தன் காரிய ஜயத்தைக் குறித்து ஒருவரைக் காணினும் நலமுண்டாகும், நேசரின் பேட்டி அதனால் மனமகிழ்ச்சி, குடும்ப சுகம், சௌக்கியம், நற்கதை காவியங் கேட்டானந்தித்தல், பொதுவில் இத்தினம் சுகமாய் நடக்கும்.

8-9-39 இரவு 5-21 முதல்
9-9-39 இரவு 3-29 வரை.

இந்நாளில் தொழிலில் ஜாக்கிரதையாய் இருத்தல் நலம், பிறருக்கு உதவி செய்யினும் துன்பமுண்டாகும், வாகனங்களேறி வேகமாய் நடை செய்யின் இடர் காயமுண்டாகும். கஷ்டந் தாத்தக்க வழிகளில் ஈடுபட்டால் மிக்க துன்பமுண்டாகுமே தவிர கஷ்டத்தை நீக்கி இன்பமடைய முடியாது. சாதாரணமாய் செய்யுந் தொழிலிலுங்கூட சர்வ ஜாக்கிரதையாய் நடக்கின் நலமாம், மனமயக்கமுண்டாகும்.

9-9-39 இரவு 3-9 முதல்
10-9-39 இரவு 1-5 வரை.

இந்நாள் சுகமாய் தொழில் நடக்கும், காரிய அனுகூலத்திற்காக தக்கவர்களைக் காணின் நலமுண்டாகும், பலன் பெறத் தக்க நூதன காரியங்கள் எதைத் தொடரினும் பின் வெற்றி தரும், ஆதலின் இத்தினத்தில் முக்கியமான காரியங்களை முடித்துக் கொள்வதற்கு எத்தனிக்கின் நன்மையுண்டாகும்.

(5) மிருகசீரிடம்-சித்திரை-அவிட்டம்.

3-9-39 இரவு 4-20 முதல்
4-9-39 இரவு 5-55 வரை.

இந்நாள் பெரும் நன்மை தாத்தக்கதல்ல. ஏதோ ஒரு காரியத்தைக் குறித்து மிக்க சஞ்சலம் அல்லது அலைச்சல், சத்துருத்வம், நற்காரியங்கள் நூதனமாய்த் தொடரின் நலந்தாராது, தொழிலிலும் பிசகுகள் உண்டாகும்.

4-9-39 இரவு 5-55 முதல்
6-9-39 காலை 6-50 வரை.

இந்நாளில் எவ்வித கஷ்டமுமில்லாமல் தொழில் நடக்கும், கவலை இருக்கினும் அல்லது வரினும் உடனுக்குடன் மகிழ்ச்சி உண்டாகும், பிறர் கையிற் சிக்கிய தனத்தை அடைதற்கு எத்தனிக்கின் பலன் தரும், கணக்கு காரிய ஒழுங்கு செய்வதற்கு இது தகுதியான நாள்.

6-9-39 காலை 6-50 முதல்
7-9-39 காலை 7-3 வரை.

இந்நாள் மிக்க மகிழ்ச்சியோடு நலன் தரும், இஷ்ட காரிய சித்தி, மேலவர்களால் மன மகிழ்ச்சி, முறைப்படி தொழில் கவலையில்லாது நடக்கும், நேசரின் பேட்டி, அவரால் மகிழ்ச்சியுமுண்டாகும், இத்தினத்திலும் முக்கியமான நற்காரியங்கள் செய்யின் பலன் தரும்.

7-9-39 காலை 7-3 முதல்
8-9-39 காலை 6-33 வரை.

எத்தொழிலும் தவக்கமாய் நடத்தல், நடக்கும் காரியங்களைக் குறித்துச் சிந்தனை, பொருள் முடக்கம், அவ்வகையால் மனத்தாபம், சேதியால் கவலை, முன்னோர்களின் மனத்திருப்பம், முறைப்படி தொழில் நடக்கினும் சோம்பல் உண்டாகும், கலகமும் கலக்கமு முற்றகலும்.

8-9-39 காலை 6-33 முதல்
8-9-39 இரவு 5-21 வரை.

மன சந்தோஷம், நினைத்த காரியங்கள் தொடரின் ஜெயந்தரும், நூதன நேசரை அல்லது தன் காரிய ஜயத்தைக் குறித்து ஒருவரைக் காணினும் நலமுண்டாகும். நேசரின் பேட்டி, அதனல் மன மகிழ்ச்சி, குடும்ப சுகம், சௌக்கியம், நற்கதை காவியங் கேட்டானந்த மடைதல்.

8-9-39 இரவு 5-21 முதல்
9-9-39 இரவு 3-29 வரை.

இந்நாளில் தொழிலில் ஜாக்கிரதையாய் இருத்தல் நலமாம், பிறருக்காக உதவி செய்யின் துன்பமுண்டாகும், வாகனங்களில் வறி வேகமாய் நடை செய்யின் இடர் உண்டாகும். கஷ்டந்தரத் தக்க வழிகளில் ஈடுபட்டால் மிக்க துன்பமுண்டாகுமே தவிர கஷ்டத்தை நீக்கி இன்ப மடைய முடியாது, சாதாரணமாய்ச் செய்யும் தொழிலுங் கூட சர்வ ஜாக்கிரதையாய் நடக்கின் நலமாம், மனமயக்க முண்டாகும்.

9-9-39 இரவு 3-29 முதல்
10-9-39 இரவு 1-5 வரை.

இந்நாளில் சுகமாய்த் தொழில் நடக்கும், காரிய அனுகூலத்தைக் கொண்டு தக்கவர்களைக் காணின் நலமுண்டாகும், பலன் பெறத்தக்க நூதன காரியங்கள் எதைத் தொடரினும் பின் வெற்றி தரும். ஆதலின் இத்தினத்தில் முக்கியமான காரியங்களை முடித்துக் கொள்ள எத்தனிக்கின் நன்மையுண்டாகும்.

(6) திருவாதிரை-சுவாதி-சதயம்.

3-9-39 இரவு 4-20 முதல்
4-9-39 இரவு 5-55 வரை.

இத்தினத்தில் எக்காரிய மெடுக்கினும் ஜெயந்தரும், நல்லோர் இணக்கம், தேகாரோக்கியம், குடும்ப சந்தஷ்டி, தொழிலில் மனோஉல்லாசம், சத்துருவிடமிருந்துங்கூட காரியங்களை அடையவேண்டுமாயின் இந்நாளில் யெத்தனிக்கின் ஜெயந்தரும். இது மிகவும் உத்தமமான நாள்.

4-9-39 இரவு 5-55 முதல்
6-9-39 காலை 6-50 வரை.

இந்நாள் பெரும் நன்மை தரத்தக்கதல்ல, ஏதோ ஒரு காரியத்தைக் குறித்து மிக்க சஞ்சலம் அல்லது அலைச்சல், சத்துருத்வம், நற்காரியங்கள் நூதனமாய்த் தொடரின் நலந்தராது, தொழிலிலும் பிசகுகளுண்டாகும்.

6-9-39 காலை 6-50 முதல்
7-9-39 காலை 7-3 வரை.

இந்நாளில் எவ்வித கஷ்டமுமில்லாமல் தொழில் நடக்கும், எவ்வித கவலைகள் இருக்கினும் அல்லது வரினும் உடனுக்குடன்மகிழ்ச்சியுண்டாகும், பிறர் கையிற் சிக்கிய தனத்தை அடைதற்கு எத்தனிக்கின் பலன் தரும், காரிய சீர்திருத்தம் செய்யின் மிகவும் நன்று.

7-9-39 காலை 7-3 முதல்
8-9-39 காலை 6-33 வரை.

இந்நாள் மிக்க மகிழ்ச்சியோடு நலன் தரும், இஷ்ட காரிய சித்தி, மேல வரால் மனமகிழ்ச்சி, முறைப்படி தொழிலில் கவலையில்லாது நடக்கும், நேசரின் பேட்டி, அவரால் மகிழ்ச்சியுமுண்டாகும், இத்தினத்திலும் முக்கியமான நற்காரியங்கள் செய்யின் பலன் தரும்.

8-9-39 காலை 6-33 முதல்
8-9-39 இரவு 5-21 வரை.

எத்தொழில்களும் தவக்கமாய் நடத்தல், நடக்குங் காரியங்களைக் குறித்துச் சிந்தனை, பொருள் முடக்கம், அவ்வகையால் மனத்தாபம், சேதியால் கவலை, முன்னோர்களின் முகத் திருப்பம், முறைப்படி தொழில் நடக்கினும் சோம்பல் உண்டாகும், கலகமும் கலக்கமு முற்றகலும்.

8-9-39 இரவு 5-21 முதல்
9-9-39 இரவு 5-29 வரை.

மனச் சந்தோஷம், நினைத்த காரியங்களைத் தொடரின் ஜயந்தரும், நூதன நேசரை அல்லது தன் காரிய ஜயத்தைக் குறித்து ஒருவரைக் காணினும் நலமுண்டாகும், நேசரின் பேட்டி அதனால் மனமகிழ்ச்சி, குடும்ப சுகம், சௌக்கியம், நற்கதை காவியங் கேட்டானந்தித்தல்.

9-9-39 இரவு 3-29 முதல்
10-9-39 இரவு 1-5 வரை.

இந்நாளில் தொழிலில் ஜாக்கிரதையாய் இருக்கின் நலமாம், பிறருக்கு உதவி செய்யின் துன்பமுண்டாகும், வாகனங்களிலேறி வேகமாய் நடை செய்யின் இடர்காயமுண்டாகும், கஷ்டந் தரத்தக்க வழிகளில் ஈடுபட்டால் மிக்க துன்பமுண்டாகுமே தவிர கஷ்டத்தை நீக்கி இன்பமடைய முடியாது. சாதாரணமாய்ச் செய்யும் தொழிலிலுங்கூட சர்வ ஜாக்கிரதையுடன் நடத்தல் நலமாம், மனமயக்கமு முண்டாகும்.

(7) புனர்ப்பூசம்-விசாகம்-பூரட்டாதி.

3-9-39 இரவு 4-20 முதல்
4-9-39 இரவு 5-55 வரை.

இத்தினத்தில் நூதன பலன் தரத்தக்க காரியங்கள் தொடரின் நலமுறுது, முறைப்படி தொழில் நடக்கும், பந்து மித்திரர்கள் பேட்டியும் அதனால் சிறு கவலையும் உண்டாகும்.

4-9-39 இரவு 5-55 முதல்
6-9-39 காலை 6-50 வரை.

இத்தினத்தில் எக்காரிய மெடுக்கினும் ஜெயந்தரும், நல்லோரிணக்கம், தேகாரோக்கியம், குடும்ப சந்துஷ்டி, தொழிலில் மனோல்லாசம்,

சத்துருவிட மிருந்துங்கூட காரியங்களை அடைய வேண்டுமாயின் இந்நாளில் எத்தனிக்கின் ஜெயந்தரும், இது மிகவும் உத்தமமான நாள். ஆகையால், முக்கிய காரியங்களைத் தொடர நன்றும்.

6-9-39 காலை 6-50 முதல்
7-9-39 காலை 7-3 வரை.

இந்நாள் பெரும் நன்மை தரத் தக்கதல்ல, ஏதோ ஒரு காரியத்தைக் குறித்து மிக்க சஞ்சலம் அல்லது அலைச்சல், சத்துருவம், நற்காரியங்கள் நூதனமாய்த் தொடரின் நலந்தராது. தொழிலிலும் பிசகுகள் உண்டாகும். ஆதலின் முன் ஜாக்கிரதையாய் இருக்கின் நலம்.

7-9-39 காலை 7-3 முதல்
8-9-39 காலை 7-33 வரை.

இந்நாள் எவ்வித கஷ்டமுமில்லாமல் தொழில் நடக்கும், எவ்வித கவலைகள் இருக்கினும் அல்லது வரினும் உடனுக்குடன் மகிழ்ச்சி யுண்டாகும், பிறர் கையிற் சிக்கிய பொருளை அடைவதற்கு எத்தனிக்கின் பலன் தரும், கணக்கு காரிய ஒழுங்கு செய்வதற்கும் இது தகுதியான நாள்.

8-9-39 காலை 6-33 முதல்
8-9-39 இரவு 5-21 வரை.

இந்நாள் மிக்க மகிழ்ச்சியோடு நலன் தரும், இஷ்டகாரிய சித்தி, மேலவரால் மனமகிழ்ச்சி, முறைப்படி தொழில் கவலையில்லாது நடக்கும், நேசரின் பேட்டி, அவரால் மகிழ்ச்சியுமுண்டாம், இத்தினத்திலும் முக்கியமான நற்காரியங்கள் செய்யின் பலன் தரும்.

8-9-39 இரவு 5-21 முதல்
9-9-39 இரவு 3-29 வரை.

எத்தொழில்களும் தவக்கமாய் நடத்தல், நடக்குங் காரியங்களைக் குறித்துச் சிந்தனை, பொருள் முடக்கம், அவ்வகையால் மனத்தாபங்கள், சேதியால் கவலை, முன்னோர்களின் முகத்திருப்பம், முறைப்படி தொழில் நடக்கினும் சோம்பல் உண்டாகும், கலகமும் கலக்கமு முற்றகலும்.

9-9-39 இரவு 3-29 முதல்
10-9-39 இரவு 1-5 வரை.

மன சந்தோஷம், நினைத்த காரியங்களைத் தொடரின் ஜயந்தரும், நூதன நேசரை அல்லது தன் காரிய ஜயத்தைக் குறித்து ஒருவரைக் காணினும் நலமுண்டாகும், நேசரின் பேட்டி அதனால் மன மகிழ்ச்சி, குடும்ப சுகம், சௌக்கியம், நற்கதை காவியங் கேட்டானந்த மடைதல்.

(8) பூசம்-அனுஷம்-உத்திரட்டாதி.

3-9-39 இரவு 4-20 முதல்
4-9-39 இரவு 5-55 வரை.

இந்நாளில் சுகமாய்த் தொழில் நடக்கும், காரிய அனுகூலத்திற்காக தக்கவர்களைக் காணின் நலமுண்டாகும், பலன் பெறத்தக்க நூதன காரியங்கள் எதைத் தொடரினும் பின் வெற்றி தரும், ஆதலின் இத்தினத்தில்

முக்கியமான காரியங்களை முடித்துக் கொள்வதற்கு எத்தனிக்கின், நன்மை யுண்டாகும்.

4-9-39 இரவு 5-55 முதல்
6-9-39 காலை 6-50 வரை.

இத்தினத்தில் நூதன பலன் தரத்தக்க காரியம் தொடரின் நல முறுது, முறைப்படி தொழில் நடக்கும், பந்து மித்திரர்கள் பேட்டியும் அதனுல் சிறு கவலையும் உண்டாம்.

6-9-39 காலை 6-50 முதல்
7-9-39 காலை 7-3 வரை.

இத்தினத்தில் எக்காரியமெடுக்கினும் ஜெயந்தரும், நல்லோர் இணக்கம், தேகாரோக்கியம், குடும்ப சந்துஷ்டி, தொழிலில் மனுேல்லாசம், சத்துருவிட மிருந்துங்கூட காரியங்களை அடைய வேண்டுமாயின் இந்நாளில் எத்தனிக்கின் ஜயந்தரும், இது மிக உத்தமமான நாள்.

7-9-39 காலை 7-3 முதல்
8-9-39 காலை 6-33 வரை.

இந்நாள் பெரும் நன்மை தரத்தக்கதல்ல. ஏதோ ஒரு காரியத்தைக் குறித்து மிக்க சஞ்சலம், அல்லது அலைச்சல், சத்துருத்வம், நற்காரியங்கள் நூதனமாய்த் தொடரின் நலந்தராது, தொழிலிலும் பிசகுகள் உண்டாகும், ஆதலின் முன் ஜாக்கிரதையாய் இருக்கின் நலம்.

8-9-39 காலை 6-33 முதல்
8-9-39 இரவு 5-21 வரை.

இந்நாளில் எவ்வித கஷ்டமுமில்லாமல் தொழில் நடக்கும், எவ்வித கவலைகள் இருக்கினும் அல்லது வரினும் உடனுக்குடன் மகிழ்ச்சியுண்டாகும். பிறர் கையில் சிக்கிய பொருளை அடைதற்கு எத்தனிக்கின் பலன் தரும், கணக்கு காரிய ஒழுங்கு செய்வதற்கும் இது தகுதியான நாள்.

8-9-39 இரவு 5-21 முதல்
9-9-39 இரவு 3-29 வரை.

இந்நாள் மிக்க மகிழ்ச்சி தரத்தக்க பலன் தரும், இஷ்ட காரிய சித்தி மேலவரால் மனமகிழ்ச்சி, முறைப்படி தொழில் கவலையில்லாது நடக்கும், நேசரின் பேட்டி, அவரால் மகிழ்ச்சியுமுண்டாம், இத்தினத்திலும் முக்கியமான நற்காரியங்கள் செய்யின் பலன் தரும்.

9-9-39 இரவு 3-29 முதல்
10-9-39 இரவு 1-5 வரை.

எத்தொழில்களும் தவக்கமாய் நடத்தல், நடக்குங் காரியங்களைக் குறித்துச் சிந்தனை, பொருள் முடக்கம், அவ்வகையால் மனத்தாபம், சேதியால் கவலை, முன்னேர்களின் முகத்திருப்பம், முறைப்படி தொழில் நடக்கினும் சோம்பல் உண்டாகும், கலகமும் கலக்கமு முற்றகலும்.

(9) ஆயில்யம்-கேட்டை-ரேவதி.

3-9-39 இரவு 4-20 முதல்
4-9-39 இரவு 5-55 வரை.

இந்நாளில் தொழிலில் ஜாக்கிரதையாய் இருக்கின் நலம், பிறருக்காக உதவி செய்யினும் துன்பமுண்டாகும், வாகனங்களிலேறி நடை செய்யின்

இடர் காயமுண்டாகும், கஷ்டந்தரத்தக்க வழிகளில் ஈடுபட்டால் மிக்க துன்பமுண்டாகும், தவிர கஷ்டத்தை நீக்கி இன்பமடைய முடியாது. சாதாரணமாய்ச் செய்யும் தொழிலிலுங்கூட சர்வ ஜாக்கிரதையாய் நடக்கின் நலமாம், மனமயக்கமும் உண்டாகும்.

4-9-39 இரவு 5-55 முதல்
6-9-39 காலை 6-50 வரை.

இந்நாளில் சுகமாய்த் தொழில் நடக்கும், காரிய அனுகூலத்திற்காக தக்கவர்களைக் காணின் நலமுண்டாகும், பலன் பெறத்தக்க நூதன காரியங்கள் எதைத் தொடரினும் பின் வெற்றி தரும், ஆதலின் இத்தினத்தில் முக்கியமான காரியங்களை முடித்துக் கொள்வதற்கு எத்தனிக்கின் நன்மையுண்டாகும்.

6-9-39 காலை 6-50 முதல்
7-9-39 காலை 7-3 வரை.

இத்தினத்தில் நூதன பலன் பெறத்தக்க காரியம் தொடரின் நலமுறுது. முறைப்படி தொழில் நடக்கும், பந்து மித்திரர்கள் பேட்டியும் அதனால் சிறு கவலையும் உண்டாகும்.

7-9-39 காலை 7-3 முதல்
8-9-39 காலை 6-33 வரை.

இத்தினத்தில் எக்காரிய மெடுக்கினும் ஜெயந்தரும், நல்லோரிணக்கம், தேகாரோக்கியம், குடும்ப சந்துஷ்டி, தொழிலில் மனோ உல்லாசம், சத்துருவிடமிருந்துங்கூட காரியங்களை அடைய வேண்டுமாயின், இந்நாளில் எத்தனிக்கின் ஜெயந்தரும், இது மிகவும் உத்தமமான நாள்.

8-9-39 காலை 6-33 முதல்
8-9-39 இரவு 5-21 வரை.

இந்நாள் பெரும் நன்மை தரத்தக்கதல்ல, ஏதோ ஒரு காரியத்தைக் குறித்து மிக்க சஞ்சலம், அல்லது அலைச்சல், சத்துருத்வம். நற் காரியங்கள் நூதனமாய்த் தொடரின் நலந்தராது, தொழிலிலும் பிசகுகள் உண்டாகும். ஆதலின் முன் ஜாக்கிரதையாய் இருக்கின் நலம்.

8-9-39 இரவு 5-21 முதல்
9-9-39 இரவு 3-29 வரை.

இந்நாளில் எவ்வித கஷ்டமுமில்லாமல் தொழில் நடக்கும். எவ்விதக் கவலைகள் இருக்கினும் அல்லது வரினும் உட்டுக்குடன் மகிழ்ச்சி உண்டாகும். பிறர் கையில் சிக்கிய தனத்தை அடைவதற்கு எத்தனிக்கின் பலன் தரும், கணக்கு காரிய ஒழுங்கு செய்வதற்கு இது தகுதியான நாள்.

9-9-39 இரவு 3-29 முதல்
10-9-39 இரவு 1-5 வரை.

இந்நாள் மிக்க நற்பலன் தரும் தினம். இஷ்ட காரிய சித்தி, மேலவரால் மனமகிழ்ச்சி, முறைப்படி தொழில் கவலையில்லாமல் நடக்கும், நேசரின் பேட்டி, அவரால் மகிழ்ச்சியுமுண்டாகும், இத்தினத்திலும் முக்கியமான நற் காரியங்கள் செய்யின் பலன் தரும்.

திரை உலகம்

தமிழ்

பாகவதத்திலிருந்து ஒரு உப கதையான அஜாமிளன் அல்லது நாமபிரபாவம் என்ற படத்தை ஸ்ரீ பிரஹதீஸ்வரர் பிலிம் கம்பெனியார் படமெடுக்கப் போகிறார்கள்.

* * *

காரைக்குடி சீதாராம் தியேட்டர்ஸார் மதாலஸா என்ற படத்தை எடுக்கப் போகிறார்கள். சில நக்ஷத்திர நடிகர்கள் இதில் தோன்றுவார்கள்.

* * *

திருச்சி சுதேசி இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன் கம்பெனியார், சுதேசி ராணி, சமூகப் பாடகர்கள் என்ற இரண்டு படங்களை எடுக்கப்போகிறார்கள்.

* * *

மதராஸ் ஸௌண்டு ஸ்டுடியோஸ் விபரநாராயணாவை, நக்ஷத்திர நடிகர்களைக் கொண்டு படம் எடுக்கப் போகிறார்கள்.

* * *

மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பொரேஷன், அஹிம்சாசக்தி, சூர்யகுமாரி என்ற இரு படங்களை எடுக்கப் போகின்றனர். அஹிம்சா சக்தியில் எஸ். டி. எஸ். முக்கிய நடிகர். பேபி சரோஜாவும் நடிப்பாள்.

மயூரா பிலிம்சார், ரகளை என்ற சமூகப் படத்தை எடுக்கப் போகிறார்கள். டைரக்டர் ஸ்ரீ. யோகி.

* * *

சேலம் சங்கர் பிலிம்சார். எம். எஸ். விஜயாள், மாஸ்டர் மகாலிங்கம் இருவரைக் கொண்டு டங்கன் டைரக்ஷனில் ஒரு சமூகப் படத்தை எடுப்பார்கள். கதை ஆங்கில ஆசிரியர் ஷேக்ஸ்பியரின் நாடகம் ஒன்றைத் தழுவியதாம். அதை எழுதுபவர் ஸ்ரீ. எஸ். டி. எஸ். யோகி.

* * *

கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில் ஸதி முரளி எடுக்கப்படும். எம். ஆர். சந்தானலக்ஷ்மியும் எம். கே. ராதாவும் நடிக்கின்றனர்.

* * *

மதராஸ் ஸ்டார் கம்பைன்ஸார் மனுநீதிச் சோழன் என்ற படத்தை எடுக்கிறார்கள்.

* * *

சென்னை மோகினி பிக்சர்ஸார் ஹனுமான் விஜயம் என்ற படத்தை எடுக்கப்போகிறார்கள்.

* * *

புரசை சக்தி மூவிடோன், மாய உலகம் என்ற படத்தை எடுக்க கதை வசனம் எல்லாம் எழுதி முடித்தாய் விட்டது.

* * *

வேல் பிக்சர்ஸார், பாண்டுரங்கனுக்குப் பிறகு, பக்தி என்ற

படத்தை எடுப்பார்கள். அநேகமாக ஸ்ரீ குணேதான் டைரக்ட் செய்வார்.

சாமரியா டாக்கி டிஸ்ட்ரிப்யூடர்ஸ் மீனாக்ஷி கல்யாணம் என்ற படத்தை தமிழில் எடுப்பார்கள். டைரக்டர் ராஜா சந்திரசேகர்.

* * *

சந்திர பிரபா ஸினிடோன் சகுந்தலைக்கு கடைசியாக துஷ்யந்தன் வேடத்திற்கு ஸ்ரீ. ஜி. என் பாலஸுப்ரமண்யமே தேர்ந்தெடுக்கப்பட்டதாக தெரிகிறது.

* * *

தெலுங்கு

ராஜகோபால் பிச்சர்ஸார், ஆந்திரா ஸினிடோன் ஸ்டுடியோவில் பாசுபதாஸ்திரம் என்ற படத்தை எடுப்பார்கள்.

* * *

பெஜவாடா பவானி ப்ரொடக்ஷன் கம்பெனியார் சண்டிகா என்ற படத்தை எடுத்து வருகின்றனர்.

* * *

ஹிந்தி

பம்பாய் ஸாகர் பிலிம் கம்பெனியார் 'அலிபாபா' அல்லது 'நாற்பது திருடர்கள்' என்ற கதையை ஹிந்தி, பஞ்சாபி ஆகிய இரண்டு பாஷைகளில் எடுப்பார்கள். இரண்டையும் மகபூப் டைரக்ட் செய்வார். முக்கிய நடிகர்கள் சர்தார் அக்தார்—குலாம் மஹம்மத்.

* * *

டைரக்டர் வீரேந்திர தேசாயும், மஹேந்திரநாத் டாகூரும் தங்களுடைய அடுத்த படமான, 'தஸ்வீர்' (படம்) என்ற படத்தை எடுக்கப்போகிறார்கள். இதில் பிரேம் அதீப், லோபஞசம்ரத் இருவரும் நடிப்பார்கள்.

* * *

ராம் டாக்கர் "சிவில் மாரேஜ்" (ரிஜிஸ்டர் கல்யாணம்) என்ற படத்தை சீக்கிரம் பூர்த்திசெய்து விடுவார். ஸ்ரீமதி சோபனசம்ரத்தும், ஹரீஷும் நடிக்கின்றனர்.

* * *

சூபர் பிக்சர்ஸார் "பாரத குமாரி" என்ற படத்தை எடுத்து வருகிறார்கள். படம் இம்மாத முடிவுக்குள் முடிந்துவிடும்.

* * *

ரஞ்ஜித் ஸ்டுடியோவில், அச்சுத் (ஹரிஜன்) என்ற படம் முடியும் தருவாயிலிருக்கிறது. இதில் கோஹர், ராஜகுமாரி வஸந்தி, சித்தாரா, மோதிலால், முதலியவர்கள் நடிக்கின்றனர். இவர்களுடைய அடுத்த படியான, பாய், என்ற படத்தில், பிரிதிவிராஜ் சார்லி, ஈஸ்வர்லால், ரோஸ், சிதாரா முதலியவர்கள் நடிப்பார்கள்; டைரக்டர் ஜயந்த் தேசாய்.

* * *

"ஹோலி" என்ற படத்தை ஸ்ரீ கர்டார் டைரக்ட் செய்கிறார். இதில், மோதி, குர்ஷித், சித்தாரா, தீக்ஷித், கோரி முதலியவர்கள் நடிக்கிறார்கள்.

* * *

வெகு நாட்களுக்குப் பிறகு விட்டல் திரைக்கு வருகிறார். 'ஹரிகேன் ஸ்பெஷல்' என்ற படத்தில் தோன்றுகிறார்.

பம்பாய் டாக்கீஸாரின் அடுத்த படத்தில் லீலா சிட்னி, மூபராக், இருவரும் தோன்றுவார்கள். கதை, அனேகமாக சாதிந்து பானர்ஜிதான் எழுதுவார்.

* * *

பவானி ப்ரொடக்ஷனின் ஜம்புவின் மகன், என்ற படம் திரைக்கு தயாராக இருக்கிறது. இதில், விமலகுமாரி, ஸுனிதா தேவி, நவீன் யக்னிக் ஆகியவர்கள் நடிக்கிறார்கள்.

* * *

பாக்யோதய பிக்சர்ஸாரின் ஒரு சரித்திர சம்பந்தமான படத்தில் ஸ்ரீமதி துர்க்கா கோட்டே நடிக்கிறார்.

* * *

பம்பாய் சுகாதார மந்திரி டாக்டர் கில்டர் அந்த மாகாணத்திலுள்ள தியேட்டர்களை தினம் தினம் சுத்தம் செய்து பரிசுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு உத்திரவைப் போட்டிருக்கிறார்.

* * *

கோலாப்பூரில் உள்ள ஆனந்த கார்ட்டுன் என்ற கம்பெனியார் பிரசாரத்திற்காக ஒரு கார்ட்டூனைத் தயாரித்திருக்கிறார்கள்.

ஆதர்சசித்ர கம்பெனியாரின், "வனத்தின் கானம்" என்ற படத்தில், நந்த்ரேகரும் ஊர்மிலா குப்தாவும் முக்கிய நடிகர்கள். டைரக்டர் ஹிரன் போஸ்.

* * *

தேவகி போஸின் அடுத்த படமான "நர்த்தகி" என்ற படத்தில் லீலாதேசாய் முக்கிய நடியாக இருப்பார்.

டைரக்டர் பருவா "ஆந்தி" (புயல்) என்ற படத்தை டைரக்ட் செய்கிறார். இதில் பஹாரிஸன் யால், ஜமுனா, மேனகா முதலியவர்கள் நடிக்கின்றார்கள்.

* * *

ஆங்கிலம்

யுனிவர்சல் கம்பெனியாரின் பிரமாத வெற்றி (Bright-Victory) என்ற படத்தில் ஜாக்கி கூப்பரும், பெட்டி பார்த்லோமியும் நடிக்கின்றனர்.

* * *

வார்னர் பிரதர்ஸின் தலைவிதி (Dust be my destiny) என்ற படதத்தில் ஜோன்கிராபோர்டும், பிரஸில்லா லேனும்நடிக்கின்றனர்.

சநாதனத்தையும் விடத் தயார்!

பொன்மலை வி. பாலாம்பாள் எழுதியது.

வழுக்கைத் தலை தீக்ஷதரும், குறும்பு சாஸ்திரிகளும், பால்ய முதற் கொண்டே ஆப்த நண்பர்கள். தொழில் வைதீகம். தீக்ஷதர் கீழச் சிந்தாமணியிலும், சாஸ்திரிகள் புது அக்கிராரத்திலும் குடியிருந்து வந்தார்கள்.

ஒருத்தரை ஒருத்தர் ஒருதரமாவது ஒரு நாளைக்குக் கண்டு பேசிக் கொள்ளாவிடில், வயிறு வெடித்து விடும். பொடிக்கும், புகையிலைக்கும், இவர்கள் அடிமைகள். சாஸ்திரிகளுக்கு அன்று இரவு முழுவதும் மண்டையிடி; மறுநாள் தீக்ஷதரைச் சந்தித்தார்.

சாஸ்திரி:—என்ன தீக்ஷதர்வாள்! உம்ம கிட்டத்தான் வர்லாம்னுட்டு கிளம்பினேன்; நீங்களே எதரக்கே வந்துட்டேள்!"

தீக்ஷதர்:—"ஹரிஹி; நானும் உம்மைப் பார்க்கணும் ன்னுட்டுத்தான் கிளம்பினேன். என்ன விசேஷம்?"

சாஸ்திரி:—இந்தப் புகையிலை வரிக்காக நாலு நாளா கடையை மூடினதும் போதும் எனக்கு ரொம்ப பிராணவஸ்தையாய் போயிடுத்து போம். ராத்திரி முழுக்க மூக்கை என்னமோ பண்றது! நிஜம்மா, சிமிட்டா பொடி கூட யில்லை போட்டுக்கிறத்துக்கு! அப்படியும் பாரும். நான் ரொம்ப முன்ஜாக்கிரதையாக நாலு பலம் பொடி வாங்கி வச்சுருந்தேனே, எரவல் கொடுத்தே எல்லாம் ஆயிடுத்து! அதான் உம்ம கிட்ட இருக்குமே ஒரு தரத்துக்கு வாங்கி போட்டுக்கிண்டு இந்த டப்பாவிலும் கொஞ்சம் அடச்சுண்டு வரலாம்னு கிளம்பினேன்."

தீக்ஷிதர்:—அட ஜகதீசா! நேத்திக்காலம்பரவே வச்சிருந்த புகையிலை எல்லாம் சரியாப் போச்சுன்னு பொடியை வாயிலே அடக்கிண்டு வந்தேன். அதுவும் ஆயிடுத்து. ராத்திரியே பிடிச்சு பல் வலியும், மண்டை இடியும் தாங்க முடியல்லே; எப்படா போது விடியும், ஒம்மைக் கேட்டுக் கொஞ்சம் புகையிலையும், பொடியும் வாங்கிண்டு போகலாம்னு வந்தால், நீரும் என்னைக் கட்டிண்டு அழறீரே! பொடியில்லாட்டா, புகையிலைதான் கொஞ்சங் கொடுமேங்கணும்."

சாஸ்திரி:—அது இருந்தா பொடிக்கு ஏன் ஒம்ம கிட்ட வரேன். கொஞ்சம் அடுப்புலே வரட்டி தூள் பண்ணி மூக்குலே இழுத்திருக்க மாட்டேனா? அதுவும் பூஜ்யங்காணும்!"

தீக்ஷிதர்:—ஏது சஹதர்மணியை விட்டாலும் விடலாம். இந்தப் புகையிலையை விட முடியாது போல யிருக்கே!"

சாஸ்திரி:—சஹதர்மிணியா! பூ! என்னுடைய சநாதனத்தை விடச் சொன்னாலும் தயார்! பொடியை மட்டும் விடவே முடியாது!

நிமிஷக் கதைகள்

பையன் கேள்வி!

பையன் :—பல் டாக்டரைப் பார்த்து என் பல் ஒன்றைப் பிடுங்கிக் கொண்டு வரும்படி எங்கப்பா சொன்னார். டாக்டர் எங்கே?

வேலையாள் :—அவர் வெளியே போயிருக்கிறார்.

பையன் :—திரும்பவும் அவர் எப்பொழுது வெளியே போயிருப்பார்?

* * *

புத்திசாலி!

“நீ ரொம்பவும் புத்திசாலியாயிருக்கிறாய். என்னைக் கலியாணம் செய்து கொள்கிறாயா?”

“மாட்டேன்; நீர் நினைக்கிறபடி நான் நிஜமாகவே புத்திசாலிதான்.”

* * *

பிடிவாதம் சரிதான்!

ராமு :—இந்த ஊரில் எத்தனை பேர் வழிகள் தங்கள் பெண்களுக்குக் கலியாணம் செய்யப் போவதில்லை என்று பிடிவாதம் பிடிக்கிறார்கள் தெரியுமா?

வேணு :—உனக்கு எப்படித் தெரியும் அவர்களை?

ராமு :—நான் அவர்களையெல்லாம் கலியாணம் செய்து கொள்வதற்குப் பெண் கேட்டுப் பார்த்தேன்.

காரணமாகத்தான்!

“நீ ஏன் தூங்கும்போது கூட மூக்குக் கண்ணாடி போட்டுக் கொண்டிருக்கிறாய்?”

“காரணமாகத்தான்; கனவில் வரும் மனிதர்களைப் பார்ப்பதற்காகத்தான்.”

* * *

கேட்டுப் பாருங்கள்

“இதோ இந்த மருந்தைச் சாப்பிட்ட ஒருவர் 300 வருஷ காலம் உயிரோடு இருக்கிறார். வேண்டுமானால் அவரிடம் வேலை செய்துவரும் இந்த வேலையாளைக் கேட்டுப் பாருங்கள்.”

“ஏனப்பா வாஸ்தவம்தானா?”

“அதென்னமோ எனக்குத் தெரியாதுங்க. நான் அவரிடம் நூறு வருஷ காலமாகத்தான் வேலை செய்து வருகிறேன்.”

* * *

தெரியுமே!

“சேஷய்யர் காயம்பட்டு ஆஸ்பத்திரியிலே கிடக்கிறாராமே. உமக்குத் தெரியுமோ?”

“தெரியும்; அவர் ஒரு மோட்டார் வாங்கப் போகிறதாக ரொம்ப நாளாகவே சொல்லிக்கொண்டிருந்தார்.

* * *

தேவலை

பட்டிக்காட்டான் ஒருவன் அடிக்கடி டாக்டரிடம் வந்து

கொண்டிருந்தான். டாக்டர் அவனை ஒரு தர்மாமீடர் வாங்கி வைத்துக் கொள்ளும்படி சொன்னார். அவனும் வாங்கினான். ஆனால் அதன் உபயோகம் அவனுக்குத் தெரியாது.

கொஞ்ச நாள் கழித்து மறுபடியும் அவன் டாக்டரிடம் வந்தான்.

டாக்டர்:—தர்மாமீடர் எப்படி இருக்கிறது?

பட்டிக்காட்டான்:— ரொம்ப தேவலைங்க; அது இருக்கிறது ரொம்ப சௌகரியங்க. அது வாங்கி ஒரு வாரமா எங்க விட்டிலே யாருக்குமே ஜுரம் வரலீங்க.

* * *

சரிதான் போங்கோ!

ஒரு பள்ளிக்கூடத்து பிரின்ஸிபாலுக்கு ஞாபக மறதி அதிகம். அவர் பள்ளிக்கூடம் விட்டு சாயங்கிரம் வீட்டுக்கு வந்தபோது அவர் மனைவி, "எங்கே உங்கள் காரைக் காணோம்?" என்று கேட்டாள்.

"நான் காரை எடுத்துக் கொண்டு போனேனா?" என்று கேட்டார்.

"ஆமாம்" என்றாள் மனைவி.

"அட! அது என்னுடைய நண்பருடைய கார் என்று நினைத்தல்லவா அவர் வீட்டிலேயே விட்டுவிட்டு வந்தேன்" என்றார்.

* * *

எங்கே போயின?

உபாத்தியாயர் போர்டில் கணக்குப் போட்டுக் காண்பித்தார். 10000 என்று எழுதி அதை ஆயிரத்தால் வகுத்துக் காண்பித்தார். கொஞ்ச நேரம் கழித்து அதில் மூன்று பூஜ்யங்களை அழித்துவிட்டு, "அடே மணி, இப்போது அந்த மூன்று பூஜ்யங்களும் என்னவாயிற்று?" என்று கேட்டார்?

மணி:—நீங்கள் அதைத் துடைத்த துணிக்குள் இருக்கின்றன.

* * *

அது எப்படி?

"சம்சாரத்திலே சண்டையில்லாதிருக்கவேண்டுமானால் சிறிய விஷயங்களிலெல்லாம் ஸ்திரீகள் சொல்படி விட்டு விடவேண்டும், பெரிய விஷயங்களில் நம் சொல்படி கேட்க வேண்டும்."

"உங்கள் வீட்டில் அப்படித்தானே!

"ஆமாம்; எங்கள் வீட்டில் பெரிய விஷயமே வருவதில்லை!"

தீர்ந்துவிட்டது.

நீதிபதி:— (குற்றவாளியைப் பார்த்து) உன்னுடைய நாய்க்கு லைஸன்ஸ் வாங்காதது வாஸ்தவம் தானா?

குற்றவாளி:— ஆமாங்க; வாஸ்தவந்தானுங்க. ஆனால்...

நீதிபதி:—ஆனால் ஒன்றும் வேண்டியதில்லை. உன்னுடைய நாய் லைசென்ஸ் தீர்ந்து போய் 20 நாட்களாய் விட்டதே!

குற்றவாளி:—ஆமாம் ஸார் என்னுடைய நாய் இறந்து ஒரு மாதமாகிவிட்டதே!

பிணத்தின் சாவு!

(சிட்டி)

அவன் வாழ்க்கையின் கடற்கரையில் உலாவிய நோயாளியல்ல. அம்மணலில் முத்துப் பொறுக்கிய லோபியுமல்ல. மனித சமூகத்தின் கூக்குரலால் ஏற்பட்ட தூசி அவனுடைய கண்களை மங்கச் செய்யவில்லை. கிழிந்துபோய்த் தொங்கிக் கொண்டிருந்த மேகத் துண்டுகளில் அவன் ஊசலாடிக்கொண்டிருந்தான்.

அவன் சஞ்சரித்த பிரபஞ்சத்தில் புலன்கள் ஒழுங்கு தவறிவிட்டன. கவலையின் கட்டுப்பாடு தன்னுடைய ஆதிக்க வலையை அவ்வளவு தூரம் வீசத் துணியவில்லை.

சாவின் எதிரொலி தன்னுடைய சகிக்க முடியாத வாசனையைக் கிளப்பிக்கொண்டு தலை தூக்கியது, அவன் பார்வையில் பட்டது.

அவனுடைய விலா வெலும்புகள் குலுங்கின. நக்ஷத்திரங்கள் நடுங்கின. சில நிலை தடுமாறி விழ்ந்தன.

ஆம்! அவன் பிரகிருதியின் எல்லைக்கு வர்ணம் தீட்டிக் கொண்டிருந்தான்.

அவனுடைய சித்திரத்திற்கு ஆத்மா இல்லை. ஆனல் அவன் வாழ்க்கையின் உணர்ச்சிக் குழம்பில் தோய்த்த பிரஷ்ஷினல் தீட்டிக்கொண்டிருந்தான்.

சாவின் மனதில் ஒரு சந்தேகம் உதித்தது. அவன் பிணம்தான். ஆனல் தன்னுடைய சித்திரத்திற்கே அவன் ஆத்மா அளித்து விட்டால்! ஐயோ! பிணமா சிருஷ்டி செய்வது? சாவு இருந்துதான் என்ன பலன்? ஏமாற்றத்தோடு அலறிக்கொண்டு எழுந்தது சாவு.

துக்கத்தில் தோய்த்த பிரஷ் அவன் கையில் வளைந்தது. பொறுமை நிறத்தில் இரண்டு கோடுகள் விழுந்தன. சாவின் பெரு மூச்சைக் கேட்டுத் திரும்பினன்.

அப்பொழுது ஏற்பட்ட நிசப்தத்தைக் கேட்டு அண்டம் நடுங்கிற்று. கிரகங்கள் தம் மார்க்கத்தை விட்டு மாறின. சனியன் வளையங்கள் செவ்வாயைச் சுற்றி ஓடின.

சாவு அலறிக்கொண்டு கேட்டது.

“நீ பிணம்! சிருஷ்டி உனக்கு ஏற்காது. நிறுத்து!”

அவன் :—நீ சாவு. உனக்கென்ன கவலை சிருஷ்டியைப் பற்றி?

சாவு :—வேறு யாருக்கு? என்னை ஒழிக்க முயலாதே. நீ இறந்து போவாய்.

அவன் :—உன்னை ஒழிக்கவா? உனக்கு உயிர் கொடுப்பேன்!

சாவு :—ஐயோ வேண்டாம்! என்னைக் காப்பாற்று.

அவன் :—உன்னைக் காப்பது என் பொறுப்பல்ல.

சாவு :—அப்படியா? இதோ நீ தேடியலையும் ஆத்மாவைக் கொண்டுவருகிறேன்.

அவன் :—ஐயையோ! சற்றுப் பொறு. தெரியாமல் சொல்லிவிட்டேன்.

சாவு :—அப்படி வா வழிக்கு!

அவன் :—ஒரு சந்தேகம். உயிருக்கு ஏன் பயப்படுகிறாய்?

சாவு :—ஆத்மாவை ஏன் வெறுக்கிறாய்?

அவன் :—பிணத்தின் அழிவற்ற நிலையை நிரூபிக்க!

சாவு :—இறப்பின் உண்மையைப் பரப்ப!

சாவு :—இரண்டும் நமது பொறுப்பு.

அவன்:—அறிந்தேன். இதோ, நான் சமாதானத்திற்குத் தயார்.

சாவு :—நானும். வா போவோம்.

அவன்—அப் பிணம்—இறந்து வீழ்ந்தான். சாவு அவனுடைய உயிரற்ற உணர்ச்சிகளை மூட்டை கட்டிக் கொண்டு புறப்பட்டது. அவ்வுணர்ச்சிகளின் நிழல் பட்ட இடங்களில் முள்ளும், கள்ளியும் துளிர்த்தன. சாவின் நெற்றி வியர்வை சொட்டிய இடங்களில் பாறைகள் முளைத்தன. அது பறந்து சென்ற வேகத்தைக் கண்டு வெய்யில் ஒதுங்கி நின்றது.

காற்றின் இறகுகள் சோர்ந்து மடங்கின. வானத்தின் உச்சாணிக் கிளையில் மௌனம் உட்கார்ந்து புலம்பிக் கொண்டிருந்தது.

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ், நார்த் பீச் ரோட், மதராஸ்.

தென்னிந்தியா வெங்கும் கிளை ஆபீசுகள்

அதிகார மூலதனம்	60,00,000—0—0
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	47,92,800—0—0
செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 100 ஷேர்களில் ரூ. 50 வீதம் செலுத்தப்பட்ட 20,000 ஷேர்கள்	10,00,000—0—0
ரூ. 100 ஷேர்களில் 10 வீதம் செலுத்தப்பட்ட 27,928 ஷேர்கள்	2,79,280—0—0
ரிஸர்வ் பண்டும், இன்னும் மற்ற பண்டுகளும்	18,60,147—0—0

செக்ரட்டரி: N. கோபால அய்யர்